
# காற்றுவெளி

ஜனவரி 2006



# காற்றுவெளி

தனிப்பட்ட சுற்றுக்கு மட்டும்.

## சிறப்பிதழ்

ஜனவரி
2006

ஆசிரியர்:
ஷோபா

தொடர்புக்கு:
**34 REDRIFFE ROAD
PLAISTOW
LONDON E13 OJX
Tel : 020 8586 7783**

காற்றுவெளிக்குள்...

இவ்வாண்டுக்கான இதழ்
தங்கள் கரங்களில்

பலரிடம் ஆக்கங்கள்
வழமைபோல் கேட்டிருந்தோம்.

ஒவ்வொரு இதழானதும்
ஆத்ம திருப்தி பற்றி
பேசிக் கொண்டாலும்

யாருக்காக...
யாரிடம் என்கிற
இதழ் பரிமாற்றம்,
விநியோகம் பற்றி
நிறையவே சிந்திக்க வேண்டியுள்ளது.

எனினும் தொடர்வோம்
நம்பிக்கையுடன்...

கவிதை இதழுடன் சந்திப்போம்.
-ஷோபா

வாழும்போது கலைஞர்களை கௌரவிக்க வேண்டும். தற்போது ஓரளவு நடைமுறைச் சாத்தியமாகி வருகிறது. அண்மையில் திரிகோணமலையின் பெருமகன் திரு.சிந்தி அமரசிங்கம் அவர்கட்கு பாராட்டுவிழா ஒன்றை இம்பூசர் அமைப்பு நடத்தியிருக்கிறது. திரு.சிந்தி அமரசிங்கம் அவர்கட்கு காற்று வெளியும் வாழ்த்து தெரிவிக்கிறது.

# தமிழின் சிறப்பு

- மதுநிதா.சுப்ரமணியம்.

தமிழே செந்தமிழே தெய்வமெனப்
போற்றுகிறோம் உன்னை நிதமும்
சுந்தரத் தமிழிலே இன்புற இன்னிசைத்து நின்னை
வந்தனை செய்து உந்தனைப் புகழ்பாடு

சிந்தனைக்குமினிய சங்கத் தமிழே நின்னை
எந்தன் மனம் உருகி உன் வசமாகி
எந்தையும் தாயுமாகிய தமிழே பிறவியில்
நான் நின் சேயானேன்.

முத்தமிழின் சுவைக்கு முக்கனிதான் ஈடானதோ
இத்தனைப் பெருமைக்கும் தீந்தமிழ் சுவைமீட்டுதே
சாத்திரங்கள் புகழும் சமயங்கள் துதிபாடும்
நித்திலமும் கவிபாடும் தமிழே உன்னை நிதமும்

பூமகளின் நாமகளின் நாவினிலே குடியிருந்தாயே
இகமதில் கரைகாணா இன்பக் கடலாம்
தமிழ் மொழி எனும் கடலே நிலமதில்
வலம் வந்து உலவிடும் செந்தமிழே நீதானோ

விலையில்லா தமிழருவி பாய்ந்து மனதில்
துலங்கி நிற்கும் தீந்தமிழின் புதுமைகளை
அகில உலகெல்லாம் உன் மொழியை
தயக்கம் இன்றி பயக்கும் மக்கள் நபமுடனே நாடினேன் நாளும்

அவனியில் உன்மீது அழியாது கண்டேன் மொழித்தாகம்
புவனியிலே ஈன்று தமிழ் மண்ணிலே நிதமும்
பவனிவரும் தமிழ் கீற்றை தென்றல் காற்றை
தான் எங்கும் பொங்குதமிழ் பொங்கவே சுவையாக

கத்தும் திரைக்கடல் கூட தத்திவரும் அலைபோல
சித்தம் நெகிழந்து சிங்காரமாய்ப் பக்தியுடன்
நித்தம் நித்தம் தமிழ் எனும் மொழியில்
வித்தகன் எனும் பித்தனாகி
தத்துவம் எனும் தமிழ்க்கடலில் முக்குளித்து
முத்தாக அரும் சொத்தாகக் கிடைத்தது தமிழே வித்தாக

மாநிலத்தில் நானிலத்தோர் தமிழ் புகழ் சிறந்திடவே
நாமத்தைத் தரணியில் கூவிடவே நானிலம்
எங்கெங்கும் தமிழினிமை எழிலாய்ப் பொழிந்திடவே
செந்தமிழின் மங்கலம் பொங்கி வழிந்திட வேண்டும் என்றும்.

# ஈழத்துப் பெருந்தகை
# கலாயோகி ஆனந்த குமாரசுவாமி

– அஜந்தா வெட்டிவேலுத்தம்

ஈழத்திருநாட்டில் தோன்றி உலகக் கலையறிஞர் வரிசையிலே நிரந்தர இடம் பெற்று விட்ட பெருமைக்குரியவர் கலா யோகி ஆனந்தக் குமார சுவாமி ஆவார். இந்தியக் கலைகள், உயரிய தத்துவக் கருத்துக்களை விளக்குவதற்கு எழுந்தவை. இந்தியப் பண்பாட்டின் பிரதிபலிப்பாக அமைந்தவை. இலங்கை, பர்மா, தாய்லாந்து, இந்தோனேஷியா முதலிய கிழக்காசிய நாடுகளனைத்தும் வியாபித்திருப்பவை. இவ்வுண்மைகளை உலகறியச் செய்த பெருமை ஆனந்தக் குமாரசுவாமியையே சாரும்.

இலங்கை - இந்தியக் கலைத்துறை பற்றி ஆராய விரும்பும் ஆர்வம் படைத்தோருக்கு அத்துறையில் அவராற்றிய தொண்டுகள் பேருதவி புரிகின்றன. இலங்கை - இந்தியக் கலை மலர்ச்சிக்கு அவராற்றிய பணி இந்து சமயப்பணி மறு மலர்ச்சிக்கு சுவாமி விவேகானந்தரும், இந்திய விடுதலைக்குக் காந்தியடிகளும் ஆற்றிய பணியைப் போன்றதாகும்.

யாழ்ப்பாணத்து மானிப்பாயிலே வாழ்ந்து, வாழையடி வாழையாகக் கல்வி கேள்விகளிலே சிறந்து, தேசத் தொண்டுக்குச் சமூகப்பணியும் ஆற்றி, பெரும் புகழ் படைத்த ஒரு குடும்பத்திலே தோன்றியவர்கள் ஆனந்தக் குமாரசுவாமி அவர்கள் ஆவார். தந்தையின் பெயர் சேர்.முத்துக் குமாரசுவாமி. இவர் அக்காலத்திற் பெரும் புகழ் படைத்த அரசியல்வாதி. தமிழர் பிரதிநிதியாக சட்ட நிரூபண சபையிலிருந்தவர். அவர் பன்மொழிப் பண்டிதர். தமிழ், ஆங்கிலம், சிங்களம், பாலி, முதலிய மொழிகளிற் புலமை பெற்றவர். அன்றியும் அவர் சிறந்த கலா விநோதர். சத்திய வந்தனான அரிச்சந்திரன் கதையை ஆங்கிலத்தில் நாடகமாகப் புனைந்து விக்டோரியா மகாராணி முன் நயம்பட விளக்கிப் பாராட்டுப் பெற்றவர். இத்தகைய திறமைகளைப் பெற்ற தந்தைக்கும், அவரது அருந்துணையாகிய ஆங்கிலேய மாதிற்கும் குமாரசுவாமி அவர்கள் 1977ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22ந் திகதி கொழும்பில் அவதரித்தார். ஆனந்தர் எட்டு மாதக் குழந்தையாக

இருக்கும்போது அவரது அன்னை உடல் நலக் குறைவு காரணமாக அவருடன் தம் தாயகமாகிய இங்கிலாந்துக்குச் சென்று அடைந்தார். அரசியற் தொடர்பு கொண்ட தந்தையார் அவர்களுடன் செல்ல இயலாத வராய்த் தமது பிரயாணத்தைத் தவிர்க்க நேர்ந்தது. ஆனால் இரண்டாண்டுகளில் எதிர் பாராத விதமாக அவர் இவ்வுலக வாழ்வை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

தந்தையை இழந்த ஆனந்தர் அன்னை யின் அரவணைப்பிலே வளர்ந்து திறமையு டன் கல்வி கற்று இலண்டன் பல்கலைக் கழகத் திலே நிலநூலிலே விஞ்ஞானமானி (B.Sc) பட்டம் பெற்றார். மாணாக்கனா யிருந்த காலத்திலேயே கலையார்வம் பெற்று விளங்கிய அவர் தாயின் உதவி யாலும் கலைவாணர் பலரின் தொடர்பினா லும் கலையறிவை வளர்த்துக் கொண்டார்.

அவர் சிறந்த நிலநூற் பண்டிதராக விளங்கியமையால் அவரை இலங்கையர சின் 1903ம் ஆண்டு தமது உலோக பரி பாலனத் துறைக்குத் தலைவராக நியமித்தார். அக்காலத்தில் அத்துறை பற்றி அரிதின் முயன்று ஆராய்ந்து அவர் வெளியிட்ட அறிக்கைகள் அவரது மேதாவிலாசத்தைக் காட்டின. அக் கட்டுரைகளின் உயர்வைக் கண்ட லண்டன் பல்கலைக்கழகம் அவருக்கு விஞ்ஞானக் கலாநிதி (D.Sc) எனும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

கலைப்பற்று நிறைந்த தந்தைக்கு மகனான ஆனந்தரின் உள்ளம் இயல்பாகவே கலைத் துறையில் ஈடுபாடு கொண்டது. அவ் ஈடுபாடு மேன்மேலும் வளர்ச்சிய டைந்து முதிர்வதற்கு ஈழத் திருநாடு நல்ல தொரு பயிற்சிக் களமாக அமைந்தது. உத்தி யோக முறையில் இலங்கையின் பல பாகங் களுக்கும் பிரயாணம் செய்த அவரை இலங் கையின் புராதனகால நாகரீகச் சின்னங்கள் கவர்ந்தழைத்தன.

இலங்கை மக்கள் சுதந்திரமாக வாழ்க்கை நடாத்தும் காலத்திலே பரிவோடுஞ் சிரத்தையோடும் படைத்துப் பேணிக் காத்த சிற்ப வடிவங்கள் மண் மூடிக் கிடப்பதை அவர் கண்டார். சிற்ப வளர்ப்புடைய பௌத்த விகாரைகளும் தாது கோபுரங் களும், கோயில்களும், அரண்மனைகளும் சிதைவடைந்து கிடப்பதை உற்று நோக்கி னார்.

குகைகளிலும், சுவர்களிலும் காணப் பட்ட வண்ண ஓவியங்கள் நிறம் மங்காது திகழ்வதைக் கண்டு மனம் பூரித்தார். அவ ரது மனத்தகத்து அடங்கிக் கிடந்த கலை யார்வம் ஊற்றெடுத்துப் பெருகத் தொடங் கியது. பதவிப் பற்று மனத்தை விட்டகல, கலைப் பற்று அங்கே குடி கொண்டது. பூர் வீக இலங்கையின் கலைச் சிறப்புக்களைப் பற்றியும், அக்காலச் சமய, சமூக அமைப்பு முறைகளைப் பற்றியும் ஆராய்ந்தறியத் தொடங்கினார். கண்டி அரசர் காலத்திலும் அதற்கு முன்னும் நாட்டிலே தோன்றிய அபூர்வ கலாசிருட்டிகளின் இயல்புகளை யும் இலக்கணங்களையும் பற்றிய விபரங்களைச் சேகரித்தார். அவைகளெல் லாவற்றையும் உலகறியச் செய்ய வேண்டும் என்னும் பேரவா அவரிடம் இருந்தது.

1907ம் ஆண்டு பதவி துறந்து, இங்கி லாந்து சென்ற அவர் தாம் சேகரித்த செய்தி களை ஆதாரமாகக் கொண்டு 'இடைக் காலச் சிங்களக் கலைகள்'' என்னும் பெயரிய நூலை வெளியிட்டார். இந்நூல் இடைக்கால இலங்கை மக்களின் கலை உணர்வை மாத்திரமின்றி ஆனந்தரின் கலைத் திறமையையும் உலகுக்கு அறிமுகப் படுத்தியது. அதன் பின் 'இந்தியச் சிற்பி" என்னும் நூலையும், 'இந்தியக் கலைகளின் நோக்கம்" என்னும் கட்டுரையையும் எழுதி வெளியிட்டார். இவ்விரண்டும் உலகக் கலை யரங்கிலே இந்தியக் கலைகள் சிறப்புச் செல் வாக்கும் பெறுவதற்குத் துணை புரிந்தன. அன்றியும் இந்தியாவில் ஒப்பற்ற கலை மலர்ச்சி ஏற்படுவதற்கும் உதவியளித்தன.

அதனால் 1910ம் ஆண்டில் அலகாபாத்தில் நடந்த அகில பாரதக் கண்காட்சியின் கலைப் பிரிவின் தலைவராக நியமிக்கப் பட்டார். அக் காலத்தில் இந்தியா முழுவதும் சுற்றுப் பிரயாணஞ் செய்து இந்தியக் கலை களின் பல பிரிவுகள் பற்றியும் பல ஆராய்ச்சி நடத்தினார். அவரது ஆராய்ச்சி முடிவுகள் கலையுலகிலே பரவியிருந்த இரு தவறான அபிப்ராயங்களை மாற்றின. புத்தர் சிலை, கிரேக்க முறையையொட்டி எழுந் தது என்ற அபிப்ராயம் மேலை நாட்டிற் பரவியிருந்தது. அன்றியும் இந்து மதச் சார் புள்ள ராஜபுத்திர ஓவியங்களுக்கு மொக லாய ஓவியங்களே வித்தாயமைந்தன என்ற கருத்தும் அக்காலத்தில் நிலவி வந்தது. இவையிரண்டினையும் தக்க சான்று காட்டி மறுத்து அவர் வெளியிட்ட நூல்கள் அவ ரது புகழை அகிலமெங்கும் பரவச் செய்தன. அதனால் அமெரிக்கர் 1919ம் ஆண்டிலே போஸ்ரன் நகரத்துக் கலைப் பொருட் காட்சி நிலையத்தின் கீழைத்தேயக் கலைப் பொருட் பகுதிக்குத் தலைவராக அவரை நியமித்தனர். **"சிவநடனம்"** என்னும் ஆங்கில நூலின் மூலம் நடராஜ வடிவத்தின் கலைச் சிறப்பையும் தத்துவ விளக்கத்தையும் உலக றியச் செய்தார். இதுவே அவர் இந்தியக் கலைத் துறைக்குச் செய்த தொண்டுகளைத் துக்கும் முடி மணியாக விளங்கியது.

ஆனந்தக் குமாரசுவாமி அவர்களின் கலையார்வம் பெரும் புகழ் பெற்றதோடு சீர்திருத்தப் பணியாளராகவும் விளங்கித் தாம் பிறந்த பொன்னாட்டுக்கு அரிய பல சேவைகள் செய்தார். அவர் இலங்கையில் பதவி வகித்த காலத்திலே **'இலங்கைச் சமூக சீர்திருத்தச் சபை"** என்னும் பெயருடைய கழகமொன்றினை நிறுவினார். இச்சபை யின் ஆதரவில் வெளி வந்த **"இலங்கைத் தேசிய சஞ்சிகை"**யின் ஆசிரிய பீடத்தி லமர்ந்து அரிய பல சமூக சீர்திருத்தக் கட்டு ரைகள் எழுதினார். அக்கட்டுரைகள் இலங்கை மக்கள் தம் பண்டைப் பெருமை யையுணர்ந்து தமது பண்பாட்டுக்கமைந்த வாழ்க்கையை நடத்தும்படித் தூண்டின. தேசிய உணர்வுக்கு வித்திட்டன.

அக்காலத்திலே யாழ்ப்பாணத்திலே தமிழ்ச் சான்றோராக விளங்கியவர்கள் இருவர். ஒருவர் மனேஜர் கைலாசப் பிள்ளை அவர்கள். மற்றவர் குமார சுவாமிப் புலவர் அவர்கள். அவ்விருவரது நன் முயற் சியால் யாழ்ப்பாணத்திலே தமிழ்ச் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. சங்க ஆரம்ப விழாவிற்கு ஆனந்தக் குமார சுவாமி அவர் களும் சமூகமளித்திருந்தார்கள். அவரைக் கௌரவிக்கும் பொருட்டு மனேஜர் கைலா சப் பிள்ளை அவர்கள் தமிழ்ச் சங்கச் சார் பாக அவருக்கு **"வித்தியா விநோதன்"** என்னும் பட்டத்தை வழங்கினார்கள்.

சிறந்த **"வித்தியா விநோதனும்"** சமூகப் பணியாளனும், உலகக் கலையறிஞனும், ஈழத் திருநாட்டின் தவப்புதல்வனுமாகிய கலாயோகி ஆனந்தக் குமார சுவாமி அவர்கள் 1947ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9ம் நாள் இறைவனடி சேர்ந்தார். அச் செய்தியை அறிந்த கலையுலகம் கண்ணீருகுத் தியது. கலா தேவியும் தன்னரும் புதல்வனை இழந்து சோர்வுற்றாள். ■


**நாளை விடியும்**

பல்துறை இருதிங்களிதழ்
4/7, முருகன் இல்லம்,
பாரதிபுரம் முதல் தெரு, கைலாசபுரம் (அ)
திருச்சி மாவட்டம், 620 014,
தமிழ்நாடு, இந்தியா.

**குளம்**

திங்களிதழ்
9(81சி), முனுசாமி நகர்,
கிழக்கு கந்தசாமிபுரம்,
உளுந்தூர்ப்பேட்டை - 606 107,
தமிழ்நாடு, இந்தியா.

# குறுக்கு வெட்டு

– பாரதி ஜிப்ரான்

வறண்டு கிடந்த ஆற்றை ஒட்டி நீண்டு கொண்டு போனது செம்மண் சாலை. அதன் ஒருபுறம் நதிக்கரை. இன்னொருபுறம் செடிகள் மண்டிக் கிடந்தன. இந்த ஊர் மக்கள் போக்குவரத்திற்குப் பயன்படுத்தும் ஒரே சாலை இதுதான். இந்தச் சாலை வாகனங்களின் தடங்களை விட மனிதர்களின் பாதச்சுவடுகளையே அதிகம் பதிவு செய்திருந்தது.

எப்போதாவது ஒரு டிராக்டர், சில மாட்டு வண்டிகள், ஒரே ஒரு பேருந்து இந்தச் சாலையில் பயணப்படும். ஆனால் தினமும் இரண்டு முறை தமிழ்ச செல்வனின் மிதி வண்டி இந்தச் செம்மண் சாலையில் தடம் பதிக்க மறப்ப தில்லை.

தமிழ்ச்செல்வன் பக்கத்தில் இருக்கும் ஆலையில் பணிபுரிகிறான். தினமும் காலையில் சென்று இரவுதான் வீடு திரும்புவான். அந்த ஆலை தினமும் இயங்குவதால் தமிழ்ச் செல்வனுக்கு வார விடுப்பு வெள்ளிக்கிழமை. அவன் படித்தது முதுகலை தமிழ். ஆனால் பணி செய்வதோ ஆலை கிடங் கில் கணக் கெடுக்கும் பணி.

வேலை நேரம் போக மற்ற நேரங்களில் தன் வீட்டின் அருகே இருக்கும் மாணவர்களுக்குப் பாடம் எடுப்பான். அவன் செலவிலேயே அவர்களுக்கு நோட்டுப் புத்தகம் கூட வாங்கித் தருவதுண்டு. நிறைய மாணவர்களுக்கு முற்போக்கான செய்திகளைச் சொல்லி அது தொடர்பாக நிறைய அறிவூட்டி யவன் தமிழ்ச் செல்வன்.

அன்று வெள்ளிக்கிழமை. இவனுக்கு விடுமுறை என்பதால் இப்பொழுது வேறு ஏதோ வேலை காரணமாய் வெளியே சென்று வருகிறான். வெய்யில் அதிகம் இல்லாத காரணத்தால் தன் மிதிவண்டியில் மெதுவாய் வந்து கொண்டிருந்த தமிழ்ச்செல்வனை பெருமாள் கோவில் வாசலில் சீட்டு விளையாடிக் கொண்டிருக்கும் எத்திராசும் அவனின் நண்பர்களும் கவனித்து விட்டனர். எப்போதும் இவர்கள் தமிழ்ச்செல்வனைத் திட்டுவதும் கேலி பேசுவதும் வழக்கம்.

அவர்களை தமிழ்ச்செல்வன் கடந்து போகும்போது சீனிவாசன் எழுந்து, "என்னன்னே சாப்டாச்சா...'' என்று கேட்க "இல்லை'' என்பதை ஒரு புன்னகையோடு தலை அசைவில் சொல்லி அவர்களைக் கடந்து சென்றான் தமிழ்ச் செல்வன்.

வேகமாய் சீனிவாசனைக் கீழே இழுத்து உட்கார வைத்து, "டேய் அவரு பெரிய மயிரு. அவரு சாப்டா என்ன சாப்புடலைன்னா என்ன ? உன் வேல மயிர பார்ரா...'' என அதட்டினான் எத்திராசு.

''டேய் அவரு நல்ல மனுசன்டா...'' மீண்டும் தமிழ்ச்செல்வனுக்கு வக்காலத்துக் குரல் கொடுத்தான் சீனு.

"க்கூம்... அவரு காந்தி, நீ போய் அவரு கால்ல உழுடா.. அவனுக்கு என்ன திமிர் இருந்தா பெருமா கோவில் திருவிழாவுக்கு காசு கேட்டப்ப இந்தக் கோவில் இருக்கிறதே தண்டம், இதுக்கு செய்யற செலவுல நம்மூர் ஸ்கூலுக்கு இன்னொரு கட்டடம் கட்டலாம்ன்னு சொல்லுவான்...''

ஆவேசமாய்ப் பேசி முடித்து ஒரு பீடியைப் பற்ற வைத்தான் எத்திராசு.

"டேய்... அவரு தீக்காடா. அவர் அப்படித்தான் பேசுவாரு. நம்மூர்லையே அவர்தான் அதிகம் படிச்ச வரு.'' சீனிவாசன் பேசிக் கொண்டிருக்கும் போதே அவனின் வாயை அடைத்தான் தாமோதரன்..

"டேய்... அவன நம்மூர்னு சொல்லாத. அவன் கீழ் தெரு.''

"அவன கேட்டா சாதியே இல்லேன்றான்'' தாமோதரன் முடிப்பதற்குள்,

"சாதி இல்லாமத்தான் பொழுது போய் பொழுது வருதா?'' வெங்கடேசன் கேள்விக்கு பின், "டேய் அவன் லூசுக் கழுதடா அவனப் போய் ஏண்டா தேவையில்லாம பேசறீங்க...'' என நந்தகோபால் தமிழ்ச் செல்வனுக்கு பைத்தியக்காரப் பட்டம் கொடுத்தான்.

எத்திராசுவின் பாதி பீடியை வாங்கி உள் இழுத்து புகையை வெளி விட்டபடியே நண்பர்களைப் பார்த்து பேச ஆரம்பித்தான் வெங்கடேசன்,"டேய் அவரு அன்னைக்கு இன்னா சொன்னாரு தெரியுமா... நம்ம பெருமா கோவில்ல மார்கழி மாசம் பாட்டு போட்டா பசங்க படிப்பு கெடுதாம்... அதனால பாட்டே போடக் கூடாதுன்னு சொல்றான் ஓய். சாமி பாட்டு கேட்டா பசங்க படிப்பு கெடுமா? ங்கோத்தா அவரு என்னைக் குன்னா நம்ம கையில மாட்டாமலா போவாரு...''

அனைவரும் பேசிக்கொண்டே சீட்டாட்டத்தில் கவனம் செலுத்தினர். இவர்களைப் பொருத்தமட்டில் தமிழ்ச்செல்வன் இந்த ஊருக்கு மட்டுமல்ல உலகில் உள்ள எந்த ஊருக்கும் தேவையில்லாதவன். இவர்களுக்குக் கடவுளை வணங்குபவன்தான் நல்லவன். கடவுள் நம்பிக்கையில்லாதவர்கள் எல்லாம் மனிதர்களே அல்ல. அல்லது அவர்கள் மூளை இல்லாதவர்கள் என்றுதான் சொல்லுவார்கள். இவர்களில் கல்லூரி செல்லும் நபர்களும் அடக்கம். சிலர் வேலைக்கும் செல்கின்றனர். சுயமாய்த் தொழில் செய்யும் நபர்களும் உண்டு. அனைவர்க்கும் மாலை அல்லது இரவு நேரங்களில் ஓய்வு கிடைக்கும். ஓய்வு அமையும்போது இந்தப் பெருமாள் கோவில் வாசலில் கூடுவார்கள். சீட்டு ஆடுவார்கள். புகை பிடிப்பார்கள். சம்பள நாள் மட்டும் மது அருந்துவார்கள். இவர்கள் இங்கே கூடி இப்படிச் செய்யும் பல வேலைகள் பொதுவாய் ஊர் மக்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. அதே நேரம் இவர்களை இங்கு யார் பார்த்தாலும் தவறாய் எதுவும் நினைக்க மாட்டார்கள். அதற்கு அடிப்படையாய் அமைந்த காரணம், இவர்கள் அனைவரும் இந்தக் கோவிலுக்கு மிகவும் வேண்டப்பட்டவர்கள். மார்கழி மாதக் காலை வழிபாடு முதல், வாரம் தோறும் நிகழும் சனிக் கிழமை வழிபாடுவரை இவர்கள்தான் அதிகம் பாடல் பாடுவார்கள், விளக்கு தூக்குவார்கள், குங்குமம் கொடுப்பார்கள். வழிபாட்டு ஊர்வல நேரங்களில் காவி உடை அணிந்திருப்பார்கள். சில நேரங்களில் பல பெண்கள் இவர்களின் பாதங்களைக் கழுவி விட்டு வணங்குவதும் உண்டு. இப்படி அவர்கள் வணங்கும் போது இவர்கள் தங்களைக் கடவுளாய் நினைத்து ஒரு விதமான ஆனந்தப் புன்னகை பூப்பார்கள் பாருங்கள் அப்படிப்பட்ட புன்னகையை, ஆனந்தத்தை, உழைப்பில் களைத்த யாரும் அடைந்ததாய்த் தகவல் இல்லை.

இவர்கள் அனைவரும் தமிழ்ச்செல்வனை வெறுப்பதற்கு பல சம்பவங்கள் உண்டு. போன ஆண்டு கூட இவர்களுக்கும் தமிழ்ச் செல்வனுக்கும் கைகலப்பு வரை சென்ற ஒரு சம்பவம் உண்டு.

அது சிலு சிலுவென பனி கொட்டிக் கொண்டிருந்த மார்கழி மாத அதிகாலை. ஊரில் உள்ள பெரும்பாலானோர் குளிருக்கு இழுத்துப் போர்த்திக் கொண்டு நிம்மதியாய்த் தூங்குவார்கள். ஆனால் மாணவர்களுக்கோ அது அரையாண்டுத் தேர்வு நேரம். அந்த நடுங்கும் குளிரில் சில மாணவர்கள் சில்லென்று தண்ணீரில் முகம் கழுவிக் கொண்டு பாடங்கள் படிக்கத் தொடங்குவார்கள். பனிபெய்யும் அதிகாலை, அவர்களைச் சூழ்ந்துள்ள குளுமை, எங்கும் நிரம்பி நிற்கும் அமைதி, இவையனைத்தும் மாணவர்களின் கவனத்தை பாடத்தை விட்டு விலக்காததாய் அமைந்தது. இந்தச் சூழலில் மாணவர்கள் நிறைய பாடங்களை நினைவில் அடக்கினர். ஆனால் திடீரென்று ஒரு நாள் பெருமாள் கோவிலின் உச்சியில் ரெண்டு ரேடியோ புனலைக் கட்டினர். மறுநாள் காலை நாலு மணி முதல் ஏழுமணி வரை அதில் வழிபாட்டுப் பாடல் ஒலிபரப்பானது. சத்த மென்றால் சத்தம் அனைவரையும் அலர வைக்கும் சத்தம். கண்ணா வா வா, கிருஷ்ணா வா வா என ஏதோ வழி பாட்டுப் பாடல்கள் பாடியது. இந்தச் சத்தம் தேர்வுக்குப் படிக்கும் மாணவர்களுக்கு இடைஞ்சலாய் அமைந்ததை யாரும் கண்டு கொள்ள வில்லை. ஆனால் அமுல் மகன் பூபதி தமிழ்ச் செல்வனிடம் இந்தப் பாட்டால் படிப்பு கெடுவதாய்ச்

சொன்னான்.

தமிழ்ச்செல்வன் அன்றிரவே பெருமாள் கோவில் நிர்வாகிகளிடம் இது தொடர்பாகப் பேசினான். அவர்கள் இதையொரு பெரும் பிரச்சனையாகவே கருத வில்லை. அதில் சிலர் சாமிப் பாட்டுதானே படிப்பு ஒன்னும் கெடாது என்றனர். தமிழ்ச்செல்வன் எவ்வளவோ அமைதியாய்ச் சொன்னான். பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் தேர்வு எழுதுகின்றனர் அவர்களின் எதிர் காலத்தைத் தீர்மானிப்பதே படிப்புதான். அந்தப் படிப்புக்கு இடையூறாய் இந்தப் பாட்டுச் சத்தம் உள்ளது என்றான்.

இது எதுவும் அவர்களுக்குப் புரியவில்லை. இந்தச் செய்தி கேட்டு எத்திராசு, பெருமாள், வெங்கடேசன், தாமோதரன் இன்னும் சிலர் ஓடி வந்தனர். தமிழ்ச் செல்வன் சொன்னதைச் சில பெருசுகள் சொல்ல அவர்களும் தமிழ்ச்செல்வனிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். ஒரு கட்டத்தில் அது முற்றிப்போய் கை கலப்பு வரை நீண்டு போனது. அதில் ஒருவன் தமிழ்ச் செல்வனின் சட்டையை இழுக்க அவன் சட்டை லேசாய்க் கிழிந்து சட்டையின் மேல் பொத்தானும் அறுந்தது.

தமிழ்ச்செல்வன் அவர்களில் தாமோதரனையும் வெங்கடேசனையும் தூக்கி எறிந்தான். அவன் கண்களில் கோபம் சுடர் விடத் தொடங்கியதைக் கண்டு சிலர் அவர் களைச் சமாதானம் செய்தனர். கீழே விழுந்த தாமோதரன் உடனே எழுந்து விட்டான். வெங்கடேசனால் எழ இயலவில்லை. அந்த இடத்தில் உடனே ஊர் கூடி விட்டது. தமிழ்ச்செல்வனுக்கு எதிராய் நிறைய குரல்கள் ஒலித்தாலும் பள்ளிக்குச் செல்லும் மாணவர்களின் குரல் அவனுக்கு ஆதரவாய் ஒலித்தது. அதிலும் காசியம்மா மகள் வீரலட்சுமி பட்டென்று சபை அதிரச் சொன்னாள். "ஏங்க... எங்களுக்கு படிப்புத்தான் சாமி... அதுக்கு எடஞ்சலா இருக்குற இந்த ரேடியோவும் வேணாம். இந்தக் கோவிலும் வேணாம்.'' இதைக் கேட்டு அனைவரும் அதிர்ந்தனர். காசியம்மா தன் மகளை அதட்டி வீட்டிற்கு இழுத்துச் சென்றாள்.

ஊர் கூடிய கோவில் முன் நீண்டு கொண்டே இருந்த சலசலப்பு பின் ஒருவாறு அமைதியானது. பின் பாட்டுச் சத்தம் குறைக்கப்படுவதாய் அவர்கள் சொன்னார்கள். தமிழ்ச்செல்வன் பாட்டே முழுவதும் போட வேண்டாம் என்பதில் உறுதியாய் இருந்தான். பின் கூட்டம் கலைந்து அனைவரும் அவரவர் வீட்டிற்குப் போனார்கள். மறுநாள் முதல் பாட்டுச் சத்தம் ஊர் அதிர ஒலிக்கவில்லை. இது நடந்து நான்கு நாட்களுக்குப் பிறகு அந்தக் கோபுரத்தில் இருந்த ரேடியோ புனலைக் காணவில்லை. அதைத் தமிழ்ச் செல்வன்தான் தூக்கியிருப்பான் எனச் சிலர் அவன் மீது குற்றம் சாட்டினார்கள். ஆனால் அதற்குத் தகுந்த ஆதாரம் எதுவும் இல்லாத காரணத்தால் அந்த விஷயம் அதோடு முடிந்து போனது.

ஆனால் தமிழ்ச்செல்வன்தான் குற்றவாளி என இன்னும் இவர்கள் நினைத்துக் கொண்டே இருக்கிறார்கள். அதனால்தான் தமிழ்ச் செல்வனைப் பார்க்கும் போதெல்லாம் அவனைத் திட்டித் தீர்ப்பது இவர்கள் வழக்கமாகி விட்டது.

ஆனால் இதைவிடவும் ஒரு முக்கியமான நிகழ்வு உண்டு...

இந்த எத்திராசு, தாமோதரன், வெங்கடேசன், பெருமாள் நால்வரும் ஏழு கன்னி கோவில் தெருவில் உள்ள வீடுகளில் பெருமாள் கோவில் திருவிழாவிற்கு நன்கொடை வசூலித்துக் கொண்டிருந்தனர். அனைவரின் கையிலும் ஒவ்வொரு நன்கொடைப் புத்தகம். அதற்கு மஞ்சள் குங்குமம் நான்கு பக்கத்திலும் தடவப் பட்டிருந்தது. தாமோதரன், பெருமாள் இருவரின் கைகளில் மட்டும் பணம் வைக்கும் கைப்பை இருந்தது. அவர்கள் கோதண்டம் வாத்தியார் வீட்டில் பணம் வசூலித்து விட்டு வெய்யில் அதிகம் இருந்ததால் அவர் வீட்டுத் திண்ணையில் அமர்ந்தனர். நாட்டு ஓடு வேயப்பட்ட கூரையின் கீழ் அகன்ற திண்ணை காற்று வரவும் அதிகம் இருந்தது. அங்கே அமர்ந்தவர்களுக்கு உடனே எழ முடியவில்லை.

அப்போது வேலைக்குச் சென்று திரும்பும் தமிழ்ச் செல்வன் வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் இவர்களுக்கு என்ன தோன்றியதோ தெரிய வில்லை. எத்திராசு முதலில் திண்ணையை விட்டிறங்கி மண் ரோட்டுக்கு வந்து தமிழ்ச் செல்வனின் மிதி வண்டியை நிறுத்தினான். தமிழ்ச் செல்வன் சைக்கிளை விட்டு இறங்கி நின்றான். அதற்குள் அங்கே இந்த மூவரும் வந்து சேர்ந்தனர்.

தாமோதரன் தன் கையில் இருந்த நன்கொடைப் புத்தகத்தை தமிழ்ச் செல்வனிடம் நீட்டினான். அதை வாங்கிப் பார்த்த தமிழ்ச் செல்வன் இது எதற்கு என கேட்கத் தொடங்கினான். அதற்குள்ளாகவே வெங்கடேசன் படபடவென சொல்லத் துவங்கினான்.

"நம்ம பெருமாள் கோவில்ல நாங்களெல்லாம் சேர்ந்து விழா எடுக்கப் போறோம். அதுக்குதான் நன்கொடை வசூலிக்கிறோம். உங்க கையில் என்ன இருக்கோ கொடுங்க... பாட்டுக் கச்சேரி உறியடி எல்லாம் நடத்துறோம்.''

அவன் பேசி முடிக்கும் வரை மௌனமாய் இருந்த தமிழ்ச் செல்வன் பாட்டுக் கச்சேரிக்கு எவ்வளவு செல வாகும் எனக் கேட்டான்.

"ஊ...ம். கச்சேரி பெரிய கச்சேரி. இருபதாயிரம் ரூபா. அப்புறம் உறியடி எல்லாம் சேர்த்து முப்பது, நாற்பதாயிரத்த தாண்டும்...'' எனப் பெருமையாகச் சொன்னான் தாமோதரன். "பட்டாசு மட்டும் இருபதா யிரத்துக்கு வாங்குறோம். சுத்துப் பட்டு எந்த ஊரும் நம்ம சத்தத்தக் கேட்டுத் தூங்கக் கூடாது.''

வெயில் அதிகமாய்க் காய்ந்து கொண்டிருந்தது. தமிழ்ச் செல்வன் தன் மிதிவண்டியை தள்ளிக் கொண்டு நிழல் நிரம்பிய கோதண்டம் வீட்டுத் திண்ணை நோக்கிச் சென்றான். அங்கே தன் மிதி வண்டியை நிறுத்தி விட்டு திண்ணையில் அமர்ந் தான். தமிழ்ச் செல்வனைத் தொடர்ந்து வந்த அவர் களும் அங்கே அமர்ந்தனர். சாத்தியிருந்த கதவைத் தட்டி கோதண்டனின் மனைவி காவேரியக்கா விடம் தண்ணீர் கேட்டான் தமிழ்ச் செல்வன். காவேரியக்கா பெரிய சொம்பில் தண்ணீர் கொண்டு வந்து வைத்து விட்டு மீண்டும் உள்ளே போய் விட்டாள். தண் ணீரை எடுத்துப் பருகியபின் சொம்பை நீட்டினான். அவர் கள் தண்ணீர் வேண்டாம் என்றனர். அந்தத் திண ணையில் வசதியாய்ச் சாய்ந்து அமர்ந்து கொண்டான் தமிழ்ச் செல்வன்.

அவர்களுக்கு இவன் என்னவோ பேசப் போகி றான் என்பது மட்டும் தெளிவாய்த் தெரியவே அவர் களும் திண்ணையில் ஆங்காங்கே அமர்ந்தனர். தமிழ்ச் செல்வன் தாமோதரனைப் பார்த்துக் கேட்டான். "நம்மூர்ல ஒரு ஸ்கூல் இருக்கு தெரியுமா" ?...

" தெரியும்''

"அது எத்தினியாவது வரைக்கும் இருக்குன்னு தெரியுமா ?"

"பத்தாவது வரைக்கும்...''.

"எத்தனை பொம்பளப் புள்ளைங்க படிக்கிறாங் கன்னு தெரியுமா ? எத்தனை பொம்பள டீச்சர்னு தெரியுமா ?''

தமிழ்ச்செல்வனின் கேள்வி அனைவரையும் தூக்கி வாரிப் போட்டது. உடனே கோபமாய்ப் பெருமாள் சொன் னான், "ஏம்பா நாங்க நன்கொடை கேட்டா நீ எங்களக் கூப்பிட்டு வெச்சுக்கிட்டு நீ பாட்டுக்கும் தேவையில்லாம ஏதேதோ பேசுறியே.''

பெருமாள் முடிப்பதற்குள் தாமோதரன் மற்றவர் களைப் பார்த்துச் சொன்னான் "ஏம்பா நான் அப்பவே சொன்னேன்ல. இந்தப் பைத்தியக்காரன் கிட்ட எதுவும் கேட்க வேண்டாம்னு. இப்பப் பாரு தேவையில்லாம என்னன்னமோ பேசுறான்."

அவர்கள் பேச்சு அடங்கியது. அவர்களைப் பார்த்து மிகவும் அமைதியாய்ச் சொன்னான் தமிழ்ச்செல்வன்.

"நான் ஒன்னும் தேவையில்லாம பேசல. நம்மூர் ஸ்கூல்ல நூத்துக்கணக்கா பொம்பளப் புள்ளைங்க இருக்கு. டீச்சருங்க இருக்காங்க. ஆனா அவங்க நிம்ம தியா ஒன்னுக்குப் போகக் கூட மறப்பான இடம் இல்ல தெரியுமா ?''

"நீங்க பாட்டுக்கும் கோவில் திருவிழா... பாட்டுக் கச்சேரின்னு முப்பது நாப்பது ஆயிரம் செலவு செய்றீங் களே அந்தக் காசுல பெருசா கக்கூஸ், பாத்ரூம், கட்டி விட்டா அவங்களுக்கு ரொம்ப உபயோகமா இருக்கும். அவங்களும் நிம்மதியா இருப்பாங்க. அதான் சொன் னேன். பொது மக்கள் கிட்ட காசு வாங்கி வீணா விரயம் பண்ணாதீங்க.''

தமிழ்ச்செல்வன் சொல்லி முடிப்பதற்குள் அவர் கள் அனைவருக்கும் கடுமையான கோபம் வந்து விட்டது.

ஒருவன் தமிழ்ச்செல்வனின் சட்டையை இழுத்து, "ஏண்டா ங்கோத்தா... நாங்க சாமி பத்தி, திருவிழா பத்தி பேசினா... நீ பாட்டுக்கும் பாத்ரூம், கக்கூஸ்னு பேசுறியா ? அடங்க திருட்டுக் ...'' என வார்த்தையை நீட்டினான். கடுமையான கோபத்தின் உச்சிக்குப் போன தமிழ்ச் செல்வன் அவனின் கையைத் தட்டி விட்டு விட்டு அழுத்தமான குரலில் சொன்னான்.

"ஏய்... உன் தேவையில்லாத திருவிழாவவிட.... பாட்டுக் கச்சேரியவிட... நம்மூர் பொம்பளப் புள்ளைங்க நிம்மதியா ஒன்னுக்குப் போகப் பயன்படுதே அந்தக் கக்கூஸ் பாத்ரூம்தான் பெருசு. இன்னும் எவ்வள காலத்துக்குத்தான் திருவிழா கச்சேரி மயிரு மட்டன்னு மக்கள் பணத்தை வீணாக்கப் போறீங்க ?''

தமிழ்ச்செல்வன் பேசும்போதே அவனின் முதுகில் பெருமாள் ஒரு குத்து விட்டான். கொஞ்சம் நிலை தடு மாறிய தமிழ்ச்செல்வன் பின் சுதாகரித்துக் கொண்டு பெருமாளை கன்னத்தில் ஒரு அறை விட்டு தூக்கி யெறிந்தான். அவர்கள் அனைவரும் தமிழ்ச் செல்வ னைத் தாக்கத் தயாராகி விட்டனர். தமிழ்ச் செல்வனும் அவர்களை விடக் கூடாது என்ற முடிவுக்கு வர... அங்கே சத்தம் அதிகமானது. வீட்டின் உள்ளிருந்து கோதண்டம், காவேரியக்கா மற்றும் அந்த வழியே சென்ற தேவராஜ் வாத்தியார், இன்னும் சிலர் அங்கே கூடி விட்டனர். கூட்டம் அவர்களைச் சமாதானம் செய்தது. தமிழ்ச் செல்வன் தன் மிதி வண்டியை

எடுத்துக் கொண்டு புறப்பட்டான். கீழே விழுந்து கிடந்த பெருமாளை எழுப்பி நடக்க வைத்து அழைத்துச் சென்றனர். இந்த நிகழ்வுக்குப் பின்னர் அவர்களுக்கு மேலும் தமிழ்ச் செல்வன் மீது வெறுப்பு வளர்ந்தது. அவர்கள் மட்டுமின்றி அவர்களின் தெருவில் வசிக்கும் சிறுவர்கள் கூட தமிழ்ச் செல்வனை கேலி கிண்டல் பேச ஆரம்பித்தனர். அவர்களின் தெருவை ஒட்டி தான் பேருந்து நிறுத்தமும் முக்கியச் சாலையும் இருப்பதால் தினமும் அந்தப் பாதையைக் கடந்துதான் தமிழ்ச்செல்வன் செல்ல வேண்டும். ஆகையால் அவன் வரும் போதும் போகும் போதும் சிறுவர்களை விட்டு கேலி பேச வைத்தனர். இவை எதையும் தமிழ்ச்செல்வன் பெரிதாய் எடுத்துக் கொள்ளவில்லை.

இவையெல்லாம் விட தமிழ்ச்செல்வனுக்கு பெரிதாய் தலை வலியாய் அமைந்தது அவன் வீட்டின் அருகே இருக்கும் ஏழு கன்னி கோவில்தான். வாரா வாரம் அந்த கோவிலில் வெள்ளி, ஞாயிறு ஆகிய இரு தினங்களுக்கும் ஆடுகள் பலியிடப்படும். பலியிடலுக்கு ஏதேனும் வேண்டுதல் காரணமாய் அமையும்.

கடந்த ஆடி மாதம் மூன்றாம் ஞாயிற்றுக் கிழமை வேலைக்குச் சென்று திரும்பும் வழியில் கன்னி கோவிலில் கூட்டம் அதிகம் இருக்கவே தன் மிதி வண்டியை நிறுத்தி விட்டு கீழே இறங்கிய தமிழ்ச் செல்வன் கூட்டத்தை விலக்கி உள்ளே பார்த்தான். நன்கு வளர்ந்த ஒரு வெள்ளாட்டை பலியிடுவதற்காகத் தயாராய் இருந்தனர். அந்த இடமே ஆடுகளின் ரத்தத்தால் சிவந்து இருந்தது. அந்த ஆட்டின் பின்னங்கால்களை ஒருவன் பிடித்திருந்தான். ஆட்டின் கழுத்தில் இருந்த கயிறை ஒருவன் பிடித்திருந்தான். அந்த ஆட்டின் நெற்றியில் பொட்டு, கழுத்தில் மாலையிட்டு குளிப்பாட்டப்பட்டும் இருந்தது.

அந்த ஆட்டால் ம்மே...ம்மே... என சத்தம் கூட அதிகமாகத் தர இயலவில்லை.

கோவில் சின்ன பூசாரி சுப்ரமணி கையில் ஒரு பெரிய அருவாள். அவர் ஆட்டின் கழுத்தை தடவி விட்டார். அவர் காலின் கீழ் இருந்த மணசட்டியின் நீரை ஆட்டின் தலையில் தெளித்தார். பின் தன் கையில் இருந்த அரு வாளை ஓங்கி வெட்டினார். ஓரே வெட்டில் ஆட்டின் தலையும் உடலும் தனித்து விழுந்தது. இப்போது தலையில்லா ஆடு ரத்தம் பீறிட்டு கொட்டக் கொட்ட தரையில் கிடக்கிறது. அதன் கால்கள் அடித்துக் கொண்டு துடித் துடித்த ஆடு அந்தத் தரையில் ஒரு வட்டமடித்தது. சிலரின் ஆடைகளில் ரத்தம் கலந்த மணல் தெறிக்கவே கொஞ்சம் விலகி நின்றனர். ஆனால் அதை வேடிக்கை பார்க்கும் குழந்தைகள் அது எதையும் பொருட்படுத்தாமல் அப்படியே நின்று அந்த நிகழ்வை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அந்த ஆட்டைத் தொடர்ந்து அடுத்தடுத்து மேலும் இரண்டு ஆடுகள் பலியிடப்பட்டன. எப்போதும் புழுதி மண்டிக் கிடக்கும் அந்தத் தரை இப்போது ரத்தத்தால் இறுகிக் கிடந்தது. கான்கிரீட் தரைபோல.

கோவிலில் மணி அடிக்கும் ஓசை சிலரின் காதுகளைப் பொத்தும் அளவு கடுமையானதாக இருந்தது. அந்த இடத்தில் தொடர்ந்து இருக்க இயலாததால் வீடு நோக்கி விரைந்தான் தமிழ்ச்செல்வன். இந்த ஏழு கன்னி கோவில் முக்கிய சிறப்பே பலியாடுகள்தான். மற்ற நாட்களில் யாராலும் அதிகம் கவனிக்கபடாத பகுதி இது. ஆயினும வெள்ளி, ஞாயிறு மற்றும் ஆடி மாதம் முழுவதும் சிறப்புடன் காணப்படும் இந்தக் கோவில்.

தமிழ்ச்செல்வன் கோவில்களில் ஆடுகளை பலியிடுவதைத் தடைசெய்ய எவ்வளவோ முயன்றான். இயல வில்லை. ஒரு முறை சுப்ரமணியத்திடம் பேசினான். அவர் பட்டென்று ஒரு வார்த்தை சொன்னார்.

"ஏம்பா கவர்ன்மெண்டே என்னென்னமோ சட்டமெல்லாம் போட்டு தடை செய்யப் பார்த்து முடியாமல் தானே வாபஸ் வாங்கிச்சி..'' என ஏளனச் சிரிப்போடு சொல்லி முடித்து ஒரு பீடியைப் பற்ற வைத்து புகைக்க ஆரம்பித்தார். அவர் புகையை உள்ளிழுத்து வெளிவிடுவதற்குள் அவரிடம் தமிழ்ச்செல்வன் மெதுவாய்ப் பேச ஆரம்பித்தான்.

"அண்ணே ஆடு வெட்ட அரசாங்கம் தடை போட்டுச்சே... அது தப்பு. இதெல்லாம் மக்களோட உரிமை. உணர்வு. இதல தலையிட அரசாங்கத்திற்கு எந்த அதிகாரமும் இல்ல. ஆனா சில தவறுகளை மக்களே உணர்ந்து திருத்திக்கனும் இதெல்லாம் அவங்கவங்களே பார்த்து திருந்தனும். இதோ பாருங்க... கறி தின்ன நினைக்கிறவன் ஆட்ட எங்கையாவது போய் வெட்டித் தின்ன வேண்டியதுதானே. நல்லது நடக்கும்னு இவன் கோவில்ல கெடா வெட்டறதனாலதான் அங்கங்க கிறுக்கு பிடிச்ச சாமியாருங்க, மந்திரவாதிக் கழுதைங்க எல்லாம் நரபலின்னு சின்னச் சின்ன குழந்தைகள எல்லாம் பலியிடுறான். இவன் சாமி முன்னாடி கடா வெட்டற மாதிரி அவன் குழந்தைகளை வெட்டறான். பசிக்காக எத்தனை மாட்ட ஆட்ட வெட்டினாலும் தப்பில்ல. ஆனால் நேர்த்திக் கடன், வேண்டுதல்னு ஒரு உயிரை பலியிட்டாலும் தப்பு. அண்ணே இதெல்லாம் பார்த்து பழகற குழந்தைகளுக்கும் பலி கொடுத்தா போதும் வாழ்க்கைல ஜெயிச்சுடலான்னு

தப்பா நினைச் சிட்டாங்கன்னா அடுத்த தலைமுறை யில ஒவ்வொரு கோவில்லையும் மனுசன் தலை தொங்கனாலும் ஆச்சரியப் படறதுக்கில்ல. அதான் சொல்றேன். இனி மேலாவது நம்மூர்ல இதெல்லாம் வேணாம்.

தமிழ்ச்செல்வனின் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்த சுப்ரமணி பீடி இழுக்க மறந்து விட்டார். இழுக்காத தால் பீடி அணைந்து விட்டது. மீண்டும் பீடியைப் பற்ற வைத்தார். புகையை நன்றாக இழுத்து வெளியே விட்டார். பீடியை ஒரு பார்வை பார்த்து விட்டு மீண்டும் இழுத்து வானத்தைப் பார்த்து புகை விட்டார். தமிழ்ச் செல்வன் இன்னமும் பொறுமை இழக்காமல் மீண்டும் அவரிடம் பேச ஆரம்பித்தான். அவன் ஏதோ ஒரு வார்த்தை சொல்ல நினைப்பதற்குள்.

"இதோ பார் செல்வம், நீ நம்ம பையன். ஏதோ நம்ம மக்கள்ளயே அதிகமா காலேஜ் வரைக்கும் போய் படிச்ச பையன்... நல்லதா நாலு வார்த்த பேசுவேன்னு உங்கிட்ட உட்கார்ந்தா நீ சாமிய பழி சொல்ற. இது நமக்கு சரி படாது.. எதுனா பேங்க்ல லோன் கீன் வாங்க வழி சொல்லுவியா? அத விட்டுட்டு ஆட்ட வெட்டாத அப்படி இப்படின்னு பேசற.. வேண்டாம் இனி யார் கிட்டேயும் இப்படி யெல்லாம் பேசாத. பைத்தியக்காரப் பையன்னு நினைச் சுக்கப் போறாங்க.'' பேசி முடிச்ச சுப்பிரமணி எழுந்து நடந்தார். அவர் சென்ற பின்னும் இருட்டும் வரை அந்த இடத்தை விட்டு நகராமல் அமர்ந்திருந்த தமிழ்ச்செல்வன் ஏதேதோ யோசனைக் குப்பின் இரவுதான் வீடு திரும்பினான். அதற்குப்பின் சுப்ரமணியிடம் இது தொடர்பாக இதுவரை எந்தப் பேச்சும் வைத்துக் கொள்ளவில்லை.

இன்றும் இந்தக் கோவிலில் பலி ஆடு நிகழ்வு சிறப்பாய் நடந்ததை தமிழ்ச்செல்வன் கவனித்தான். மக்கள் கூட்டம் கூட்டமாய் நின்று கொண்டு ஆடு களை வெட்டு வதைக் கண்டு களித்தனர். சில குழந் தைகள் அழுவதையும் தமிழ்ச் செல்வனால் பார்க்க முடிந்தது. ஆனால் இப்போது அவன் அதைப் பொருட் படுத்தாமல் தன் மிதி வண்டியை வீடு நோக்கி வேக மாய் மிதித்தான். வெயிலில் வந்த களைப்பால் வீட்டு வாசலிலேயே மிதி வண்டியை நிறுத்தி விட்டு கிணற் றடிக்குக் குளிக்கப் போனான். குளித்தபின் மதிய உணவு உண்டான். அவனுக்குப் பிடித்தமான சங்கரா மீன் குழம்பு என்ற போதும் இன்றேனோ அவனால் சரியாய்ச் சாப்பிட இயலவில்லை. சாப்பாட்டை முடித்த கையோடு பாயை எடுத்துக் கொண்டு வீட்டின் பின்புறம் உள்ள புளிய மர நிழலில் உறங்கப் போனான். இந்தக் கோடையிலும் புளிய மர நிழல் குளுமையானதாய் இருக்கவே படுத்தவுடன் உறக்கம் அவனை தழுவிக் கொண்டது.

அன்று மாலை, காலை முதல் கோவிலில் பூஜை செய்தும், கிடா வெட்டியும் கிடைத்த காசில் பிராந்தியும், குப்பத்தா கடையில் வறுத்த கறியும், அவித்த முட்டை யில் மிளகுத் தூள் போட்டும் வாங்கிக் கொண்டு ஆல மர மேடைக்கு வந்தான் சுப்ரமணி. முன்பெல்லாம் உள்ளூரில் சாராயம்தான் கிடைக்கும். பிராந்தி போன்ற உயர்ந்த மது வகைகள் வாங்க வேண்டுமென்றால் நகரத்திற்குத்தான் செல்ல வேண்டும். இப்போதெல் லாம் அவ்வளவு சிரமம் இல்லை. டாஸ்மாக் கடை திறப்புவிழா இந்த ஊரிலும் நடைபெற்றதால் இவர் களுக்கு இப்போது பயணச் செலவு மிச்சம்.

ஆலமர மேடையில் தான் வாங்கி வந்த பொருட் களை ஒவ் வொன்றாக எடுத்து வைத்தான் சுப்ரமணி. பிராந்தி, வறுத்தக்கறி, மிளகுத் தூள் தூவிய அவித்த முட்டை, டம்ளர், குளிர்ந்த தண்ணீர் பாக்கெட், பிராந்தி பாட்டிலின் மூடியை ஒரு தட்டு தட்டி திறந்து டம்ள ரில் பாதியளவு ஊற்றினான். பின் தண்ணீர்ப் பையை ஒரு மூலையில் கடித்து டம்ளரில் தண்ணீரைப் பீய்ச்சி அடித்தான். பிராந்தியில் விழுந்த தண்ணீர் நுரைபொங்க மேலே வந்தது. வறுத்த கறி இருந்த வாழை இலையின் மட்டையைப் பிய்த்து எடுத்து பிராந்தி உள்ள டம்ளரை ஒரு கலக்கு கலக்கினான். மேலும் நுரை பொங்கியது. பொங்கிய நுரை அடங்கிய பின் கண்ணை மூடிக் கொண்டு ஒரே மூச்சில் ஒரு டம்ளர் பிராந்தியைக் குடித்து முடித்தான். பின் வறுத்த கறியையும், முட்டையையும் ருசி பார்த்துவிட்டு தன் இடுப்பில் இருந்த பீடியைப் புகைக்கத் துவங்கினான்.

உறக்கம் கலைந்த தமிழ்ச்செல்வன் முகம் கழுவிக் கொண்டு வீட்டை விட்டு வெளியே வந்தவன் ஆலமர மேடையில் சுப்ரமணி அமர்ந்திருக்க அவரை நோக்கி நடந்தான்.

இப்போது தான் வாங்கி வந்த அனைத்தையும் காலி செய்து விட்டு போதையின் உச்சியில் இருந்தார் சுப்ரமணி.

தமிழ்ச்செல்வனைப் பார்த்தவுடன் பெருத்த சிரிப் போடு தன் அருகே வந்து அமரும்படி சைகை காட்டினார். தமிழ்ச் செல்வன் அவருடன் உட்கார்ந் தான். சுப்ரமணியத் திடம் மெல்லப் பேச ஆரம்பித்தான்.

''என்னண்ணே இன்னும் இந்த பலியிடரதை நிறுத்தாம இருக்கிங்க. சாமி கோவில், நேர்த்திகடன், வேண்டுதல், எதுவுமே தேவையில்லாததுதான். நீங்க பார்த்து சொன்னா நம்ம மக்கள் திருந்துவாங்க...''

போதையின் உச்சியில் இருந்த சுப்ரமணி, "அட நீ யார்ரா பைத்தியகாரப் பய.. சாமி வேணாம், கோவில் வேணான்னு சொலற. டேய்.. நாளனைக்கு ஞாயிற்றுக் கிழமை. எம் மச்சான் ஏழு கடா வெட்றான். நேரம் இருந்தா நீ வா.. நல்லா துன்னுட்டுப் போ... சும்மா இது போல புத்தி கெட்டத்தனமா எதுவும் பேசாத போ... போ...''

என சத்தமாய்ச் சொல்லித் தள்ளாடி அந்த மேடையில் சாய்ந்தார் சுப்ரமணி. அவரின் நிலை கண்ட தமிழ்ச் செல்வன் அவரிடம் பேசிப் பயனில்லை என வீட்டுக்குக் கிளம்பினான்.

மறுநாள் சனிக்கிழமை. இரவு ஆலையில் வேலை முடித்து தன் சைக்கிளில் வீடு நோக்கி வந்து கொண்டிருந்தான் தமிழ்ச் செல்வன். மின் விளக்குகள் இல்லாததால் இருண்டு கிடந்தன தெருக்கள். வண்டுகளின் சப்தத்தைத் தவிர ஊரில் வேறு எந்த ஓசையும் கேட்கவில்லை. இருட்டில் யார் மீதாவது வண்டியை இடித்து விடப் போகிறோம் என்பதறாக மணி அடித்த வாறே சைக்கிளை ஓட்டி வந்தான்.

ஊரில் மேல் தெருவைத் தாண்டி தன் வீடிருக்கும் ஏழு கன்னி தெருவில் அவன் சைக்கிள் நுழைந்தது. அந்த ஏழு கன்னி கோவில் வாசலில் ஒரு டிராக்டர் நின்றிருந்தது. அதன் பின்பகுதியில் ஆடுகள் கட்டிப் போடப்பட்டிருந் தன. அவைகள் காட்டு இலைகளைத் தின்று கொண்டிருநதன. தமிழ்ச்செல்வன் தன் சைக்கிளை நிறுத்தி ஆடுகளைக் கவனித்தான். அங்கு ஏழு ஆடுகள் இருந்தன. அதில் நான்கு மட்டும் தான் பெரிய கிடா. மீதம் மூன்று சின்னக்குட்டிகள். ஆடு கிடைக்காத நிலையில் நாளை பலியிட இந்தக் குட்டிகளையும் கொண்டு இங்கே கட்டி வைத்திருக் கின்றனர் என்பதை தமிழ்ச் செல்வன் எளிதாய் உணர்ந்து கொண்டான். மூன்று குட்டிகளில் ஒன்று நல்ல வெள்ளை. மீதம் இரண்டும் கருப்பு வெள்ளை கலந்திருந்தன. அந்தக் குழந்தைத் தனம் மாறாத ஆட்டுக் குட்டிகள் தமிழ்ச் செல்வனை ஏக்கமாய்ப் பார்த்தன. நாளை தலை வெட்டப்பட்டு உடல் துடி துடிக்க இறந்து போகும் ஆடுகள் இவை என்பதை நினைத்துப் பார்த்த தமிழ்ச் செல்வனால் அங்கே நிறக முடியவில்லை. தன் சைக்கிளை மிதித்து வீடு சென்றான்.

வீட்டில் அம்மா அவனுக்கான உணவை எடுத்து வைத்து விட்டு தூங்கிக் கொண்டிருந்தாள். மொச்சை கத்தரிக்காயோடு சேர்ந்த கருவாட்டுக் குழம்பின் மணம் அவனின் பசியை மேலும் தூண்டியது. அதனால் வேக வேகமாய்க் குளித்துவிட்டு சாப்பிட அமர்ந்தவனுக்கு சாப்பிட மனமில்லை. மனமெங்கும் அந்த ஆட்டுக் குட்டிகள் நிரம்பி இருந்தன. சாப்பிடாமல் சோற்றில் தண்ணீர் ஊற்றி விட்டு படுக்கைக்குப் போனான். அப்போதும் அவனால் உறங்க முடிய வில்லை. அவனை ஆட்டுக் குட்டிகளின் நினைவு முட்டியது. புரண்டு புரண்டு படுத்தவன் எழுந்து தன் மிதிவண்டியில் பெரிய அன்னக் கூடையொன்றை கட்டினான். மிதிவண்டியை எடுத்துக் கொண்டு கோவிலுக்குச் சென்றான். அங்கே அனைவரும் நல்ல உறக்கத்தில் இருந்தனர். ஊர் முழுவதும் நல்ல அமைதி நிரம்பி இருந்தது. பனிக்காற்று வீசியதால் அனைவரும் இழுத்துப் போர்த்தி தூங்கிக் கொண்டிருந்தனர். டிராக்டர் பின்புறம் கட்டியிருந்த ஆடுகளில் அந்த மூன்று குட்டிகளை மட்டும் அவிழ்த்து தன் மிதி வண்டி யில் இருந்து அன்னக்கூடையில் வைத்துக் கட்டினான். ஆனால் ஆட்டுக் குட்டிகள் எதுவும் பெரு சாய் சத்தம் போடவில்லை. மிதிவண்டியோடு வேக மாய் நகர்ந்தான் தமிழ்ச்செலவன்.

பேருந்து நிறுத்தம் உள்ள சிமெண்ட் ரோடுவரை தன் மிதி வண்டியைத் தள்ளிக் கொண்டு வந்தவன் இப்போது வண்டியில் ஏறி அமர்ந்து வேகமாய் ஓட்டி னான் ஆற்றங்கரையை நோக்கி. அவன் ஆற்றங் கரையை வந்தடைந்த போது நேரம் எப்படியும் அதி காலை இரண்டு இருக்கும். மிதிவண்டியை நிறுத்தி விட்டு அந்தக் கூடையைத் தூக்கித் தன் தலையில் சுமந்தபடி தண்ணீர் இல்லாத அந்த ஆற்றைக் கடந் தான். ஆற்றின் மறுகரையில் உள்ள மலையடிவாரக் காட்டில் அந்த ஆடுகளை அவிழ்த்து விட்டான். அவை ம்மே.. ம்மே.. எனக் கத்தியபடி சுதந்திர மாய் ஓடின.

தன் மிதிவண்டியை எடுத்துக் கொண்டு வீடு திரும்பிய தமிழ்ச்செல்வன் இப்போது நிம்மதியாய்த் தூங்கினான்.

காலை ஊரெங்கும் பெரும் சலசலப்பு. பலி ஆடுகள் திருடு போனதுதான் அந்தச் சல சலப்புக்குக் காரணம்.. ஒருவர் சாமியாடினார். சாமி குத்தம் ஊருக்கே கெடுதல் என்றெல்லாம் பொய் சொன்னார்.

தமிழ்ச்செல்வன் நிம்மதியாய் உறங்கி எழுந்தான். அவன் வீட்டின் முன் ஒரு கூட்டம் வந்து அவனை அழைத்தது. தமிழ்ச் செல்வன் வெளியே வந்தவுடன் இவன்தான் ஆட்டத் தூக்கிட்டுப் போனான் என ஒரு குண்டான மனிதன் தமிழ்ச் செல்வனைப் பார்த்து தன் கையை நீட்டினான். அந்தக் கூட்டத்தில் இருந்து இப் போது பெரும் சப்தம். "டேய்... இவன் திருடன் தாண்டா.." என்று கூறியபடி ஒருவன் தமிழ்ச் செல்வ

னின் பனியனை இழுத்தான். அடர்ந்த மீசை கொண்ட ஒருவன் தமிழ்ச் செல்வனின் முன் தலைமுடியை இழுத்தபடி, "டேய் நேத்து ராத்திரி எம் மச்சான் ஒன்னுக்குப் போவக் கதவத் திறந்தப்ப நீதான் சைக்கிள்ள ஆட்டுக் குட்டிகளைக் கட்டிக்கிட்டு போனியாமே?" அவனைச் சுற்றி எல்லா மனிதர்களும் கேள்வி எழுப்ப, எதையும் மறுக்காமலும், மறைக்காமலும் ஒப்புக் கொண்டான் தமிழ்ச்செல்வன்.

இந்தச் செய்தி கேட்டு, எத்திராசும் அவன் நண்பர்களும் ஓடி வந்தனர். அவர்களும் தமிழ்ச்செல்வனைத் திருடன் என சத்தமாய்ச் சொன்னார்கள். பெருமாள் கோவில் ரேடியோ புனல், மாணிக்கம் வீட்டு எருது மாடு, ஆண்டாள்வீட்டில் இருந்து சைக்கிள் எல்லாம் தூக்கியது இவன்தான் எனப் பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன தமிழச் செல்வன் மீது. ஒரு பெரியவர் ஊர் பஞ்சாயத்தைக் கூட்டச் சொன்னார். ஆனால் பஞ்சாயத்து எதுவும் தேவையில்லை. இவனை போலிசில் ஒப்படைக்க வேண்டும் என எத்திராசும் அவன் நண்பர்களும் சொல்ல, தமிழ்ச் செல்வன் திருட்டுப் பட்டத்துடன் செய்யாத குற்றத்திற்காகக் காவல் நிலையம் சென்றான். பின் ஒரு வாரத்திற்குள்ளாகவே நீதிமன்றம் அவனுக்கு ஆறுமாத தண்டனையை வழங்கித் தீர்ப்பளித்தது.

ஆறுமாத தண்டனைக்குப் பின் ஒரு நாள் பேருந்தில் வந்திறங்கினான் தமிழ்ச் செல்வன். புழுதிகளை வாரி இறைத்தபடி பேருந்து செல்ல அந்தச் சாலையைக் கடந்து ஊருக்குள் நடந்து வந்தான் தமிழ்ச் செல்வன். தெருவில் கோலி விளையாடிக் கொண்டிருந்த சில சிறுவர்கள் தமிழ்ச்செல்வனைக் கண்டவுடன், "டேய்... ஆடு திருடன் மறுபடியும் ஊருக்குள் வராண்டா.." என்று கத்தியபடியே எழுந்து ஓடினார்கள் அந்தத் தெருவில்.

அவர்களைப் பின் தொடர்ந்து மௌனமாய் நடந்து சென்றான் தமிழ்ச் செல்வன். ■

---

## வெற்றி

வெற்றி பெறுவது
விளையாட்டில்லை
விளையாடாமலோ
வெற்றியில்லை

– பொன்.குமார்

## நாளை ஒரு பொழுதின் விடுதலைக்காக...!

ஓடிக்கொண்டிருக்கிறேன்...
பனிபடர்ந்த அந்தக் காலையில்
ஈரம் இலேசாகக் கலந்த
குளிர்காற்று வந்து மேனிதடவ
வழமைபோலவே இன்றும் நான்...!

தொடருந்துக்குள்...
அதோ
அந்த மூலையில்
மூக்குக் கண்ணாடியை
அடிக்கடி சரிசெய்தபடி
இன்னும்...
என்னைப்போலவே
விடியாத முகத்துடன்
கம்பிகளை இறுகப்பற்றியவாறு
வருகிறான்...
அரபு நாட்டுச் சிறுவன்

இதோ
இந்த மூலையில்
பிரஞ்ச் நாட்டு வயோதிபர்
இன்றைய நாளிதழை
புரட்டிப் புரட்டி
படித்துக் கொண்டே வருகிறார்

அதற்கு அருகில்தான்
இன்னும் ஒரு...
நாதியில்லாமல் நான்...

கம்பிகளின் ஊடாக
எதையோ பார்த்தபடி
எங்கெங்கோ
ஏக்கங்களுடன் பயணிக்கின்றேன்

இருப்பினும்
இன்று 'சனி'க்கிழமை
அப்பாடா...
நாளை ஒரு பொழுது
ஓட்டத்தை நிறுத்தி
இளைப்பாறலாம்...!

– த.சரீஷ் (பாரிஸ்)

# சுதந்திர தாகம்

– சித்ரா சுப்ரமணிய ஐயர்

அநாதை இல்லத்தில் ஒரு அநாதையாக வாழ்ந்தவள்தான் இலக்கியா. அவளுக்கு அநாதை இல்லத்தில் வைக்கப்பட்ட பெயர்தான் இலக்கியா. யாரும் பொறுப் பெடுக்கத் துணியவில்லை. உறவுகள் ஊரோடு சேர்ந்து ஊமைக் கண்ணீர் வடித்ததோடு சரி. அடுத்த நிமிடமே அநாதை எனக் கைவிடப்பட்ட இலக்கியா அவளது தாயின் உறவினர் ஒருவர் தனக்கு சுமையாகி விடக் கூடாது என்பதால் இலக்கியாவை அதே ஊரிலுள்ள அநாதை இல்லத்தில் ஒப்படைத்து விட்டு நிம்மதிப் பெருமூச்சுடன் நழுவினர்.

அன்று அந்த அநாதை இல்லத்தில் புது விருந்தாளியாக இலக்கியா சேர்க்கப்பட்டாள். அன்று இல்லத் தலைவி அவளின் அழகான அமைதியான முகத்தைப் பார்த்து இலக்கியா என்ற பெயரை வைத்து அன்போடு அரவணைத்து முத்தமிட்டாள். பத்து வயதில் அநாதையாகிவிட்ட இலக்கியாவுக்கு அநாதை இல்லத்தில் எந்தக் குறையும் இருந்ததில்லை. அந்தளவுக்கு எவ்விதப் பாகுபாடுமின்றி அன்புள்ளவளாக வளர்க்கப்பட்டாள். நாளொரு வண்ணமாக இலக்கியா வளர்ந்து பெரியவளானாள். படிப்பிலும் நல்ல முன்னேற்றம் அடைந்தாள்.

இலக்கியா தனக்கு அடைக்கலம் தந்து வாழவைத்த அநாதை இல்லத்துக்கு நன்றிக் கடன் செய்ய விரும்பினாள். அதே நேரம் இலக்கியா யாவருடனும் அன்பாகவும் பணிவாகவும் பொறுமையுடன் வளர்ந்து வந்தாள். பிறர்க்கு உதவி செய்வதில் என்றுமே தவறியதில்லை.

இலக்கியா தன்னை வளர்த்து ஆளாக்கி படிப்பித்து விட்ட இல்லத்திற்கு தான் முழு மூச்சாக விரும்பி ஒரு கம்பனியில் வேலைக்குச் சேர்ந்தாள். கம்பனியில் இலக்கியா மேல் எல்லோரும் மிகவும் அன்பு காட்டினார்கள். அதே நேரம் இலக்கியாவும் தன் கடமைக்கு முக்கியத்துவம் கொடுத்து மிகவும் கண்ணியமாக வேலை செய்தாள். கம்பனியில் அவள் மேல் யாவரும் தனிப்பட்ட மதிப்பு வைத்திருந்தனர். இலக்கியா தன் சம்பளத்தை தவறாது தன்னை வளர்த்து ஆளாக்கிய

அநாதை இல்லத்திற்கு மாதா மாதம் அனுப்பி ஆத்ம திருப்தி அடைந்தாள். இல்லத்திற்கு இலக்கியாவின் பங்களிப்பு மிகவும் அதிகமாகக் கிடைத்து வந்தது. இலக்கியா வேலை செய்யும் கம்பனியில் தான் மாதவனும் வேலை செய்கிறான். அமைதியான இலக்கியாவின் அடக்கம் அழகு யாவும் பிடித்தது.

இலக்கியா தான் ஒரு அநாதை என்றும் தெரிந்தும் தன் சுயநலம் கருதாது அடுத்தவர் களுக்காகவே இந்த வேலையில் சேர்ந்து வேலை செய்வது அறிந்து மாதவன் மிகவும் பெருமைப் பட்டான். இலக்கியாவாகவே தனது வாழ்க்கையின் துணையாக மனைவி யாக வரவேண்டும் என் விரும்பி பார்த்து இலக்கியாவிடம் தன் மனதில் உள்ள விருப் பத்தை வெளிப்படையாகக் கேட்டான். திடீரென மாதவன் இப்படிக் கேட்டதும் இலக்கியா தடுமாறினாள். தன் நிலை மையை, தன் வாழ்க்கையை எல்லாம் ஒரு தடவைக்குப் பல தடவை யோசித்தாள். தான் ஒரு ஆதரவற்ற அநாதை என்றும் தன் வாழ்வில் நடந்த சம்பவங்கள் - இந்த வேலையைத் தான் செய்வதன் நோக்கம், தனது லட்சியம் எல்லாமே எனக்கு அடைக் கலம் தந்து என்னை இந்தளவுக்கு ஆளாக் கிய இல்லத்துக்காகவே வாழ்கிறேன் என் றாள் இலக்கியா.

உன் கடமைகளுக்கோ இலட்சியத்திற் கோ நான் எவ்விதத்திலும் தடையாக இருக்க மாட்டேன் என்றும், நீ விரும்பும் கணவனாகவே இருப்பேன் உன் முடிவுதான் என் முடிவும் என்றான். இருந்தும் என்னை விட என்னை வளர்த்து ஆளாக்கிய என் தெய்வமான இல்லத் தலைவி மீனாட்சி அம்மாவின் முடிவு என்னவோ அதுதான் என் முடிவும் என்றாள் மன உறுதியுடன். அதுவும் சரியானதுதான் இலக்கியா. நான் மீனாட்சி அம்மாவை நேரில் சந்தித்துப் பேசி நல்ல முடிவு எடுத்து என் வீட்டிலும் என் விருப்பத்தைத் தெரிவித்து அவர்களின் முடிவையும் தெரிந்து வந்து உன்னைச் சந்திக் கிறேன். இலக்கியா அதுவரை காத்திருக் கிறேன் என்றபடி சந்தோஷமாக விடை பெற்று மீனாட்சி அநாதை இல்லத்துக்குச் சென்றான் மாதவன்.

இல்லத்தினுள் நுழைந்த மாதவனுக்கு அங்கு நிலவிய அமைதி மனதிற்கு மிக இத மாகவும் அதே நேரம் பதற்றமாகவும் இருந் தது. இருந்தும் மன உறுதியுடன் சென்ற மாத வனை இடைமறித்த காவலாளி காரணம் கேட்க மாதவனும் தான் இல்லத் தலைவி யைச் சந்திக்க விரும்புவதாகச் சொன்னான். காவலாளியும் மாதவனை இல்லத் தலைவி யின் இருப்பிடத்திற்குக் கூட்டிச் சென்று விட்டான்.

அறுவது வயது மதிக்கத் தக்க உருவம் தலையில் இலேசான நரையும், தூய்மையான வெள்ளை நிறப் புடவை அணிந்திருந்தார். மாதவன் அவர்தான் இல்லத்தலைவி என் பதை அவரின் கம்பீரத்திலும் சாந்தமான முகத்தின் தோற்றத்தை எடுத்துக் காட்டியது. மீனாட்சி அம்மாவின் முன் கை கூப்பி நின் றான் மாதவன். மீனாட்சி அம்மாவும் பதி லுக்கு வணக்கம் தெரிவித்து தனது அலுவ லக அறைக்கு அழைத்துச் சென்றார். மாத வன் தலைவியிடம் தான் வந்த காரணத்தை மிகவும் பவ்யமாகச் சொன்னான். என் பெயர் மாதவன் நான் ஒரு கம்பனியில் நல்ல சம்பளத்துடன் வேலை செய்கிறேன். நான் உங்கள் அநாதை இல்லத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை கல்யாணம் செய்ய விரும்பு கிறேன். ஆனால் அந்தப் பெண்ணும் நான் வேலை செய்யும் கம்பனியில்தான் வேலை செய்கிறாள். பெயர் கூட இலக்கியா என் றான். அவளை என் மனசுக்கு மிகவும் பிடித் துள்ளது. ஆதரவு இல்லாத அவளுக்கு வர தட்சணை வாங்காது வாழ்க்கை கொடுக்க மனப்பூர்வமாக விரும்புகிறேன். அவளையே என் மனைவியாக விரும்பினேன். அதனால் தான் இதுபற்றி உங்களுடன் பேசி முடி வெடுக்கலாம் என வந்துள்ளேன் என்றான்.

மீனாட்சி அம்மாள் ஆச்சரியத்துடனும் சந்தோஷத்துடனும் மாதாவனின் முகத்தை

நிமிர்ந்து பார்த்தார். மாதவனும் அம்மா உங்களது நல்ல முடிவுடன் அன்பான ஆசீர்வாதத்துடனும் தான் என் திருமணம் நடக்க வேண்டும் என விரும்புகிறேன் என்றான்.

மாதவன் ஒரு பெண்ணுக்கு மூன்று வேளை சாப்பாடும் உடுத்த துணியும் மட்டும் கிடைத்தால் போதாது. அவளுக்கு நடக்கும் கல்யாணம் தான் கடவுளால் கொடுக்கப்பட்ட ஒரு விலை மதிக்க முடியாத பரிசு. அந்தப் பரிசு இப்போது உங்கள் மூலமாக என் இலக்கியாவுக்குக் கிடைக்க இருப்பதை நான் மனப் பூர்வமாக ஏற்று அதற்கு என் முழு சம்மதத்தையும் தெரிவிக்கிறேன் மாதவன் என்றார் இல்லத் தலைவி. மாதவனும் இல்லத் தலைவிக்கு மிகவும் மகிழ்ச்சியுடன் தன் நன்றியைத் தெரிவித்து மீண்டும் வருவதாகக் கூறி விடை பெற்று சென்றான்.

நேரே தன் வீட்டுக்குச் சென்று மாதவன் தன் பெற்றோரிடமும் தனது திருமண விசயம் முதல் இலக்கியா பற்றிய விபரம் யாவும் விளக்கமாகச் சொல்லி வீட்டில் யாவரது முடிவையும் கேட்டான். முதலிலேயே வீட்டில் யாவரும் இலக்கியாவை ஊர்பேர் தெரியாத ஒரு அநாதை பெண்ணையா நீ கல்யாணம் செய்ய வேண்டும். நீ ஒரு நல்ல வேலையில் இருக்கிறாய், கை நிறைய சம்பாதிக்கிறாய். உன் உழைப்புக்கும், எங்கள் குடும்ப வசதிக்கும் எத்தனையோ வசதியான பெண்கள் கிடைப்பார்கள். போயும் போயும் ஒரு அநாதைக்கா உன் வாழ்க்கை வீணாக வேண்டும். அதிலும் சீதனமில்லாத பெண்ணையா நீ கல்யாணம் செய்ய வேண்டும் என்று மாதவனைத் திட்டத் தொடங்கினார்கள் அவனது வீட்டில் யாவரும். மாதவன் தன் முடிவை இனி மாற்ற முடியாது என்ற ஒரே வார்த்தையில் பிடிவாதமாகச் சென்னான். வேறு வழியுடன் சம்மதித்தனர். மாதவன் இலக்கியா கல்யாணம் மிகமிக எளிமையாக ஒரு கோவிலில் நடந்து முடிந்தது.

இலக்கியா ஒரு அநாதை என்ற வார்த்தைக்கு இடமில்லாத படிக்கு இன்பமயமான வாழ்க்கையைக் கொடுத்தான் மாதவன். நிரந்தரமான வேலை கைநிறையச் சம்பளம் இலக்கியாவை விரும்பிக் கல்யாணம் செய்ததால் அவளிடம் மிகவும் அன்பு காட்டி மன ஒற்றுமையுடன் புது வாழ்க்கையை ஆரம்பித்தான்.

தன் திருமணத்திற்காக லீவு போட்டிருந்த இலக்கியா மீண்டும் வேலைக்குப் போக ஆரம்பித்தாள். அவள் புகுந்த வீட்டில் யாருக்கும் எவ்விதக் குறையுமின்றி அவர்கள் மனமறிந்து கடமைகளைச் செய்துவிட்டு தன் அன்புக் கணவனின் கடமைகளையும் எவ்விதக் குறையுமின்றி சரி வர ஒழுங்கு செய்து வேலைக்குச் சென்றாள். கல்யாண ஆரவாரத்தில் ஒருமாதமாக அநாதை இல்லம் போகாத இலக்கியா அன்று கம்பனி வேலை முடிந்ததும் நேரே அநாதை இல்லத்திற்கு மிகவும் ஆவலுடனும், உற்சாகத்துடனும் சென்று விட்டாள்.

தன் வீடு வந்த மாதவன் இல்க்கியாவைக் கூப்பிட்டதும் உன் அருமை மனைவி கல்யாணமானவள் என்ற நினைவுகூட இல்லாது இத்தனை மணியாகியும் வீடு வரவில்லை. எங்கே போனாளோ யாருக்குத் தெரியும். அநாதைதானே அவளுக்குக் குடும்பம் வீடு வாசல் என்று எதைப்பற்றியாவது கவலை இருக்கா எனத் திட்டத் ஆரம்பித்தாள் மாதவனின் அம்மா. உடன் மாதவனின் சித்தியும் அவள் மகளும் மருமகனும் சேர்ந்து மாதவனைத் திட்டித் தீர்த்தனர்.

மிகவும் நேரமாகித்தான் வீடுவந்து சேர்ந்தாள் இலக்கியா. காரணம் கேட்டு யாவரும் அவளைச் சீண்டினார்கள். இலக்கியா தான் அநாதை விடுதிக்கு நீண்ட நாட்களாகப் போகா ததால் ஒரு தடவை போய் வந்தேன் என்று தயக்கத்துடன் சொன்னாள்.

நீ உன் எண்ணத்திற்குப் போனது மிகவும் தவறு. எம்மை மதிக்காது உன் கணவனிடம் கூட ஒரு பதில் கேளாது கட்டுப்பாடின்றி

உன் எண்ணப்படி எப்படிப் போக முடியும் எனத் திட்டினார்கள். மாதவனால் எதுவும் பேச முடியவில்லை. இனி இப்படியான தவறு நடக்காது, நான் பார்க்கிறேன் என்று யாவருக்கும் பதில் கூறி தன் அறைக்குள் சென்று விட்டான் மாதவன். அவன் பின் இலக்கியாவும் சென்றாள் தயங்கியபடி.

அன்று கம்பனியின் சம்பள நாள். இலக்கியாவுக்கும் சம்பளம் கிடைத்தது. வேலை முடிந்ததும் இலக்கியா முன்பு போலவே அன்றும் தன் சம்பளப் பணத்துடன் இல்லத்துக்கு மிகவும் சந்தோசத்துடன் சென்றாள். இல்லத் தலைவி மீனாட்சி அம்மாவின் கால்களைத் தொட்டு வணங்கி அவரின் கைகளில் தன் சம்பளப் பணத்தைக் கொடுத்தாள். மீனாட்சி அம்மா, இலக்கியா இது என்னம்மா இனி நீ தனி ஆளில்ல... உனக்கு என குடும்பம், கணவன், மாமா, மாமி என உறவுகள் பொறுப்புகள் உள்ளது. அதை எல்லாம் இனி நீயும் சேர்ந்து உன் கணவனுடன் கவனிக்க வேண்டும். அப்படியிருக்க ஏன் உன் சம்பளப் பணத்தை இங்கு கொண்டு வந்து தந்தாய் என வியப்புடன் கேட்டார்.

அம்மா இது நான் செய்ய வேண்டிய கடமை. நான் கம்பனியில் வேலை செய்வதே உங்கள் இல்லத்திற்கு நான் என் நன்றிக் கடனைச் செய்வதற்கே. இதைக்கூட என் கல்யாணத்திற்கு முன்பே என் கணவரிடம் சொல்லி அதற்கு அவர் சம்மதித்த பின்பு தான் நானே அவரைக் கல்யாணம் செய்யச் சம்மதித்தேன். அப்படியிருக்கும் போது நான் எப்படி அம்மா உங்களை விட்டு என்னை வளர்த்து இன்று இந்த நிலைக்குக் கொண்டு வந்து என்னை வாழ வைத்த இல்லத்தை உங்களை எப்படி மறக்க முடியும் என்றாள்.

அதற்கு மேலும் எதுவும் பேச முடியாத இல்லத் தலைவி இலக்கியா கொடுத்த பணத்தை அன்போடு பெற்றுக் கொண்டார். அன்று சம்பள நாள். இலக்கியா எப்படியும் நேரத்துடன் வந்து விடுவாள் என எதிர் பார்த்திருந்ததால் இலக்கியாவின் மாமா, மாமி யாவரும் மாதவன் இலக்கியா நேர மாகியும் வீடு வராததால் வாசலில் தடுமாறி தவித்தபடி காத்திருந்தனர். இலக்கியா வருவதைக் கண்ட மாதவன் வீட்டுக்குள் போனான். அவன் பின் வீட்டினுள் காலடி எடுத்து வைத்த இலக்கியாவை வீட்டினுள் இருந்து வந்த சொற்கள் உள்ளே நுழைய விடாது தடுத்தது.

பிறப்பு வளர்ப்பு தெரியாத ஒரு அநாதையை சீதனம் கூட வாங்காது என் மகன் ஆசைப்பட்ட ஒரே காரணத்திற்காக மருமகளாக எமது விருப்பம் இன்றி ஏற்றோம். ஆனால் இவள் என் மகனுக்கு மனைவியும் இல்லை. இந்த வீட்டுக்கு மருமகளும் இல்லை இனி என்றாகி விட்டது. அநாதை விடுதியில் கட்டுப்பாடற்று வளர்ந்த இந்த நாய்க்கெல்லாம் குடும்பம், வீடு, கணவன் என்று கேட்குதா? தெரு நாயை வீட்டுக்குக் கூட்டி வந்தாள் அது கட்டாக்காலி தானே. அது போலத்தான் இவளும் கண்ட கண்ட இடத்திற்கு கண்டவனுடன் திரிந்து விட்டு நேரமாகி வீடு வந்து பத்தினி போல நடக்கிறாள். இவளை வீட்டில் அழைத்தால் எமது மானம் மரியாதை எல்லாம் போய் விடும். இனி ஒரு நிமிடமும் அவள் இந்த இடத்தில் நிற்கக் கூடாது என்றார்கள். மாதவனால் என்ன செய்வதென தெரியாது தவித்தான். தாயின் கட்டுப்பாட்டில் தாயின் வளர்ப்பில் வளர்ந்த மாதவனால் அவர்கள் சொல்லை மீறி எதுவும் செய்ய முடியவில்லை.

கடைசியாக அவனும் இலக்கியா இப்படி ஒரு கட்டுப்பாடில்லாத நீ இனி எந்த நிலையில் நல்லவளாக மாறுவாய் என்று எமக்குத் தெரியவில்லை. அந்தளவுக்குக் கட்டுப்பாடற்றவள் நீ. இனி உன்னோடு வாழ்ந்தால் சமுதாயம் என்னையும் ஒதுக்கி விடும். தெரியாத்தனமாக உன்னை என் மனைவியாக்கினேன். கண்ணிருந்தும் குருடனாகி விட்டேன். இனியும் நீ என்னோடு வாழ்ந்தால் எனக்கும் என் குடும்பத்திற்கும் பெரிய அவமானமாகிவிடும். நீ ஒரு குடும்பத்

துக்கு ஏற்ற ஒரு பெண்ணாக இல்லை. என்னைத் திருமணம் செய்த பின்பு நீ வேலைக்குப் போவது என்னை அவமானப் படுத்துவது போல் உள்ளது. அதைவிட அடிக்கடி நீ அந்த அநாதை இல்லத்திற்குப் போய் வருவது இன்னும் என்னை என் கௌரவத்தை இழிவு படுத்துவதாகவுள்ளது. அநாதை இல்லத்திற்குப் போவதாகச் சொல்லி போய் வருகிறாயே நீ எங்கு போகிறாய் எதற்குப் போகிறாய் யாரிடம் போகிறாய் என்பது எமக்குப் புரியாத புதிராகவே உள்ளது. இனியும் உனக்குக் கணவனாக வாழ்வதில் அர்த்தமில்லை. நீ ஒரு அநாதை தானே, நீ வாழ்ந்த வாழ்க்கை ஒரு சாக்கடை வாழ்க்கை. இனியும் ஒரு நிமிடம் கூட இந்த இடத்தில் நிற்கவோ என் முகத்தில் முழிக்கவோ இனி உனக்கு எந்தத் தகுதியுமில்லை. உனது இந்தக் கட்டுப்பாடற்ற வாழ்க்கையில் எமக்கு சந்தேகமாக உள்ளது. தயவு செய்து இந்த நிமிடமே வீட்டை விட்டு வெளியேறி உன் ஆசைப்படி கட்டுப்பாடின்றி எப்படியாவது வாழ்ந்து கொள் என்று சொல்லியவன் உடனே இலக்கியாவின் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி விட்டான். மாதவன் மட்டுமல்ல, அவனோடு சேர்ந்து அவன் குடும்பமே இலக்கியாவைக் கீழ்த் தரமான வார்த்தைகளால் திட்டி வெளியே தள்ளினார்கள்.

இலக்கியா மாதவன் காலில் விழுந்து தன் கண்ணீரால் அவன் கால்களைக் கழுவினாள். என்னை நம்புங்கள் நான் களங்கம் இல்லாதவள், என்றும் உங்கள் மனைவியாகவே வாழ விரும்புகிறேன் என்று கண்ணீர் விட்டு அழுதாள். என்னைத் தொடாதே என்னைத் தொட்டாலே உன் பாவம் என்னையும் தொட்டு விடும். அந்தளவுக்கு நீ தகுதியற்ற ஒரு பெண் ஜென்மம் என்றபடி இலக்கியா முகத்தில் காறித் துப்பினான் மாதவன்.

அதற்கு மேலும் இலக்கியாவால் பொறுமையாக இருக்க முடியவில்லை. அநாதையோடு நோதையாக நிம்மதியாக வாழ்ந்த என்னை ஆசைகாட்டி மோசம் செய்து விட்டீர்கள். நீங்கள் சொல்வது போல கேடு கெட்டவள் நானில்லை. எனக்கேற்பட்ட நிலமை வேறெந்தப் பெண்ணுக்கும் ஏற்படக் கூடாது. பெண்ணைத் தெய்வமாக மதிக்கும் இப்பூமியில் நீங்கள் என்னை ஒரு கேவலப் பொருளாக்கி விட்டீர்கள். நான் என்றும் புனிதமானவள். பெண்ணினத்தின் கட்டுப்பாட்டை மதிப்பவள். அப்படியான என்னை என் கட்டுக் கோப்புகளை மீற வைத்தது இப்போது நீங்கள்தான். வெளியே சென்று வாழ்ந்தாலும் நான் பத்தினியாகத் தான் வாழ்வேன். படி தாண்டாள் பத்தினி என்ற புனிதமான வார்த்தையை மதித்து வந்த என்னை இந்த நிலைக்கு ஆளாக்கி விட்டீர்கள்.

படி தாண்டினாலும் பத்தினி பத்தினி தான் என்று வாழ்ந்து காட்டப் புறப்பட்டு விட்டாள் இலக்கியா என்ற அநாதைப் பெண். ■

---

இன்பம்

குழந்தையின் மழலை இன்பம்
குழலின் இசை இன்பம்
பண்ணிசை ஓசை இன்பம்
பழந்தமிழ் பாட்டு இன்பம்
பாடலில் இலயித்தல் இன்பம்
பரமனை நினைத்தல் இன்பம்
இத்தனை இன்பமும் கிடைக்க
இனி இல்லை வாழ்வில் துன்பம்
அந்நிலை தரும் பேரின்பம்.

புத்தகம்

திறந்த புத்தகம்
கவிஞனை உருவாக்கும் முற்றம்
துறந்த முனிவனையும்
புத்தகம் மேலும் புனிதனாக்கும்
பட்டப்படிப்புக்கும்
பாமரனை அழைத்துச் செல்லும்
புத்தகம்
புதிய உலகின் திறவு கோல் அது
– கனக.ஈஸ்வரகுமார்

# விடைகளுக்கு அப்பால்

– நந்தி

அந்த இளம் பெண்கள் இருவரும் எங்கள் மாதர் சங்கத் தலைவிக்கு மிக அருகில் உட்கார்ந்து, தலை போகிற விஷயம் போல். ஏதோ மளமளவென வாதாடினார்கள். ஒரு கல்லூரியின் அதிபராக இருந்து ஓய்வு பெற்ற மூதாட்டியான, எங்கள் தலைவியின் புத்தி சார்ந்த அந்தப் புன்னகை அவற்றை முழுமை யாக ஆமோதிக்கிறதா?

பெண்கள் இருவரும் தந்த வினாக்கொத்தைப் படித்து நாங்கள் முப்பது பேரும் விடைகளைப் போட்டுக் கொண்டி ருந்தோம். அந்த வினாக்கொத்தின் மூன்றாம் பக்கத்திலுள்ள இரண்டாம் கேள்வியைப் படித்ததும் எனது மனத்தின் மடி கிளறப்பட்டது. கேள்வியோ சின்னஞ்சிறயது. ஒரு கட்டெறும்பு அளவுதான். இனி அதற்கு விடையாக 'ஆம்' அல்லது 'இல்லை' மட்டும்தான் தரவேண்டுமாம். கேள்வியை மீண்டும் படித்தேன்.

'கலியாணத்தின் முன் உங்களுக்குப் பாலியல் உடலுறவு அனுபவம் உண்டா?'

மெல்லமாக நாசூக்காக மண்டபத்திலிருந்த எனது சகாக் களைப் பார்வையிட்டேன். அவர்கள் வீட்டுத் தோட்டத்துப் பூக்கள் போல் பல ரகம். 20 - 50 வயதினர், கலியாணமானவர், பெரும்பாலோனோர் கல்கி, குமுதம், விகடன் சகவாச வீட்டுப் பெண்கள். அவர்கள் ஒரு இனமாகச் சேர்ந்து கொள்வார்கள். அவர்கள் மத்தியில் எந்த வயதானாலும் ஒரு சூட்சும இளமை நிலவும். மற்றவர்கள் ஆசிரியைகள், புடவைக் கடை விற்பனை யாளர் இருவர், ஒருத்தி காவற்துறை, ஒருத்தி ஒரு கால் இல்லாத வள். பொய்க்காலுடன் நடனமும் ஆடுவாள். விடுதலை இயக் கத்தில் முன்னம் சேர்ந்தவளாம். அவர்கள் அனைவரும் குறுக் கெழுத்துப் போட்டியில் வெற்று சதுரங்களை நிரப்புபவர்கள் போல உன்னிப்பாக விடைகள் போட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் முகங்களில் கூச்சமோ தயக்கமோ சாடை மாடையாக வும் காணப்படவில்லை. அந்தக் கேள்வியை அவர்கள் இன்னும் படிக்கவில்லை போலும். படித்தாலும் என்ன, விடை எழுதினா லும் என்ன, எல்லாம் இரகசியம், மிக இரகசியம்தானே. அப் படித்தான் அந்தப் பெண்கள் இருவரும் எங்களுக்குச் சொன் னார்கள்.

இங்கிருந்து பார்க்கும்போது தலைவி யுடன் அவர்கள், தாயும் இரு மகள்மாரும் போல் தோன்றினார்கள். பெண்களுக்கு இருபதுக்கும் இருபத்தைந்துக்கும் இடைப்

பட்ட வயது இருக்கும். ஒருத்தி ஓரத்தில் நான்கைந்து கறுப்பு நிறப் பொட்டுக்கள் போட்ட சாம்பல் நிற வொயில் சேலை உடுத்தியிருந்தாள். அவள் ஒரு கோவில் புறா என்றால், மற்றவள் வீட்டுக் கோழி. அவள் உடல் பெருத்த சிநேகிதியிடம் இரவல் வாங்கியது போன்ற ஒரு தொப்பார சர்வாஸ் கமீஸ் சட்டைக்குள் ' ருந்திருந்தாள். இருவரும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் சமூகவியல் கற்கும் மூன்றாம் ஆண்டு மாணவிகள் என்று தங்களை அறிமுகம் செய்தார்கள். அவர்களைப் பார்க்கும் போதே பரவசமும் உற்சாகமும் மனத்தில் தொற்றின. தாங்கள் படிக்கும் பாடத் திட்டத்தின் ஒரு தேவையாக இந்த ஆராய்ச்சி செய்வதாகக் கூறினார்கள். அதாவது கலியாணமான நடுத்தரப் பெண்கள் சம்பந்தமான ஒரு ஆய்வு. அதற்காக எங்கள் பொது அறிவு, தொழில், குடும்பம், விருப்பு வெறுப்பு, நோக்கு போக்கு, இப்படிப் பலதும் பத்தும் அறிவதற்காக பல கேள்விகளைக் கொண்ட ஒரு பத்திரத்தை, இந்த வினாக்கொத்தைத் தயாரித்து வந்திருக்கிறார்கள். எமக்குத் தந்த பத்திரத்தில் நாங்கள் ஒவ்வொருவரும் அதில் உள்ள கேள்விகளுக்கு விடை தர வேண்டும். *(எல்லாம் இரகசியமாக, மிக இரகசியமாக)* ஆனால் அநேகமான கேள்விகளுக்கு 'ஆம்', 'இல்லை', 'தெரியாது' என்று மொட்டையாக விடைகளைக் காட்டத்தான் அனுமதி உண்டு. அதற்கு அப்பால் விடை எழுத இடம் இல்லை. அதற்கெல்லாம் என்ன தேவை என்று அவர்கள் நினைத்தார்களோ, என்னவோ!

வினாக்கொத்திலும் 'மிகவும் அந்தரங்கமானது' என்று தமிழிலும் `very confidential` என்று ஆங்கிலத்திலும் போடப்பட்டிருந்தது. அவர்களில் ஒருத்தி, அந்தப் புறா மேலும் விளக்கினாள். பேசிய விதத்தில் அவளை ஒரு திறமையான பேச்சாளி என்பதிலும் பார்க்கப் பொல்லாத வாயாடி என்பது பொருந்தும்.

"சகோதரிகளே... உண்மையில் உங்கள் சிலரின் வயதைப் பொறுத்தவரை... தாய் மார்களே" என்று ஆரம்பித்தாள்.

"இந்த குவெஸ்றியனரில் (வினாக் கொத்து) இருக்கும் கேள்விகளுக்கு நீங்கள் தரும் உண்மையான, சரியான, நேரான விடைகள்தான் எங்கள் ஆராய்ச்சியின் பெறுமதியை நிர்ண... தம் இந்த ஆய்வின் பெறு பேறுகள் நமது பெண்கள் எதிர் நோக்கும் சவால்களைச் சமாளிக்கவும், எமது அரசியல், சமூகவியல், பெண் பாலியல் நடவடிக்கைகளை நிர்ணயிக்கவும் உதவும்" இப்படிப் பெரிசாகப் பேசினால். எனது பக்கத்திலிருந்த சிநேகிதி, ஒரு சங்கீத ஆசிரியை காதிற்குள் சிரித்தா 'இவர்கள் இரண்டு பேரும் பரிட்சையில் நல்ல புள்ளிகள் வாங்கி சித்தியடையவும் உதவும். அதைச் சொல்ல மாட்டார்கள். பாவம், எழுதிக் கொடுப்பம்.'

"இனி" என்றாள் புறா. "தாய்மாரே, நீங்கள் நிரப்பித் தரும் விடைகளை வைத்து உங்களை யார் யார் என்று யாரும் இனம் காண இயலாது. நாங்கள் உங்கள் பெயரையோ ஊரையோ கேட்கவில்லை என்பதை அவதானிப்பீர்கள்"

அவள் தன் தோழியைப் பார்க்க அவள் அந்தக்கோழி இப்போ எழிந்து பேசினாள் உங்கள் விடைகள் கொம்பியூற்றரில் சேர்க்கப்படும். அதாவது அந்தக் கணனி எண்கள் மூலம் செய்தி தரும் ஆகவே மீண்டும் சொல்கிறோம். நீங்கள் பெண்களாக அல்ல எண்களாகவே எங்களுக்குத் தோன்றுவீர்கள். ஆகவே உண்மையாக ஒளிப்பு மறைப்பு இல்லாமல் சிறகடிப்பது போல் அவள் கைகளும் படபடத்தன.

வினாக்கொத்தில் இரண்டு பக்கங்களைப் படிக்கும்போது இப்படியான உப்புச்சப்பு இல்லாம கேள்விகளுக்கு ஏன் இவ்வளவு பீடிகை இதில் என்ன இரகசியம் என்று தோன்றியது ஹாஸ்யமாகவும் சிலருக்கு

இருந்திருக்கும். இருக்காதா என்ன

'உங்கள் ஆண் குழந்தைக்குத் தாய்ப்பால் ஊற்றினீர்களா ?"

மேற்படி கேள்விக்கு விடை ஆம் என்றால் வலது மார்பையா இடது மார்பையா அதிகம் கொடுத்தீர்கள்

மேற்படி பெண் குழந்தை என்றால் எந்த மார்பை அதிகம் உபயோகித்தீர்கள்

ஒன்றைப் படித்து நானும் வாய்க்குள் சிரித்தேன்.

உங்கள் கணவரின் மீசையைப் பற்றிய உங்கள் அபிப்ராயத்தை பின்வரும் ஐந்து விடைகளில் ஒன்றை மட்டும் காட்டுவதன் மூலம் தெரிவியுங்கள்.

*ஆலிங்கனமான அவர் மீசையை விரும்புகிறேன்.*

*மீசையை சும்மா விரும்புகிறேன்.*
*மீசையை சகிக்கிறேன்.*
*மீசையை வெறுக்கிறேன்.*
*அதை ஆக்ரோஷமாக வெறுக்கிறேன்.*

உம் சிரித்தேன். எனது அவருக்கு மீசை இல்லையே.

இப்படியான எனது எனது வாழ்க்கையைப் பாதிக்கும் நிர்ணயிக்கும் துழாவும் கேள்விகளுக்குப் பின்புதான் மூன்றாம் பக்கத்தில் அந்தக் கேள்வி. கலியாணத்தின் முன் பாலியல் உறவு அனுபவம் உண்டா இல்லையா ஐயோ என்னைப் பொறுத்தவரை அது வெறும் ஆம் தானா என்ன அனுபவம் அது ஒரு வார்த்தையில் பொத்தி மூடி விடக்கூடியதா

அப்போது எனக்கு ஒன்பது வயது. நான் காம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். எனது வகுப்பிலே உயரத்திலும் பருமனிலும் கூடியது அதாவதுமுதலாவது நான் தான். சிலர் என்னைப் பார்த்து 14, 15 வயது மதித்துக் கேட்டதாக ஞாபகம். சீ பெரிய பிள்ளையாகி விட்டாயா என்றும் என்னைக் கேட்டார்கள். படிப்பில் நடுத்தரம் சக் கட்டை என்றும் கூறிய வாத்தியார் ஒருவர் உண்டு.

அப்பா ஒரு விவசாயி. முல்லைத் தீவில் அம்மாவுடனும் ஒரு குட்டித் தம்பியுடனும் வசித்து வந்தார். கதைகளில் வரும் ராசா போல காலையில் பரிவாரங்களுடன் வயலுக்குப் போவார். அம்மாவுக்கு ஒரு தூரத்து உறவினர் எனக்கு அன்ரி என்று சொல்லித் தந்தார்கள் அவரது கணவர் அங்கிள் ஆன்றியின் தாய் பாட்டி ஆகியோருடன் நான் யாழ்ப்பாணத்தில் வசித்து ஒரு சிறிய பாடசாலையில் படித்து வந்தேன். அந்த வருடம் ஐந்தாம் வகுப்பு ஸ்கொலஷிப் பரீட்சை உண்டு. அதில் சித்தி அடைந்தால் பெரிய கல்லூரி ஒன்றில் சேர்ந்து படிக்கலாம். தொடர்ந்து பெரிய படிப்புக்கள் டாக்டர் ஆகலாம். இப்படி எல்லாம் ஆசையாகப் பேசி என்னை யாழ்ப்பாணத்திலிருக்கும் ஆன்றி வீட்டிற்கு அனுப்பினார்கள் அப்பா மட்டுமல்ல அம்மாவும். தம்பி மட்டும் அழுதான். அப்பா ஒவ்வொரு மாதமும் இங்கே வரும்போது ஒரு மூட்டை மொட்டைக் கறுப்பன் நெல் கொண்டு வந்து தருவார்.

அங்கிள் எனக்குத் தினமும் பாடம் சொல்லித் தருவார்.

அந்தியில்தான் ஒரு மணி நேரம் பாடம். அவர் யாழ்ப்பாண நகர சபையில் ஒரு கிளார்க்காக தொழில் புரிந்தார். வேலையால் வந்ததும் கமுகும் வாழையும் சூழ் நாத கிணற்றடியில் முகம் கால் அலம்புவார். பக்கத்துப் பிள்ளையார் கோயில் போய் வருவார். கச்சான் கடலை கொண்டு வருவார். சில நாட்களில் வாய் சிவக்கும் சூப்பி இனிப்பு வரும்.

அவர் மிகவும் கெட்டிக்காரரர் மூளை நிறைய கணக்கு. அவர் ஏன் வெறும் கிளார்க் ஆனார் ஏன் ஒரு டாக்டராக வில்லை என்று சிந்திப்பேன். ஒரு வேளை கெட்டித்தனம் கிளார்க்கான பின்புதான் வந்ததோ அல்லது அவருக்குப் பாடம்

சொல்லித்தர ஒரு அங்கிள் இருக்கவில் லையோ அங்கிளினால் நான் படிப்பில் முன் னேறினேன். வகுப்பில் மூன்றாம் ஸ்தா னத்தை எட்டிவிட்டேன்.

அங்குள் எனக்குப் பத்துக் கேள்விகள் தருவார். எட்டுக் கேள்விகளுக்கு மேல்வு டைகள் சரியாகப் போட்டால் அவர் முகம் படமெடுத்து விரிய கெட்டிக்காரி என்பார் அதில் ஒரு அட்டகாசம். ஒரு நாள் ஆன்றி பக்கத்து வீடு போயிருந்தா. நான் பத்துக் கேள்விகளுக்கும் சரியான விடைகள் எழுதினேன். அன்று பாராட்டு இல்லை பதிலாக ஒரு விதமான சிரிப்பு அவர் முகத் தில் துடிதுடித்தது. துடிக்கும் வாயால் எனது உதடுகளைக் கவ்வி விட்டார். எனது உடல் முழுவதும் ஒரு உதறல் பரவியது உச்சி முதல் உள்ளங் கால்வரை. சிறிது நேரம் மௌனத்ள தின் அடிமை ஆனேன். இதற்கு முன் ஒரு நாள் அவர் பாராட்டுடன் எனது கன்னத் தில் கொஞ்சியது ஞாபகம் வந்தது. அப்போ அது செல்லமாக வேடிக்கையாக இருந்தது. இது வேடிக்கையாகத் தோன்றவில்லை.

"அங்கிள் என்ன இது?"

"இனிமேல் இல்லை" என்றார் அங்கிள் தானே மனத்தில் சமாதானம் ஏற்பட்டது மறதி பிறந்தது.

ஆன்றியின் வயிறு பெருத்துக்கொண்டு வந்தது. எங்கள் பிள்ளையார் கோயிலில் பெண்களின் தவிலும் நாதஸ்வரமும் ஊரிலே ஒரே வஷேசம். தவில்காரி நடப்பது போல் ஆன்றி இப்போ நடந்தா. அந்தி வேளையில் ஆன்றி சற்று சரிந்து படுத்துச் சிறிது நேரம் தனது அறையில் தூங்குவா. அந்த நேரம் அங்கிள் எனக்குப் பாடம் சொல்லித் தருவார். இப்போ எனது உதடு களை அங்கிள் தனது நாக்கு நுனியால் நனைப்பது எனக்குப் பழக்கமாகி விட்டது. அது ஆன்றிக்குத் தெரியப்படாத ஒன்று என்று மட்டும் பயத்துடன் உணர்ந்தேன். ஏன் தெரிய வேண்டும். இப்படியாக ஆன்றிக் குத் தெரியப்படாத சில்லரைகள் இன்னும் உண்டு.

நான் ஐந்தாம் வகுப்பு ஸ்கொலர்ஷிப் பரீட்சையில் சித்தியடைந்து ஒரு பெரிய கல்லூரியில் சேர்க்கப் பட்டேன். அங்கிள் படிப்பித்த தயன் அது. நான் அவருக்கு மிக வும் கடமைப்பட்டேன். நான் பாய்ந்து வளர்வதை உடலால் உணர்ந்தேன். அங்கிள் இப்போதும் முன்னம் போல இல்லாவிடி னும் அவ்வப்போது கணக்குப் புத்தகத்தைக் கொண்டுவா என்று அழைத்துப் படிப்பித் தார்.

ஒரு நாள்... அது சில்லறைச் சம்பவம் அல்ல. அன்று ஆன்றி குழந்தை பெறுவதற் காக யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டா. அன்று...

நான் கோப்பாய் அசிரிய கலாசாலை யில் படிக்கும் போது ஒரு கருத்தரங்கு நடை பெற்றது. சிறுவர் துஷ்பிரயேகம் என்பது கருத்தரங்கின் விடயம். ஒரு டாக்டர் பேசி னார். அவர் பேச்சிலிருந்து அன்று எனக்கு நடைபெற்றது பாலியல் வல்லுறவு என் பதை அறிந்து கொண்டேன். டாக்டர் பாலி யல் வல்லுறவைப் பற்றிக் கூறினார். அது எவ்வளவு பொருத்தம் நினைக்க இப் போதும் வலிப்பது போல் இரத்தம் கசிவது போல் ஐயோ...

அதற்குமுன் அங்கிள் செய்தவை எல் லாம் நான் அனுபவித்த சில்லறைகள் எல் லாம் பாலியல் செக்ஸ் சம்மந்தமானவை என்றும் பாலியல் வல்லுறவின் முன்னோடி கள் என்றும் டாக்டர் கூறியதிலிருந்து தெளி வானது. இவற்றைப் பிள்ளைகள் அறிந்திருந் தால் பாலியல் வல்லுறவிலிருந்து தப்புவ தற்கு முடியும் என்று டாக்டர் கூறினார். ஆனால் அந்தக்காலம் நான் தப்புவது எப்படி. அங்கிள்தானே. நான் அங்கிளுக்கு எவ்வளவு கடமைப்பட்டிருந்தேன். டாக்டர் அங்கிள் பட்டியலில் இன்னும் எத்தனை யோ உறவு முறைகளை எடுத்துரைத்தார்.

அவற்றைக் கேட்கும்போது மனம் அசிங்கத்தில் புழுப்போல புரண்டது. அந்த உறவுகள் ஆசிரியர் தலைமை ஆசிரியர் டயூஷன் மாஸ்டர் தொழிலதிபர் சாமியார் வீட்டிலே அத்தான் மச்சான் மாமன் இப்படியாக ஆண்கள் ஆண்கள்...

"கலியாணம் முன் பாலுறவு ?" அந்தக் கேள்விக்கு "ஆம்" என்று விடை அளித்தேன். சரிதானே! அனுபவமா அது?

❑

ஆமாம், நான் டொக்டர் ஆகவில்லை. எமது நாடுபோல் எனது குடும்பமும் அரசியல் - இராணுவ துஷ்பிரயோகத்திற்கு ஆளாகியது. முல்லைத்தீவில் அப்பா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். முல்லைத்தீவிலிருந்து நெல் மூட்டைகள் ஆன்றி வீட்டிற்கு வருவது நின்றது. மிக மன வேதனையுடன், அங்கே அம்மாவும் தம்பியும் தங்கள் சோற்றுக்குக் கஷ்டப்படுவதாக அறிந்தேன். எனது தம்பி நிவாரணப் பொருளாக அரிசி கொண்டு வரப் பையுடன் கூட்டுறவு சங்கக் கடைக்குச் சென்று கியூ வரிசையில் நிற்பானாம்... பிச்சை! அம்மாவின் கடிதம் படிக்கும்போது இதயம் நொந்தது. எட்டு மாதத்தில் தம்பி சுளகிலே அரிசிமா மேல் நடைபயில்வதை கண்கள் நினைத்தன. சோறும் தண்ணீரும் தந்த எங்கள் வயலும் வானமும் ஏவுகணைகளுக்கும் எரிகுண்டுகளுக்கும் இலக்காகி மயானமாகின. வயல் வரப்புகளுக்கு மேல் இரும்புத் தொப்பிகளில் இலை குழை சூடிய பிசாசுகள் இரவும் பகலும் உலாவினவாம்.

நான் ஆரம்பக் கல்வியை விரைவில் முடித்து விட்டு கோப்பாய் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்தேன். அதன் பின்பு ஒரு பாடசாலையில் ஆசிரியை ஆனேன். அங்கே ஐந்தாம் வகுப்பு மாணவிகள் சிலர் 'அன்று' என்னைப் போல்... என்னைப் போலவே வாளிப்பாக இருந்தார்கள். நான் அவர்களுக்குப் பக்குவமாகப் பாலியலைக் கற்பித்தேன். ஆண் பெண் உறவு பற்றியும், அதன் பிறழ்விவு பற்றியும் பயன்படச் சொன்னேன். எனது வகுப்பு மாணவி ஒருத்தியின் தாய், எங்கள் பாடசாலையில் சக ஆசிரியை. ஆச்சி வேஷம் போடும் முப்பத்தைந்து நாற்பது சொச்சம் வயதினர். எனது பாலியல் அறிவுரை விவகாரத்தை அறிந்து அதிபருக்குப் புகார் செய்திருக்கின்றனர். அதிபர் என்னை அழைத்து முகம் தொடக்கம் முழங்கால் வரை தாறுமாறாகப் பார்த்தார். 'பிள்ளைகளைக் கெடுக்க வேண்டாம்' என்று சுருக்கமாகச் சீறினார். நான் ஒன்றும் பேசாமல் வகுப்பிற்குத் திரும்பினேன். எண்ணாமல் கொள்ளாமல் எனது சேலையின் கொசுவத்தைத் தட்டிச் சீராக்கிக் கொண்டேன்.

இரண்டு வாரங்கள் கழிந்தன. ஏதோ நான்தான் சொல்லி ஏற்பாடு செய்தது போல், வேறு ஒரு கிராமப் பாடசாலையின் தலைமை வாத்தியார் ஒருவர் ஆறாம் வகுப்பு மாணவி ஒருத்தியுடன் 'தகாத முறையில் பழகியதால், ஊராரால் நையப் புடைக்கப்பட்டு, தூரத்துப் பாடசாலைக்கு மாறுதல் பெற்றதாகப் பத்திரிக்கைச் செய்திகள் பரபரப்பு ஏற்படுத்தின. எங்கள் பாடசாலை அதிபர் பெண்கள் முகம் நிமிர்ந்து பார்க்காமல் கழிச்சல் நோயுற்று கோழி போல் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு திரிந்தார். ஏதோ தான்தான் அந்தப்பிள்ளையைக் கெடுத்தவர் போலவும், அடிஉதை வாங்கியது போலவும் அந்த ஆசிரியையும் முன்னம் 'மிஸ்' என்று என்னை அழைத்தவ, இப்போ தங்கச்சி எனறா. நான் தொடர்ந்து பாலியல் பாதுகாப்பு விடயங்களைப் பிள்ளைகளுக்குப் படிப்பித்தேன்.

நாங்கள் விடைகள் எழுதிக் கொண்டிருந்த வினாக்கொத்தில் என்னுடன் சமரசம் செய்த இரு கேள்விகள் உண்டு.

"பாலியல் சம்பந்தமாக வளர்ந்த பிள்ளைகளுக்கச் சொல்லிக் கொடுப்பதற்கு உங்களுக்குச் சந்தர்ப்பம் உண்டா?"

விடையாக "ஆம்" போட்டேன்.

"சந்தர்ப்பம் உண்டானால், நீங்கள் சொல்லிக் கொடுப்பது உண்டா?"

"ஆம்" - ஆகா எவ்வளவு மன நிறைவு!

அந்தப் பெண்கள் புறாவும் பேட்டுக் கோழியும் எங்களை ஆவலுடன் ஆசுவாசமாயும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தனர். சங்கத் தலைவி அந்த வினாக் கொத்தைப் படித்துக் கொண்டிருந்தா, விடைகள் எழுதவில்லை. ஆனால் அவளின் முகத்தில் சுயசரிதம் கூத்தாடியது. எங்கள் கற்பின் சுகத்தைப் பரிசோதித்த இன்னும் ஒரு கேள்வி என்னைப் படுக்கை அறைக்குக் கொண்டு சென்றது. அன்று (மீண்டும்; ஒரு 'அன்று') அவர் இல்லை.

*கலியாணத்தின் பின் உங்கள் தாம்பத்திய வாழ்வுக்கு அப்பால் பாலியல் உடலுறவு ஏற்பட்டது உண்டா?" அதாவது கணவன் அல்லாத ஒருவருடன்."*

இந்தக் கேள்விக்கும் விடையாக 'ஆம்', 'இல்லை' மட்டும் போடவேண்டும். எனக்கு அந்த இரு பெண்கள் மேல் ஆத்திர ஆத்திரமாச் சினம் வந்தது. அனுபவம் இல்லாத அவசரிக்காரிகள்! "ஆம்" அல்லது "இல்லை" ஒருசாதனைச்சிறுகதையை எப்படி இரண்டு எழுத்துக்களில் அல்லது மூன்று எழுத்துக்களில் எழுதுவது? ஒரு ஊர்பேர் அறியாத நோதைக் கவிதையைக்கூட தொடுக்க முடியுமா? என்னைப் பொறுத்தவரை அவனுடைய பெயரை மட்டும் கிறுக்க முடியும் - "சுரேஷ்" மூன்று எழுத்து போதுமா?

நான் ஒரு லொறி டிரைவரைக் கலியாணம் செய்தேன். மயில்வாகனம் (மயுலு) என்ற அவர், என்னிலும் பத்து வயதுக்கு மூத்தவர். "பத்தினி" என்ற விழுமத்தின் ஆண்பால் சிறப்பு அவரின் உரிமை. அவர் பெய்யெனப் பெய்யும் மழை, எமது ஆறு வருட தாம்பத்திய வாழ்வில் நான் உணர்ந்த சத்தியம் அதுவாகும். ஒரு அப்பட்டமான அப்பாவி, தன்னைப் போல்தான் அவனும் இவனும் என்று நம்பும் வெள்ளைப் பிள்ளை. ஆனால் கை அசைவில் தசைகள் பொம்மும் பலசாலி. நள்ளிரவில் வன்னிக் காட்டில் லொறி லடாய் பண்ணினாலும் தானே திருத்தி ஓட்டும் திறம் மெக்கானிக். ஆனால் கொழும்பு ஓட்டம் செல்லும் போது யாரை யாவது ஒருவரைத் துணைக்கு அழைத்துச் செல்வார். அவர்களில் ஒருவன் தான் சுரேஷ்.

அன்று, சுரேஷ் அவருடன் கொழும்பு போகவில்லை. வேறு ஒருவர் சென்றார். சுரேஷ் எங்களுக்குத் துணையாக வீட்டில் தங்கினான். இது முதல் தடவை அல்ல. என் கணவனின் சகாக்களில் சுரேஷ் மட்டும் தான் சிலவேளைகளடில் இங்கே நிற்பான். வீட்டுக்குத் துணை என்று என்னவருக்கு நிம்மதி. எங்கள் குடும்பம் சிறியது. நான், அவர், எங்கள் ஐந்து வயது மகன் சூரியன், என்னவரின் தாய் சதா இருமிக் கக்கும் அறுபது வயது நோஞ்சி, இருமாத வேளையில் தூங்கினால் கனவும் காணச் சிரமப் படாத என் மாமி, தன் மகனுக்கு ஏற்ற அடுத்த அப்பாவி.

சுரேஷ் என்னிலும் ஐந்து ஆறு வயதுக்கு இளையவன், ஆமாம் ஒரு தம்பி போன்றவன், தாய் தகப்பனுடன் நான்கு சகோதரிகள் கொண்ட குடும்பத்தில் நடுப்பிள்ளை. லொறியுடன் கொழும்பு செல்லாத நாட்களில் கொம்பூட்டர் படிப்பவன். மற்ற நேரங்களில் ரி.வி போதையில் இருப்பானாம். ஆண் அழகன், பாக்கு நீரிணைக்கு (PALK STRAIT) வடக்கே பிறந்திருந்தால் மாதவன், விஜய் போன்றவர்களுக்குத் திரைகளில் போட்டியாக இருந்திருப்பான். இரவல் தேவையில்லாத குரல் சுத்தம், இப்போதும் என்ன? அவனது கற்பனை உலகில், தான் விரும்பும் நிழல் நாயகிகளுடன் அவனும் தழுவுகிறான், புரளுகிறான், ஊர் ஓராக 'டுயற்'றாக வாய் அசைக்கிறான்... இப்படி அவனுடைய மூத்த அக்கா கூறுவாள், சிரிப்பாள். அவள் என் கோவில் சிநேகிதி. எனது

வயதிருக்கும். தம்பியார் போல் முகம். நிலா நிறம். அவனைப் போலவே அவளுக்கும் முழிக்கும் மூக்கு, வர்ணனைக்கு அப்பால் ஒரு சூட்சும வசியம் அவளுடையது. அது அவர்கள் குடும்பத்துக்கு ஒரு கொடையோ?

சுரேஷ் என்றால் எனது மகன் சூரியனுக்கு சொக்லெற் ஐஸ்கிறீம் குதூகலம். சுரேஷ் எங்கள் வீட்டில் தங்கும் நாட்களில் அவனுடன்தான் ஹோலில் படுப்பான். என்னுடன் அல்ல. சிலவேளைகளில் நடுச்சாமத்தில் ஓடி வந்து என்னுடன் படுப்பான். "அம்மா கரடி வந்தது" என்ற குரல் கேட்கும். மறுபடியும் தூக்கம், நான் அணைத்துக் கொள்வேன், நானும் பாதித் தூக்கத்தில்.

கரடி மட்டும் அல்ல புலி சிங்கம் நாய் நரி ஓநாய்... 'சிநேரங்களில் சில மிருகங்கள்' வரும்போலும். றயில் பிளேன் ஹெலிகொப்ரர் இவற்றில் வரும் ஈசாப், பஞ்சதந்திர, தெனாலிராமன் கதைகளின் கருக்களுக்கு ஜீன்ஸ் மாற்று வேடிக்கை நடக்கும். அரசடிப் பிள்ளையார் முன்னால் ஒரு கொம்பியற்றர், அவர் கையிலே மவுஸ், முருகன் கையிலே ஏ.கே.47... எனக்கு மட்டும் என்ன? சுரேஷ் தங்கும் இரவு சந்தோஷம் தான். அவனுடைய சிறுசிறு கதைகள் கேட்பதற்கு தென்கச்சி கோ.சுவாமிநாதன் ஐயா எங்கள் வீட்டிற்கு வந்ததுபோல. அவன் ஊர்ச் செய்திகளைப் புதினமாக்கிக் கூறுவான். அதற்குள் தத்துவம், வித்தகம், மருத்துவம், அரசியல், போர், பயங்கரவாதம் இருக்கும். முடிவில் ஏப்பம்போல் ஒரு ஹாஸ்யம். "உனக்கு இரண்டு மூளையெடா" என்பேன். "அதில் ஒன்று கிறுக்கு".

"அந்த நாய், அந்த அந்தி, அந்த அர்த்த ராத்திரி..."

சூரியன் ஹோலிலே தூங்கிவிட்டான். நானும் சுரேஷும் ரி.வி பார்த்துக் கொண்டிருந்தோம். ஒரு விழல் படம் ஓடிக் கொண்டிருந்தது. தமிழ்ப்படம்தான். காதல் காட்சிகளின் போது இயக்குநர், காதலனையும், 'கமரான்'னையும் அடக்க முடியாமல் திண்டாடினார் போல் தோன்றியது, 'கட்' என்ற வார்த்தையையே மறந்து விட்டார், அல்லது தன்னையே மறந்தாரோ! போதாத பாவத்திற்கு சுரேஷ் அந்தக் காட்சிகளைப் பார்த்துச் சோடித்து சிங்காரித்து அலட்டிக் கொண்டிருந்தான். உணர்ச்சி வசப்பட்ட கிறிக்கற் மாட்ச் உடன் வர்ணனையாளர் போல். சுரேஷ் என்னுடன் பேசும் போதும் விரசமான வார்த்தைகள், இருண்ட வீட்டு முகட்டில் வெளவால்கள்போல் குடி கொண்டன. எல்லர் தலைகீழாக; நான் எழுந்து விட்டேன். "போய்ப் படு" என்றேன். சூரியனை ஒரு மெல்லிய கம்பளிப் போர்வையால் போர்த்தினேன். ரி.வி.யை நிற்பாட்டினேன். எனது அறைக்குப் போய் விட்டேன். பனிக் காலம், ஆனால் நான் போர்ப்பதில்லை, தாவணி போதும்.

சாமம்போலும் ஒரு நாயும் சத்தமிடவில்லை. என்ன நடந்தது எனக்கு? ஏன் அப்படி உலக்கைபோல் தூங்கினேன்? திடுக்கிட்டு விழித்தபோது எனது இரவிக் கையின் பாதுகாப்பு ஊசிகளில் ஒன்று (Safty Pin) கழற்றப்பட்டிருந்தது. தாவணியையும் காணவில்லை. (எங்கே எடி தொலைந்தாய்?) கட்டிலுக்குப் பக்கத்தில் சுரேஷ் நின்றான் இருட்டில் ஒரு கடும் கறுப்பு உருவமாக. கட்டிலில் இருந்து ஆவேசமாக எழுந்தேன் அவன் மூச்சு என் முகத்தில் காட்டு எருமை போல் முட்டியது. "அக்கா"... எனது இடது கையால் குலைந்த என் தாவணியைப் பிடித்தபடி வலது கையால் கடுமையாக அவனை அறைந்தேன். வீமனின் மனைவிக்கு வராத துணிவுடனும் பலத்துடனும். அடி தவறாமல் மூஞ்சியில் விழுந்திருக்க வேண்டும். தடுமாறிச் சுழன்றான். உம், மயிலுவின் மனைவி நான்!

"போடா போய்ப் படடா... பொறுக்க வடுவா"... எனது ஏச்சும் மூச்சும் இப்போது பாய்ந்தது.

கிழவி "என்ன பிள்ளை" என்று கேட்கும் ஓசை வந்தது. அதுகூட விழித்துவிட்டது. "ஒன்றுமில்லை மாமி" என்றேன். அவன் போய்ப் படுத்துவிட்டான்.

நான் சமையலறைக்குச் சென்று காய்கறி வெட்டும் கத்தியை எடுத்து வந்தேன். இந்தக் கத்தி அவர் கொழும்பிலிருந்து கொண்டு வந்தது. உருக்கினால் ஆனது. ஹோலைத் தாண்டிப் போகும்போது கொதிக்கும் உலை போல் நெஞ்சுக்குள் நடுங்கும் ஓசைகள்: 'துரோகி, நம்பிக்கைத் துரோகி, நன்றி கெட்ட பிசாசு..."

"அங்கபலை வந்தால் துண்டாக்குவேன்" என்றேன். பிள்ளை எழும்புவதற்கு முன் போய்விடு. இனிமேல் என் கண்ணில் முழிக்கப்படாது."

நான் படுக்கும்போது தாலியைக் கழற் றித் தலையணைக்குக் கீழே வைப்பது உண்டு. கத்தியையும் தலையணைக்குக் கீழே வைத்து விட்டுப் படுத்தேன். தாலியுடன் அது. தூக் கம் வரவில்லை. அல்ல சிறிது தூங்கி விட்டேன் போலும். சூரியன் ஓடி வந்து என் அருகில் படுத்தபோது திடுக் குற்றேன். "அம்மா சுரேஷ் அண்ணா எங்கே யம்மா?" என்று கேட்டான். வெளியே விடிந்து கொண்டிருந் தது.

எனது தோழிகள் தங்கள் வினாக் கொத் துக்களை அந்தப் பெண்களுக்குக் கொடுத் துக் கொண்டிருந்தனர். நான் சற்று தாம தித்துவிட்டேமன். பொல்லாத ஞாபகங் கள்! அந்தக் கேள்வி: கலியாணத்தின் பின்பு உங்களுக்குப் பாலியல் அனுபவம் உண்டா? அதாவது கணவருக்கு அப்பால்..

"இல்லை" விடையைச் சுற்றி வட்டமிட் டேன். அந்த விடைதான் என் ஆத்மாவின் இரகசியம்.

*- நன்றி வெளிச்சம் 2004*

## பொன்.குமார்

........................

### கவிதைகள்

### உடம்பு

யார் யாரோ வருகிறார்கள்
யார் யாரோ போகிறார்கள்
என்ன என்னமோ செய்கிறார்கள்
ஏது ஏதோ பேசுகிறார்கள்
ஒன்றுமே செய்யாமல்
உட்கார்ந்து இருக்கிறார்கள்
ஒரு சிலர்
இவையெல்லாம் அறியாமல்
நேற்று உயிர்விட்ட
உடம்பு.

### ஹைக்கூ

வானத்தில் பறக்கும்
தரையில் இறங்கும்
அலுமினியப் பறவை

தெரியப்படுத்தியது
தம்பதியர் நெருக்கம்
தெருக் கோலம்

பூவை நுகர
கையெல்லாம் வீசுகிறது
பூ வாசம்.

பூப்பூக்காமலே
காய்த்துத் தொங்குகிறது
வௌவால்

# தன்மானப் புலமை

கலாநிதி க. சொக்கலிங்கம் (சொக்கன்)

"மாமியும் மருதியும் மருவி வாழ்தல் அரிது" என்பது ஏழைப் புலவன் ஒருவனின் வேதனைக் குமுறலிலே புதுமொழியாகத் தோன்றி இன்று பழமொழியாக நிலைத்து விட்டது. மாமி என்றது இலக்குமியை. மருதி என்றது சரஸ்வதியை. அதாவது கல்வியும் செல்வமும் ஒருவரிடத்தே ஒரு சேர அமைவதில்லை என்பதே இதன் பொருள். ஆனால் வெள்ளத்தாலும், வெந் தணலாலும், கள்வராலும், கவரப்படக் கூடிய செல்வத்தின் நிலையாமையினை உணர்ந்த குமரகுருபரர், சகல கலா வல்லி யைக் கல்விப் பெருஞ்செல்வப் பேறே" என்று விளித்தழைப் பதையும் இவ்விடத்தில் நோக்கல் வேண்டும். கல்வியைப் பெருஞ் செல்வமாக அவர் போற்றுகின்றார். கல்வி யாலும், கற்பனையாலும் படைப்பாற்றலாலும் முழுநிறைவு கொண்ட வனே புலவன். அவற்றால் உண்டாகும் மன நிறைவே அவனுக் குக் காப்பரண். அவன் யார்க்கும் அடிமையாகான். தன்னைப் படைத்தளித்துக் காத்தருளும் முருகப் பெரு மானையே *"மாலை மார்ப! நூலறி புலவ!"* (திருமுரு காற்றுப் படை : நக்கீரர்) என்று தன் இனமாகக் கண்டு இறுமர்ப்பது சிறந்த புலவனின் உயர்ந்த பண்பு. இவன் போன்றோரைப் "பொய்யடிமை இல்லாத புலவர்" என்று பாராட்டி அவர்களுக்குத் தாம் அடியவர் என்று சுந்தரர் இறுமாக்கக் காண்கிறோம்.

"பொய்யடிமையில்லாத புலவர்க்கும் அடியேன் (திருத் தொண்டத் தொகை) என்பது அவர்தம் திருவாக்கு, இத்தயோர் வாய்க்கொண்டு மானிடம் பாடாது" "தம்மையே புகழ்ந்திசை பேசினும் சார்வினுந் தொண்டர் தருகிலாப் பொய்மையாள ரைப் பாடாது, பரமன் புகழினையே பாட்டிசைப்பர்.

ஆனால் புலவர்கள் எல்லாருமே மானிடம் பாடாது மகேசு ரனையே பாடியவர்கள் அல்லர். வறுமையும் தேவைகளும், குடும்பத்தளைகளும் இவர்களை "வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி" (புற நானூறு 47) அவர்களின் புகழ் பாடிப் பரிசில் பெறவைத்தன. சங்ககாலப் புலவர்களிற் பலர் தமது பாட்டுத் திறத்தாலே பாராண்ட மன்னரையும் குறுநிலத் தலைவர்களையும் வீர மறவர்களையும் புகழ்ந்து ஏத்தக் காண் கிறோம்.

அக்காலப் புலவன் ஒருவன் வறுமையால் அலைப்புண்டு வாழ்வையே வெறுத்த போதிலும் குடும்பத் தளையிலே சிக்குண்டு அத்தளையினின்றும் விடுபட முடியாது வருந்தும் வருத்தம் கல்நெஞ்சையும் கசிந்துருக வைப்பதாகும்.

அதன்எறிந் தன்ன நெடுவெண் களரின்
ஒருவன் ஆட்டும் புல்வாய் போல
ஓடி உய்தலுங் கூடுமென்
ஒக்கல் வாழ்க்கை தட்கும் காலே.

*(புறநானூறு 193)*

தோலை விரித்து விட்டது போல (மரம் செடி கொடிகளற்ற) விளங்கும் வெறு வெளியிலே வேட்டுவன் ஒருவன் துரத்துகின்ற மான் தப்பிப் பிழைக்கவும் கூடும். ஆனால் (வறுமையால் துரத்துண்ணும்) நான் என் காலிலே உறவுகளாகிய தளை பிணித்துக் கிடப்பதால் (தப்புதல் இயலாது) என்பது இப்பாட்டின் பொருள். புல்வாய் - மான். அதன் தோல் களர்- களர்நிலம். தட்கும் - தளையிடும்.

இவ்வறுமை காரணமாகத் தமது பசியைப் போக்கிடப்பாடி இரந்துண்பதே பண்டைப் புலவரின் தொழிலாக இருந்ததா என்பது கேள்வி. அவ்வாறிருந்ததென்றே சிவராஜப் பிள்ளை போன்ற சங்க இலக்கிய ஆய்வாளர் கொள்வர். ஆனால் இவர்தம் கூற்றினைப் போதிய சான்றுகள் கொண்டு க.கைலாசபதி (முன்னாட் பேராசிரியர்-அமரர்) "வீரயுகக் கவிதை" என்ற ஆய்வு நூலில் மறுத்துரைப்பர்.

"அக்கால்ப பிரிவிலே கடினமான வாழ்வினை நடத்தி வந்த பாவாணர்கள் தம் அன்றாட உணவினைத் தேடும் பிரச்சனையை எதிர்கொள்ள வேண்டி இருந்ததால் அவர்கள் அரசன் ஒருவனோடோ குறுநிலத் தலைவன் ஒருவனோடோ தம்மை இணைத்துக் கொண்டு அத்தகையவரின் புகழினையும் சாதனைகளையும் பாடும் பணியினை மேற்கொள்ளும் நிலைக்கு உள்ளாயினர். தமது இலக்கியக் கலங்களை வாங்குவாரற்ற நிலையிலே இவர்கள் திறமையான தங்கள் புகழ்ப் பாடல்களை மிகைப்படக் கையாண்டு புரவலர் சிலரிலே உணவுக்கும் உடைக்கும் தங்கியிருக்க வேண்டியவராயினர். (தமிழ் வீரயுகக் கவிதையில்) க.கை. மேற்கோளாய் எடுத்துக் காட்டியுள்ள பந்தி)

இக்கூற்றினை மறுக்கக் கைலாசபதி காட்டியுள்ள சான்றுகள் வருமாறு

1. பாடும் பரிசே தமது தொழிலாகக் கொண்டோர் பாவாணர் மட்டுமல்லர். பாராண்ட அரசர்களுமே (தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், கடலுள் மாய்ந்த இளவழுதி, கோப்பெருஞ்சோழன் முதலியோர்" கட்டுரையாசிரியர்)

2. பாவாணரோடு பாராண்ட மன்னர் கொண்டிருந்த நெருங்கிய நட்புறவு.

இந்நட்புறவின் நெருக்கத்தினையும் சமத்துவத்தினையும் கைலாசபதி எடுத்துக் காட்டும் வகைக்குக் கீழ்க்காணும் பந்தியைச் சான்றாகக் காட்டலாம்.

"பரஸ்பர நல்லெண்ணமானது பாவலர் சிலரிடையும் காவலர் சிலரிடையும் நிலவி அது நிலையான ஆழமான நட்புற வாய்த்தழைத்துச் செழித்துள்ளது. எடுத்துக் காட்டாகப் பாரிக்கும் கபிலருக்குமிடையே நிலவிய நெருக்கமான நட்பை நோக்கலாம். ஒளவையாருக்கும் அதியமானுக்குமிடையே இருந்த நட்புறவு வேறோர் உதாரணம். (உண்டாரை நெடுநாள் வாழவைக்கத் தனக்குக் கிடைத்த நெல்லிக்கனியைத் தான் உண்ணாது ஒளவையாருக்கு அளித்தவன் அதியமான்" கட்டுரையாசிரியர்) இந்த இருவரையும் பொறுத்தவரையில் இவர்கள் தம் நண்பர்களோடு நீண்டகாலமாகவே கூடி வாழ்ந்துள்ளனர். இவர்கள் தம்முடைய புரவலர்களின் புகழார்ந்த போர்களையும் மரணங்களையும் பாடிய பல பாடல்களை விட்டுச் சென்றுள்ளனர். ஒளவையார் அதியமான் மீது 250 அடிகள் கொண்ட இருபத்திரண்டு பாடல்களைப் பாடினர் என்பதும்,

புறநானூற்றில் தனி ஒரு புலவரால் மிக அதிகமாகப் பாடற்பகுதி இது என்பதும் சுவை பயக்கும் செய்திகளாகும். (தமிழ் வீர யுகக் கவிதை - 57-58)

மற்றும் கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார் நட்பு, கோவூர்கிழார் முடியுடைய மூவேந்தருக்கும் நேர் நின்று அஞ்சாது இடித்துரைத்த அறிவுரைகள், கபிலர், பரணர், அரிசில் கிழர் முதலாம் புலவர்கள் பேகனை (மயிலுக்குப் போர்வை வழங்கிய வள்ளல்) அவன் மனைவி கண்ணகியிடம் சேர்த்து வைக்க அவனுக்கு அறுவுரை ஈந்த அருமைப்பாடு, கதகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையால் மோசிகீரனார் கவரிவீசப் பட்டதாகிய பெருமதிப்பு முதலாகச் சங்கப் புலவர் பலரும் வெறும் சோற்றுக்காகப் பாடிய பிச்சைப் புலவர்கள் அல்லர் என்ற உண்மையைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

*"மயிர்நீப்பின் வாழாக் கவிரிமா அன்னமார்*
*உயிர்நீப்பார் மானம் வரின்"*

என்ற வள்ளுவருக்கு எடுத்துக் காட்டாய் வாழ்ந்து காட்டிய புலவர்களுக்கும் பஞ்சம் இல்லை. பொன்னுக்கு வீங்கி போலப் பரிசுக்கு வீங்கித் தம்மை மதிக்காது, தம் பாடலின் சிறப்புணராது, கொடுக்க வேண்டிய காலத்தில் கொடாது காலந் தாழ்த்திப் பரிசளிக்க அதனைத் துச்சமென மதித்துத் தள்ளிய சான்றோர்களாகவும் பழந் தமிழ்ப் புலவர்கள் விளங்கியுள்ளனர். புறநானூற்றிலிருந்து இத்தகைய தன்மானப் புலமைக்கு எடுத்துக் காட்டாய் விளங்கிய புலவர் ஒருவரின் வியத்தகு மேதகைச் செயலினை நோக்குவோம்.

கோனாட்டிலே எறிச்சலூர் என்ற ஓர் ஊரில் மாடலன் மதுரக் குமரனார் என்ற பெயருடைய புலவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் பாடிப் பரிசு பெற எண்ண சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந் திருமாவளவனை நாடிச் சென்றார். அவன் அவரைக் காணவிடாது சிலநாள் அலைந்தான். கண்ட பின்னரும் பாடல் கேட்ட பின்னருங் கூடப் பரிசில் வழங்காது நீட்டித்து அலைந்தான். புலவரின் பொறுமைக்கு அவன் அளித்த தன்மானத்தைச் சீண்டி எழுச்சி பெறச் செய்தது. தகுதியற்ற ஒருவனைத் தாம் பாடித் தலைதாழ்ந்த நேர்ந்ததே என்று அழி விரக்கமும் அவரில் எழுந்தது போலும். இவை யாவும் சேர்ந்து சொற்களாக மாறித் திருமாவளவன் மனத்தைத் குத்திக் குடையுமளவிற்குப் பெருகிப் பாடல் வடிவெடுத்தன. முதலிலே பாடலின் சாரத்தினைத் தொகுத்து நோக்குவோம்.

"பெருமானே! காற்றுப்போல விசை கொண்டு பாய்ந்து செல்லும் குதிரைகள் பூட்டியனவும், உச்சியிலே கொடி அசைந்து ஆடுவனவுமான தேர்ப்படையை உடையவர் என்றும், கடல்போலப் பெருகிப் பரந்து செல்வதும் ஒளிபொருந்திய ஆயுதங்கள் தாங்கியதுமாகிய பெரும்படைக்குரியோர் என்றும் மலையெனப் பருத்த மால்யானைப் படை உடையார் என்றும் இவை கொண்டு இடியென முழங்கும் போர் முரசுடன் சென்று பகையினை வென்று பெருநிலம் கொண்டு, ஒளிபொருந்திய ஆபரணங்களை அணிந்து வெண்கொற்றக் குடைக் கீழ் ஆட்சி புரிந்திடும் பெருவேந்தரின் செல்வத்தை நாம் வியந்திடோம். நாம் வியந்து போற்றுவோர் யார் எனில் கூறுவோம். முள் வேலியின் நடுவே மறிகள் மேய்ந்து விட்ட குறியனவும், நாற்றம் மிக்கனவுமான முஞ்சைக் கீரையையும் வரட்சியோடு கூடிய புன்செய் நிலத்தில் விளைந்த வரகையும் கறியாக்கியும் சோறாக்கியும் உண்ணும் குடிகளைக் கொண்ட சிற்றூர் தலைவர்களை அவர்தம் சிறு செல்வத்தினையே நாம் வியந்து போற்றுவோம். நாம் மிகுந்த துன்பத்தை அடைந்தாலும் சிறிதும் அறிவில்லாதவருடைய செல்வத்தைப் பிறருக்கு எவ்வகையிலும் பயன்படாத செல்வத்தை நினைத்தும் பார்க்க மாட்டோம்.

ஆனால், நல்லறிவுடையோரது வறுமை

நிலையிலும் அவ்வறுமை கூடிய அளவு பயன்படுமென்பதால் அவ்வறுமையையே மிகப் பெரிதும் விரும்பி நினைத்திடுவோமாக".

(ஆகவே உன் அறிவற்ற செல்வத்தை நாம் மதிப்பதும் இல்லை. அதை வேண்டிக் காத்திருக்கப் போவதும் இல்லை. சென்று வருகிறோம் என்பது குறிப்பு) அந்தப் பாடல் இது:

வளிநடந் தன்ன வாச்செல் இவுளியோடு
கொடி நுடங்கு மிசைய தேரினர் எனாஅக்
கடல்கண் டன்ன ஒண்படைத் தானையொடு
மலைமாறு மலைக்கும் களிற்றினர் எனாஅ
உரும்உரற் றன்ன உட்குவரு முரசமொடு
செருமேம் படூஉம் வென்றியர் எனாஅ
மண்கெழு தானை ஒண்பூண் வேந்தர்
வெண்குடைச் செல்வம் வியத்தலோ இலமே
எம்மால் வியக்கப் படூஉ மோரே
இடுமுட் படப்பை மறிமேயந் தொழிந்த
குறுநறு முஞ்சைச் கொழுங்கட் குற்றடகு
புண்புல வரகின் சொன்றியொடு பெறுஉம்
சீறூர் மன்னர் ஆயினும் எம்வயிற்
பாடறிந் தொழுகும் பண்பி னாரே
மிகப்பேர் எவ்வம் உறினும் எனைத்தும்
உணர்ச்சி இல்லோர் உடைமை உள்ளோம்
நல்லறிவு உடையோர் உவந்துநனி பெரிதே
-(புறம் 197)

*(வளி-காற்று, வாச்சொல்-தாவிச் செல்லும், இவுளி-குதிரைப்படை, நுடங்கம்-அசைந்தாடும், மிசைய-மேலேயவாய், தானை-படை, உரும்-இடி உரற்றுஅன்ன-இடிப்பது போன்ற, உட்குவரும்-அஞ்சு வரும், செரு-போர், ஒண்பூண்-ஒளி பொருந்திய ஆபரணம், படப்பை-வேலி, முஞ்சை-முஞ்சைக்கீரை, புன்புலம்-புன்செய், பாடறிந்து-பண்பினை அறிந்து, எவ்வம்-துன்பம், நல்குரவு-வறுமை, உள்குதல்-நினைத்தல்)*

"நாய் விற்ற பணம் குரைக்குமா? என்று கேட்போர் பெருகிவிட்ட இந்நாள்களில், மாடலன் மதுரைக் குமரனார் போன்ற தன்மானப் புலவர் தோற்றுதற்கு இடம் உண்டா என்பது சிந்திக்கத்தக்கது.

*நன்றி: ஈழத்தமிழ்ப் புலவர் மாநாட்டுச் சிறப்பிதழ் (15.5.03)*

# நீ வருவாய் என

வருசமெல்லாம் வசந்தமாகி
இதயத்தைத் திருடி
இனிமையைத் தந்தவளே

துள்ளும் நதியாகத் தோன்றி
நெஞ்சினிலே அலைமோதி
துள்ளாத மனதையும் துள்ள வைத்தவளே

கார் மேகமாய்த் தோன்றி
காதலை கருவறையாக்கி பாசதீபங்கள் ஏற்றி
உள்ளத்தைக் கொள்ளை கொண்டவளே

கோபுரமாய்த் தோன்றி
தாலாட்டுப் பாடி
இன்ப மழை பொழிந்து
தாயாக மாறியவளே

புள்ளி மானாய்த் தோன்றி
அடிப்புல் மேய்ந்து
உப்பாக உறைந்து
உயிரில் கலந்தவளே

காலையில் எழுந்து
காதல் வாசம் தந்து
பூவுலகில் தோன்றி
பூவாசம் தந்தவளே

வானவில்லாய்த் தோன்றி
வாலிபத்தைத் திருடி
காதல் விதையாகி
கண்களால் கைது செய்தவளே

அன்பைத் தொடர்கதை ஆக்கி
குருதியில் உறைந்தவளே
காதல் வந்தால் சொல்லி அனுப்பு
உயிரோடு இருந்தால் வருகின்றேன்.

*- குலோத்துங்கன் பிரகா'ஸ்*

# மாயாவதியின் கதை

– செம்பியன் செல்வன்

"புரிந்துணர்வுப் போர் நிறுத்தம்", "தற்காலிகப் பேச்சு வார்த்தை", "புலிகளே முன்வரும் போர்நிறுத்தம்", "இனி வடக்குக்கும் போய்வரலாம்", "ஏ-9 பாதை திறப்பு", "ஆஹா!" இனி வடக்குக்கும் தெற்குக்கும் போக்கு வரத்துக்கு எந்தத் தடையுமில்லை..." "நாகதீபத்துக்குச் சென்று எத்தனை வருடங்களாகி விட்டன", "அந்தப் புத்தபகவானின் கருணை விழிகளின் முன்றலிலே அன்றலர்ந்த வெண்தாமரைகளாகிப் பனித்துளி மின்னக் கிடந்த காலைப் பொழுதுகள்தான் எத்தனை...? ஆத்ம லயமும், சுருதியும் பிரபஞ்ச வெளியில் மோனரகஸ்யங்களுடன் ஒன்றி... ஒரே வெளிச்ச வீட்டில் வாசம் செய்த புலரிகள்தான் என்ன சுகமானவை!

மாயாவதி கனவுகளில் ஆழ்ந்து போனாள்."அம்மே!... அம்மே!... யாரோ உலுக்கி எழுப்புகிறார்கள்.

மகன்... கருணாரத்னா வாலிப மிடுக்குடன் நிற்கிறான்.

"ஆ!... எவ்வளவு வளர்ந்து விட்டான்!... அவனையே வைத்த விழி மூடாமல் ஆர்வத்துடன் பார்த்தாள். அவன், யாழ்ப்பாணத்திலிருந்து நாம் வீட்டைத் துறந்து, பேக்கரியை விட்டு, எல்லாவற்றையும் குடும்ப நண்பர்... சிவப்பிரகாசத்திடம் "என்ன செய்வியோ, ஏது செய்வியோ,... எல்லாம் உன் பொறுப்பு! என்று ஒப்படைத்துவிட்டுப் புறப்பட்டபோது இவன் கைக்குழந்தை. இவன் அழுதபோது அம்மா! என்றது இப்போது ஞாபகம் வருகிறது. ஆனால் இன்றோ...?

வடக்கு என்றால் முகத்தில் வாட்டம் வருகிறது. எங்களது சொத்து சுக மெல்லாவற்றையும் பறித்துக் கொண்டு எங்கள் நிலத்திலிருந்து துரத்தி அனுப்பியவர்கள்!... துவேஷம் கசந்து வழிகிறது. எண்பதுக்கு முன்னும் பின்னுமாகப் பிறந்த சந்ததிகள் இருபக்கமும் தத்தம் சூழல்களிலிருந்து சிந்திக்கப் பழகிவிட்டார்கள். மோசமான சூழலை ஏற்படுத்திய அரசியல் வாதிகளை மறந்து சுயநலங்களை மறந்து அடித்துப் பிடிக்கத் தொடங்கி விட்டார்கள்.

எத்தனை அழிவு, இழப்பு, உயிர்,பொருள், சுகம்,அமைதி, விழிகள் அவனை வெறித்துப் பார்த்தனவேயொழிய,அவன் புலன்கள் எல்லாம் சப்த சமாதியாகி, எங்கோ ஒரு மையப் புள்ளியில் ஒடுங்கியதென...

யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தை காலை நாலு மணியளவிலேயே உயிர்ப்புக் கொள்ளத் தொடங்கி விடும். யாழ்ப்பாணம் புகையிரத நிலையப் பரபரப்பு சந்தி வரைக்கும் நிலவும். காலை யாழ்தேவியில் கொழும்பு செல்லும் பயணிகள் டாக்ஸி... கார்... சைக்கிள் 'கரியரில்' பயணம் செய்யும் எல்லாரும் சந்திக்கடை... மலையாளத்தான் கடை... மாதவன் கடை... எனப்பல பெயர்களில் அழைக்கப்பட்டு... 'சுடுசுடு மசால் வடை', கிழங்கும் இஞ்சியும் போடப்பட்ட உழுந்து வடை, அற்புதமான தேநீர் என்ப வற்றுக்காக இறங்கித்தான் போவார்கள். அதனருகே இவர்கள் வீடும், வளவும் பாண் பேக்கரியும் இங்கும் வியாபாரத்துக்குப் பஞ்சமில்லை. இவர்களின் பாணுக்கும், சீனிச் சம்பலுக்கும் மாலு பணிசுக்கும் பெரிய கிராக்கி எல்லாவற்றுக்கும் காரணம் சுத்தம்... சுவை... நிறைவு...மலிவு...

வீதியில் வடக்கு நோக்கித் திரும்ப, இடது வளைவில் ஸ்ரீநாகவிகாரையும் விழித்தெழும்பியிருக்கும். 'பிரித்' ஓதும் ஒலிகள் எழ ஆரம்பிக்கும். ஆலமரக் கிளிகளும், மஞ்சள் மைனாக்களும் கடற்காக்கைகளும், சில வேளைகளில் செம்போத்துக்களுமென பல்லினப் பட்சிகள் படபடத்துப் பறக்கும் ஒலிகள் பிரதேசத்தையே மயக்கங் கொள்ள வைக்க, காலை இளந்தென்றல் காவிவரும் நல்லூர்க் கந்தன் ஆலயமணியோசையுடன், ஏனைய சிறுகோயில்களின் பூசைமணி யோசையும், சோனகர் தெருவிலிருந்தும் பெரிய கடை, காங்கேசன்துறை வீதியிலிருந்தும்- பள்ளிவாசல்களிலிருந்தும் - வந்து கலக்கும் "பாங்கு" ஒலிகள் இடையிடையே வந்து இணையும். தெய்வீகம் இணையும் மானிடமா? மானிடத்தின் இயல்பான இயற்கையா?

ஆரியகுளம் தெருவோர வாகை மரங்கள் எச்ச மிடுவதுபோல் விழும் காய்களால் நீர் வளயமிட்டு அழகுக் கோலமிடும். படிப் படியாகப் பாலாலி வீதி, பருத்தித்துறை வீதி எல்லாமே விழிப்புக்காணத் தொடங்கி விடும். 'முதல் பஸ்'கள் ஆஸ்பத்திரி, பெரிய கடை என ஓட ஆரம்பித்து விடும். ஆரிய குளம் சந்தியிலிருந்து ஒரு ஆரை எடுத்து வட்டம் போட்டால், கச்சேரி, பிரபல பாடசாலைகள், கோயில்கள், சந்தைகள் எல்லாம் அதற்குள் அடங்கிவிடும். பெரிய பெரிய மாளிகைளும், கடைகளும், மெத்தை வீடுகளும், 'சாய்ப்புக்கடைகள்' கொண்ட பறங்கித் தெருவும் (தற்போது பிரதான வீதி) உள்ளடங்கி விடும்.

காலை எட்டுமணியளவில் அவள் தன் பெற்றோருக்கு வேண்டிய உதவிகளைச் செய்துவிட்டு, 'ஸ்கூலு'க்குப் போகத் தயாராகவிருப்பாள். அவள் படிக்கும் 'சிங்களப் பாடசாலை' மிகமிக அண்மையிலிருந்தது. அவள் வீட்டிலிருந்து பலாலி வீதி வழியாகவோ, அருகிலிலுள்ள புகையிரதப் பாதை வழியாகவோ பாடசாலைக்குச் செல்லலாம். பலாலி வீதியை வெட்டிச் செல்லும் ஆஸ்பத்திரி வீதியை இடது பக்கமாகக் கடந்தால் அடைக்கல மாதா கோயில் வரும். அதன் அருகே பரந்த நிலத்தில் அவள் பாடசாலை இருந்தது. பாடசாலையில் சிங்கள நண்பிகள் இருந் தாலும் வீட்டுக்குப் பக்கமாக எல்லோருமே தமிழர்கள்தான். மொழி வேறுபாடு இவர்களிடையே இருந்ததில்லை.

ஆண்கள் விகாரைக்கு முன்னால் உள்ள பள்ள நிலத்தில் காற்பந்தோ, 'கிரிக்கெட்'டோ விளையாடுவார்கள். பெண் பிள்ளைகள் வீட்டிலேயே கெந்திப் படித்தோ, 'கிளி பூந்தோ', 'கொக்காள் வெட்டி'யோ அல்லது வீடுகளில் 'பூசை' வைத்தோ விளையாடுவார்கள். வெசாக் காலங்களில் புத்தர், விஷ்ணு, பிள்ளையார், முருகன் தெய்வங்கள் அவர்கள் பூசையில் இடம்பெறும். ஆடி,

ஆவணி மாதங்களில் முருகன் முதலிடம் பெறுவார். நல்லூர், கதிர்காமம் மார்கழியில் கிருஷ்ணன் இடம் பெறுவார். பக்கத்து வீட்டுச் சிவப்பிரகாசம் குழந்தைகளின் விளையாட்டுக்காக ஒரு சிறு கோயிலையே அவர்களுக்குக் கட்டிக் கொடுத்திருந்தார். சிறு செடிகளென வேம்பும், அரசும் இணைந்து வளர்ந்திருந்த இடத்தினடியில் சிறுவருக்காகக் கட்டிய கோயிலில் எல்லாத் தெய்வங்களும் எப்படிக் குடியேறின என்பது தெரியாமலே நிறைந்து பெரியவர்களும் பயபக்தியுடன் கொண்டாடும் கோயிலாகி விட்டது. நோய்நொடிக் காலங்களில் அந்தத் தெய்வங்களுக்கு நேர்த்திக் கடன் செய்வதும், நூல் கட்டுதும் தெய்வீகம் பெற்று விட்டது. சிவப்பிரகாசத்தின் வீடும், அங்கிருந்தவர்களும் உறவினர்களாகி விட்டனர். சிவப்பிரகாசத்தாரின் மகள் மைதிலி அவள் உயிர்த்தோழியாகி விட்டாள். இருவரையும் பிரித்துப் பார்ப்பது அரிதாகி விட்டது. ஆனாலும் பிரிய வேண்டிய வேளை வந்து விட்டது. தமிழர்களிடையே பல குழுக்கள் எதனை... யார்... எப்போது... ஏன் செய்கிறார்கள்? என்பதனை அறியமுடியாத பீதி அவர்கள் மனதை நிறைத்தது. வெளியே செல்வது குறைந்தது. வியாபாரம் படுத்தது. ஆனாலும், வீட்டை விட்டு வெளியேற மனம் வரவில்லை. அதற்கும் ஒரு நாள் காலை முடிவு வந்தது.

"படார்!.. படார்!.." என்று சம்மட்டிகளின் சப்தங்களும் பெரிய கற்கள் சரிந்து விழும் பேரோசைகளும் ஒருநாள் காலையில் அந்தப் பிரதேசத்தையே கிடு கிடுக்க வைத்தது. திடுக்கிட்டு விழித்தவள் வேகமாகச் சந்திக்கு ஓடினாள். விகாரைப் பக்கமாகவே சப்தம் எழுந்து கொண்டிருந்தது. அவளைப் பயம் பீடித்தது. மேனி நடுங்கியது. புறாக் குஞ்சின் நெஞ்சாக மார்பு துடித்தது. ஏராளமான இளைஞர்கள் தாது கோபுரத்தை இடித்துக் கொண்டிருந்தார்கள். வெண் மொட்டென வானோக்கி எழுந் திருந்த தாது கோபுரத்தின் அரசிலைகள் உதிர்ந்து கொண்டிருந்தன.

அவள் வீட்டை நோக்கி ஓடினாள்.

பயம், கண்ணீர், கவலை

எல்லாவற்றையும் நிறைத்துக் கொண்டு மறந் திருந்த சொந்தங்களைத் தேடித் தெற்கு நோக்கி அவர்கள் குடும்பம் நகர்ந்தது. மைதிலியையும், அவள் குடும்பத்தாரையும் பிரிவதுதான் அவள் வேதனையை அதிகரித்து வைத்தது.

''மீண்டும்'' ஒருக்கா யாழ்ப்பாணம் செல்ல வேண்டும். பழைய வீட்டைப் பார்க்க வேண்டும். அவள் குழந்தைகள்... கணவன்... ஏ-9 பாதை திறப்போடு ஒருக்காப் போய்ப் பார்த்திட்டுத்தான் வரவேண்டும்.

ஏ-9 பாதை திறந்த சில மாதங்களாக இந்தச் சிந்தனைகள் அவளை இயக்கிக் கொண்டிருக்கிறது. வீட்டில் அவள் பெற்றோர்கள் காலமாகி விட்டார்கள். மகனுக்கோ, கணவனுக்கோ வடக்கு என்றாலே பத்தி வருகிறது. அவர்கள் ஒழுங்காக விகாரைகளுக்கும், கோயில்களுக்கும் சென்று வருகிறார்கள்.

அங்கு புத்தரின் போதனைகளைவிட, 'புத்த மதத்தைக் காக்க இளைஞர்கள் போராட்டத்தில் குதிக்க வேண்டும்' என்ற 'மதப்' போதனைகளையே பிக்குகள் செய்து கொண்டிருந்தார்கள். இளைஞர்களைப் போர் முனைக்குச் செல்லத் தூண்டிக் கொண்டிருந்தார்கள். அனுப்பிக் கொண்டிருந்தார்கள். போரில் இறந்த உடல்கள் உருக்குலைந்து, ஊருக்கு வந்தபொழுதெல்லாம் சடலங்களுக்கு எரியூட்டுவதற்குப் பதிலாக மரணச் சடங்குக்கு வந்த இளைஞர்களுக்கு எரியூட்டிக் கொண்டிருந்தனர். அரசியல்வாதிகள், படையினர், இராணுவ அதிகாரிகள் போரினால் பெரும் பணம் ஈட்டிக் கொண்டிருந்தனர். வாழ்வுக்கும், மதத்துக்கும், வரலாற்றுக்கும் புதிய புதிய சாயம் பூசத் தொடங்கப் புதிய வர்ணம், விடயம்

இன்னதென்று புரியாத புதிய இளைஞர் களுக்கு, புத்துணர்ச்சியூட்டிக் கொண்டி ருக்க மனதில் மானிடம் மறைய துவேஷம் அருள் கொண்டது. இதற்கு மாயவதியின் கணவனும் மகனும் பலியானதில் வியப் பில்லை. வீட்டில் நாள்தோறும் விவாதம் சாப்பாட்டு அறை விவாத மேடையாகும்.

'அம்மே! அம்மே...' தாயின் வெறித்த பார்வையைக் கண்டு பயந்துபோன கருண ரத்னா அவள் தோளைப் பிடித்து உலுக்கி னான். அவள் திடுக்கிட்டு விழித்துப் பார்த் தாள். அவளை அறியாமலே வாய் மெல்ல முணு முணுத்தது. 'நான் ஒருக்கா யாழ்ப் பாணம் போய் வர வேணும்' அவனுக்கு அவள் சொன்னது கேட்டதோ, என்னவோ? அவன் உற்சாகமாகக் கூறினான். அம்மே! விஜயரட்னா நேற்று லீவில் வந்திருக்கிறான். தான் ஆனையிறவு போரில் பத்துப் புலி களைக் கொன்றதாகக் கூறுகிறான். அத னால்தான் தனக்குச் சுலபமாக லீவு கிடைத் ததாம். தன்னை இப்பக்கூட விமானத்தில் இதாலதான் அனுப்பினதாம். இல்லாட்டித் தரை வழியாகவோ கப்பல் வழியாகத்தான் அனுப்பு வினவாம். தனக்கு லீவு முடிஞ்சு போனா புறமோஷன் காத்திருக்காம்.

"வேறென்ன சொன்னான்?"

"இப்ப யாழ்ப்பாணம் வந்து போற சிங் கள மக்கள் அதிகமாம். யாழ்ப்பாணம் இப்ப ஒரு 'ரூரிஸ்ட் ஸ்பொட்' ஆகிவிட்டதாம். எல்லாம் தாங்கள் செய்த அடிபாடுதான் காரணமாம்" பெரிதாகக் கூறுகிறான்.

"அது சரி ஆரியகுளம் ஸ்ரீ நாகவிகாரை...?" அவள் தயக்கமாகக் கேட்டாள்.

எல்லாம் நல்லபடியாகத் திருத்தியாகி விட்டதாம். தங்க ஏற்றவாறு அதுக்கு முன்னாலேயே இடமிருக்குதாம். ஹாமத் துருதான் மேற்பார்வையாம். ஒரு பயமும் இல்லையாம். இராணுவத்தினர்கூட வந்து போகினமாம்.

அவள் கண்கள் ஒளிர்ந்தன.

அந்த ரூரிஸ்ட் பேருந்து ஏ-9பாதையில் விரைந்து கொண்டிருந்தது. நல்ல வேளை யாக மாயாவதிக்கு ஜன்னல் பக்கமாக இருக்கை கிடைத்தது. வெளியே காட்சி களில் பெரிதும் மாற்றமில்லை. அப்படி மாறியிருந்தால் முன்பு பொட்டல் வெளி யாக இருந்த இடங்களில் கட்டடங்கள் முளைத்திருந்தன. இல்லா விட்டால் முன்பு சிறு கட்டடங்களாக இருந்தவை தலைநீட்டி மாடி, மாடி என உயர்ந்திருந்தன. பாதைகள் நன்றாக இருந்தன. பயணம் சுகமாகப் போய்க் கொண்டிருந்ததெல்லாம் அநுராத புரம், மதவாச்சி தாண்டும் மட்டும்தான்.

பிறகு வெகு வேகமாகக் காட்சிகளும் கோலங்களும் மாறத் தொடங்கின. அவள் வியப்பினுள் புதைந்து போனாள். கரையோர மரங்கள் கருகி நின்றன. முன்பு பச்சைப் பசே லென பற்றைகளாலும், காட்டு மரங்களி னாலும் சூழப்பட்டிருந்த இடங்கள்... ஆங்காங்கே புற்கள் பற்றியெறிந்த கோலத் தில்... கருமையும் மஞ்சளமாக மண்டிக் காணப்பட்டன. வவுனியா, ஓமந்தைப் பகுதி களைத் தாண்டியதும் கரையோர வீடுகள், சிறு கோவில்கள், பாடசாலைகள் எல்லாம் கூரையின்றியும், பக்கச் சுவரின்றியும், எல் லைகள் இன்றியும் பரிதவித்துக் கொண் டிருப்பது தெரிந்தது. மக்கள் வாழ்ந்த பிர தேசமெனக் கூற அகழ்வாராய்ச்சிக் கார ரைத் தேடி ஓட வேண்டும். அதிலும் அரசி யல் நிச்சயம் புகுந்துவிடும். நிலத்தடியில் காணப்படும் நாகரிகம் ஆரியமா? திரா விடமா? என்று தவித்த முயலை அடித்துக் 'கொல்ல'த் தொடங்கி விடும் இன்றைய நாக ரிகம்.

பேருந்து முறிகண்டியில் நின்ற போது அவளுள் ஒரு பரவசம் ஏற்பட்டது. முறி கண்டிப் பிள்ளையார் எல்லா வழிப்பயணி களுக்கும் செல்லப் பிள்ளையார். மத, இன, மொழி, வேறுபாடற்ற வழித் துணைவர். இன்றும் பல தென்பகுதிப் பயணிகள் வாகனங்களால் சூழ்ந்து காணப்பட்டார்.

பிள்ளையாரை வழிபட்டு மீண்டும் பேருந்தில் வந்தமர்ந்தபோது அவள் மனம் ஏனோ எதிர்காலம் பற்றி நம்பிக்கை கொண்டிருந்தது.

பேருந்து புறப்பட்டது.

கிளிநொச்சி, பரந்தன் என்று பயணம் நீண்டபோது மனம் வேதனையில் ஆழ்ந்தது. கிளிநொச்சி நகரம் எங்கே? பஸ் ஸ்ராண்ட் எங்கே? வீடுகள் எங்கே? காடுகளாக எல்லை வரித்திருந்த பசுமைகள் எங்கே? அவற்றில் தாவித்திரிந்திருந்த நரைக் குரங்கினங்கள் எங்கே, பாதைகள் குன்றும் குழியுமாக... ஏ-9 பாதையும் அகலப்படுத்துவதாக... மஞ்சள் கறுப்புப் பட்டகளால் நீலக் கண்ணிப் பகுதிகள் எல்லை காட்டப்பட்டனவாக... அந்து வான வெளியில் நிற்பதான 'தனியன் மரங்களில்கூட மண்டையயோடும் எலும்புக் குருசுகளும் அபாயம் கூறிக் கொண்டிருக்க பேருந்து பயணித்துக் கொண்டிருந்தது.

இதுவரையும் ஏற்படாத கவலை அவளுக்கு ஏற்பட்டது.

'நான் போட்ட கடிதம் மைதிலி குடும்பத்தாருக்குக் கிட்டியிருக்குமோ? இடப்பெயர்வினால் அவர்களும் எங்காவது போயிருப்பினமோ? பழைய விலாசத்தில் தான் இருக்கிறார்களோ? இல்லாவிட்டால் வந்த நோக்கம் பாழாகிவிடுமே? பழைய பாசம் இப்போதும் இருக்குமோ... வரவேற்பு எப்படியிருக்குமோ?

பேருந்து வேகம் எடுத்தது. ஜன்னல் வழியாகக் காற்று பலமாக முகத்திலறைந்தது. மயிரிழைகள் மூக்கிலும், வாயிலும் புகுந்து கீச்சு மூச்சுக் காட்டின. வெட்டவெளியில் மாடுகள் கூட்டம் கூட்டமாக மேய்ந்து கொண்டிருந்தன. குறிசுட்ட மாடுகளாகத் தெரியவில்லை. எல்லாம் குளுவன்கள். குழுக்களாகத் திரிந்தன. எந்தக் குழுவும் ஐம்பது மாடுகளுக்குக் குறையாமலிருந்தன.

திடீரென இருபுறமும் வெட்ட வெளியெனப் பாலை தெரிந்தது. இது எந்த இடம்? புரியவில்லையே? முன்பு எவ்வளவு காலம் இப்பாதையால் வந்து போயிருக்கிறேன். இது என்ன மயக்கம்?

யாரோ பின்னாலிருந்து கூறுகிறார்கள்.

இதுதான் ஆணையிறவு!

ஆனையிறவா? உப்பளங்கள் எங்கே? அதன் அலுவலகங்கள் எங்கே? புகையிரதப் பாதை... பெட்டிகள்... எஞ்சின்கள்... ஸ்ரேசன்... வாடிவீடு... இவையெல்லாம் எங்கே போயின? என்னவாயின, இங்கு வேலை பார்த்தவர்கள்... அவர்கள் இருப்பிடங்கள்...

ஏ-9 பாதையின் கரையோர மேட்டில் ஒரு 'பவள்' வாகனம் கறள் ஏறிச் கரிந்து கிடந்தது... சற்று நேரத்திற்கெல்லாம் பூவரச மரக் கூடலிடையே பாரிய கவச வாகனம் இரும்பணை போல் எழுந்து நின்றது. அதில் தமிழில் எழுதப்பட்ட விடுதலை வீரர்களின் பெயர்கள் வேகமாகச் சென்று மறைந்தன. பாதைகள் மேடும் பள்ளமும் உபபாதைகளுமாக வளைந்தும் நெளிந்தும் சகதியுமாகக் காணப்பட, வாகனம் உடலைக் குலுக்கி எடுத்தது. இப்பொழுதுதான் போரின் உக்கிரம் மாயாவதிக்குப் புலப்படத் தொடங்கியது.

"இதால இப்பவும் இராணுவ டாங்கிகள் போறதோ?" யாரோ கேட்கிறார்கள். சிரிப்பொலி எழும்புகிறது.

"நல்ல கதை இதால டாங்கிகள் போக வரப் புலிகள் விடுமே?"

"விட்டாலும்தான் இராணுவம் இந்தப் பாதையில் வராது. இதுக்குச் சமமாக இன்னொரு பாதை அமைத்துத்தான் வரும்".

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?"

"இதாலை லீவுக்குப்போற இராணுவத்தினரையும் அனுப்புறதில்லை. ஏனென்றால் இதாலை போற ஆமி இங்க இருக்கிற நிலையைப் பாத்தா பயம் ஏற்பட்டு சண்டையைப் பற்றியே நின்னக்காது. உளவியல் தாக்கத்துக்கு ஆளாகிவிடும் எனப் பயந்து இந்தப்

பாதையைப் பற்றி பத்தாண்டுகளுக்காவது நினைக்காது."

மாயவுக்கு இப்போது சிரிப்புக்கூட வந்தது.

"விஜயரட்ண புளுகியது இதைத்தானா? இப்படித்தான் புலிகளைப் பற்றிய பொய் வதந்திகளைப் பரப்புகினம்" அவள் சிந்தனை விரிந்தது.

இந்த யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பொடியன்களா இப்படி மாறினார்கள்? வயது வந்த பெடியன்கள்கூட அம்மாவின் முந்தானை விட்டு விட்டு இலேசில் வந்து விட மாட்டார்கள். படிப்பு... படிப்பு... படிப்பு... இரவு மெயில் வண்டியில் ஏறினால், அநுராதபுரம் வந்து விட்டால் பாதித் தூக்கத்தில் தன்னையறியாமல் எழுந்து காலை மடத்தி உட்காருபவர்கள்... இவர்களா இன்று இப்படி?

பேருந்து இப்போது கடக்கும் பாதையில் ஆயிரங்கால் மண்டபமென பல்லாயிரக் கணக்கான தென்னை மரங்கள் வட்டுக் களைந்து முண்டமாக நின்றன. பனைகளின் வட்டுக்களும் அப்படியே. குடநாட்டின் தேசிய செல்வம் ஆமியால் பாழ்படுத்தப் பட்டிருந்தது. இது தேசியப் போராட்டமல்ல. இன ஒழிப்புப் போராட்டம். தமிழினம் தலையெடுக்கக் கூடாது என்ற எண்ணத்தில் எடுக்கப்பட்ட அடக்குமுறை. பனை, கொடிக்காமம்... பார்க்குமிடமெல்லாம் றொக்கட் லோஞ்சர், ஷெல் என்பவற்றின் கோரதாண்டவம்... வீடு, வாசல், கோயில், பாடசாலை என்ற வேறுபாடின்றி எல்லா இடங்களிலும் நடந்தேறியிருந்தது.

"ததாதகரே! இதென்ன கொடுமை. நீர் சுழற்றிய தர்ம சக்கரப் பிரவர்த்தனம் என்ன வாயிற்று?"

அடுத்தது சாவகச்சேரி. நினைத்தபோதே வாய் இனித்தது. மாம்பழம், பலாப்பழம், என்றால் சாவகச் சேரிக்குத் தந்தை சைக்கிள் உழக்கியது ஞாபகம் வரும்.

எங்கே சாவகச்சேரி?

மயான வெளியாகப் பரந்து உடும்பு, பன்றி, முயல் ஓட களம் அமைத்திருப்பது தான் சாவகச்சேரி.

அவள் தலை சுழன்றது. ஜன்னல் கம்பியில் தலை சாய்த்தாள்.

அவள் கண்விழித்தபோது பேருந்து ஆரியகுளம் ஸ்ரீநாக விகாரையில் நின்றிருந்தது. யாரோ 'மாயா' என்று அழைப்பது கேட்டது. நிமிர்ந்தாள். அதிர்ந்து போனாள். பேருந்தினுள்ளே அவள் அருகே நிற்பது யார்?

மைதிலி அருகே இன்னொரு குட்டி மைதிலி.

"என்ன அன்ரி இறங்க மனமில்லையா?"

மாயா மைதிலியைத் தாவி அணைத்தாள். பேருந் திலிருந்து அனைவரும் அக்காட்சியைக் கண் கொட்டாமல் பார்த்தார்கள். புலிகளின் பூமியில் இப்படி ஒரு அரவணைப்பா?

சாமான்களை எடுத்துக் கொண்டு இறங்கினார்கள்.

"மைதிலி! பாக்கை இப்படிக் கொடு..."

நடுத்தரவு வயதுக்காரர் பாக்கை கையிலெடுத்தார்.

"இவளின்ரை அப்பா?"

"ஆ! குடும்பமே என்னை வரவேற்க வந்திருக்கிறது. இவர்களுடனா?... இவர்களுடனா இவ்வளவு காலமும் போரிட்டோம். கருணை வள்ளலே... இனியாவது சமாதானம் கொள்ள வழி செய்யும்..." அவள் விழித்திரையில் கண்ணீர் திரண்டது.

அவள் சுற்று முற்றும் பார்த்தாள். விகாரை நவீனத்துவம் பெற முனைந்து கொண்டிருக்கிறது. ஆர்யகுளம் தாமரைக் குளமாக மாறி வெண்தாமரையும், செந்தாமரையுமாகக் காடாகப் புஷ்பித்திருக்கிறது. அவர்கள் வீடு இருந்த அடையாளம் தெரியாமல் சிதிலமடைந்து கிடக்கிறது. நெஞ்சம் துடிக்கிறது. இதெல்லாம் ஏன்?

ஏன்? அருகேதான் மைதிலி வீடு. அவர்கள் வீட்டின் முன்புறம் ஓடுகள் காணாமற் போயிருக்கின்றன. முன்னைய குசினி சிதைந்து போயிருக்க புதிதாகப் பத்தி இறக்கி சமையல் வேலை நடக்கிறது. அவள் முன்பு தாங்கள் வழிபட்ட கோயிலைப் பார்க்கப் போகிறாள். அங்கு கோயிலிருந்த அடையாளமே தெரியாமல் யாரோ சிதைத்திருக்கிறார்கள். மைதிலியின் இடப்பெயர்வின்போது நிகழ்ந்ததாகக் கூறுகிறார்கள். மைதிலியின் குழந்தைகளுக்கு தமிழ் நன்றாகப் பேசுகின்ற சிங்கள அன்ரியை நன்றாகப் பிடித்துக் கொண்டது. தான் படித்த பாடசாலை வெறும் நிலமாகக் காட்சியளிப்பதும், பறங்கித் தெரு வீடுகள் பரதேசியின் கொப்பரையாகத் தெரிவதும், மாநகரசபை, வாடிவீடு, பொலீஸ் ஸ்ரேசன் கோட்டை, பெரிய தபாற் கந்தோர், ரீகல் தியேட்டர், சாந்தி தியேட்டர், மனோகரா தியேட்டர், ராணி, ஸ்ரீதர் தியேட்டர், வீரசிங்கம் மண்டபம் எல்லாம் எரியூட்ட லுக்கும், பொம்மர் தாக்குதலுக் கும் ஆளாகியிருக்கும் நிலை அவளைத் திகிலூட்ட வைக்கின்றன. அவளிருந்த நான்கு நாட்களும் அவளுக்குச் சொர்க்கத்தை காட்டின. ஒருநாள் மைதிலி குடும்பம் அவளை நாகதீபத்தைப் பார்க்கக் கூட்டிச் சென்றது.

அங்கு ஹாமத் துருக்களை விட இராணுவத்தினரே அதிகமாக வழிபாட்டு ஏற்பாடுகளைச் செய்வதையும், கோயில் விகாரைக்குச் செல்வதற்கு முன்னர் இராணுவச் சோதனை நிகழ்வதையும் அவளால் சகிக்க முடியவில்லை.

நாளை விடிகாலை அவர்கள் வந்த பேருந்து தென்னிலங்கை நோக்கிப் புறப்படப் போகிறது. அவள் பேருந்திலிருந்தவர்களுக்கு ஒரு விசேட பிரார்த்தனை இருப்பதாகச் செய்தி வருகிறது. கூட்டத்தோடு கூட்டமாக அவளும் ஹாமத்துருவுடன் சில இராணுவ அதிகாரிகளும் இருக்கின்றனர்.

சமயச் சடங்குகள் ஆரம்பமாகி முடிகின்றன. எல்லாரும் புத்தரின் கருணை தங்களின் மேல் குவிய வேண்டும், பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும் என்றும் பிரார்த்தித்துக் கொள்கிறார்கள்.

ஹாமத்துரு எழுகிறார். "இந்த நாடு எங்களுடையது. புத்தரின் கருணை எங்களுக்கு மட்டுமே உரியது. புத்தமத நாடு என்று உலகிலேயே எங்கள் நாட்டைத்தான் சொல்வார்கள். இதை மீட்பதும், பாதுகாப்பதும் உங்கள் கையில் தான் உள்ளது என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள். உங்கள் ஊரில் போய்க் கூறுங்கள்..."

மாயா அழுகிறாள். அவள் மனதின் சாந்தி இப்போது மறைந்துவிட்டது.

- நன்றி : நமது ஈழநாடு 1.10.2004


கவிதை, சிறுகதை, சிறுவர் பாடல் என

பல நூல்களை வெளியிட்டுள்ள

ஒலுவில் அமுதன்

ரக்ஸானா வெளியீட்டகம்

அக்கரைப்பற்று-05 மூலம்

"ஒலுவில் அமுதன் கவிதைகள்"

நூலை அழகிய பதிப்பு...

தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள்,

ஈழபாரதி, மருதூர்வாணன் மதிப்புரையுடன்

கூடிய இந்நூலைத் தந்த ஒலுவில் அமுதன்

தொடர்ந்து நல்ல நூல்களை வெளியிட்டு

ஈழத்து இலக்கியத்திற்குப் பெருமை

சேர்க்கும்படி காற்று வெளி வாழ்த்துகிறது.

# என்னுள் வாழும் பிரியமான பாட்டி

- நவஜோதி ஜோகரட்னம். (லண்டன்)

எண்ணுகிறேன்
எந்தன் பிரியமான பாட்டி
என்றும்
என்னுள் வாழும் பாட்டி
பொக்கை வாயால் பேசி
என்னைப்
பேணிக் காத்த பாட்டி

முற்றத்து மல்லிகை
மணம் பரப்ப
முழுநிலா பகலென
ஒளி பரப்ப - பாட்டி
முப்பெரும் கலைகளை
மீட்டிய நினைவுகள்
இன்று
முள்ளாய்க் குத்துது
அவள் உருவில்

நானோ குழந்தை
அவள் உறவில்
இன்றும் மாறா
இதயம்
அவள் நினைவில்

மாடு கன்றுடன்
அடி வளவில்
கணம்
'அம்மா' என்னும்
அவள் பரிவில்
அலாதியாகப் பேசிடுவாள்

அந்த மாடும்
அவளுரை கேட்டிடுமே
செம்பு நிறைந்த
பாலுடனே - அவள்
செப்பித் தருவாள்
சுவை
சேர்த்ததிலே

தாமரை பூத்த
தடாகத்தின் கண்
அன்னம் வாழும்
அன்பினைப் போல்
அவள்
அள்ளிச் சொரிவாள்
புன்னகையினையே!
செல்லம் கொளிக்கும்
வீடென்றால் - அங்கு
வெற்றிலைத் தட்டம்
சீர் செய்யும்
பெருமையுடன்
பேதங்கள் மீட்டு
வீறுகள் பேசியும்
மகிழ வைப்பாள்

காலையில் எழுந்தால்
கால் நடையாக
காணிகள் பார்ப்பதே
இவள் வேலை
தென்னங்காணி
பனங்காட்டுக் காணி
முதுசக் காணி
முதுபெருங்காணி என்று
பெருமைகள் அடித்து
பறை சாற்றிடுவாள்

பனங்காட்டில் சென்று
பனங்காய் எடுப்பது
பரம்பரையாகப்
பழகி வந்திருந்தாள்
பக்கத்து வீட்டார்
பனங்காய் எடுத்தால்
பாட்டியின் பரதம்
பார்த்திடலாம்

பாவம் பாட்டி
பாசத்தை விட்டே
போருக்கு முன்னே
போய்விட்டாள்
பாழ்பட்ட உலகையே
பார்க்கவில்லை - எம்
பரந்திட்ட உறவையோ
பார்க்கவில்லை
அவள்
பார்த்திட்ட
பரம்பரைக் காணிகளும்
அவளைத் தேற்றிய
தென்னந் தோப்புக்களும்
இன்று
பாடாய் இடிந்து
நொருங்கி விழுந்து
என்
பாட்டியை நினைந்து
புகைந்து அழுகுதே!

# தலையெழுத்து

கனா.மகேஸ்வரன்

கதிரேசனுக்கு இந்த வயதிலேயே வேலை கிடைத்தது அதிர்ஸ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்.

காரியாலய பியூன்தான், என்றாலும் இப்போது இது கிடைப்பதே பெரிய விசயம்தான்.

தொழில் கந்தோரில் பதிவு செய்து வேலை தேடிய காலம் போய்ப் பல வருடங்களாகியும், இன்னும் 'லேபர் கந்தோரில்' பதிந்துதான் வேலை பெறவேண்டும் என்ற நம்பிக் கொண்டிருக்கும் பலரை அவன் அறிந்து வைத்திருந்தான். அப்போதெல்லாம் அவர்களுக்காக அனுதாப்படுவதைவிட அவனால் வேறொன்றும் செய்ய முடிவதில்லை.

இப்பொழுது கூட இந்த வேலையை எதிர்பார்த்து அவன் காத்துக் கிடக்கவில்லை.

என்றோ ஒருநாள் 'ஜொப்பாங்'கில் பதிய வேண்டுமென்று அப்பா ஆக்கிளைப்படுத்தியதால், 'சும்மா போட்டு வைப்போம்' என்ற நினைவில்தான் அந்தப் படிவத்தை நிரப்பிக் கொடுத்திருந்தான். அப்போது அதில் அவனுக்கு துளிகூட நம்பிக்கையிருக்கவில்லை.

இப்போது மட்டும் என்னவாம்...?

அவனது அப்பா, தன் தள்ளாத வயதிலும் ஓடியாடி, அவனவன் காலைக் கையைப்பிடித்து வாங்கிய சிபார்சுதான் இவனுக்கு எட்டாத கனியைப் பறித்துக் கொடுத்திருக்கிறது.

அவனது குடும்ப நிலைமையில் இதையும் தவறவிடுவது புத்திசாலித்தனமில்லை என்று மனதுக்குள் பட்டதால் அரை மனதுடன்தான் இந்த வேலையையும் பொறுப்பெடுத்துக் கொண்டான்.

அவர்களது குடும்பத்தில் அவன் கடைக்குட்டி. அடுக்கடுக்காகப் பிறந்த ஐந்து பெண் குழந்தைகளின் பின் ஆறேழு வருடங் கழித்து ஆசைக்குப் பிறந்த 'குஞ்சுக் கண்ணன்' என்று அவன் அம்மா அவனைப் போட்டுப் புரட்டிப் புரட்டிக்

கொஞ்சுவாள். அந்த அன்புப் பிடிக்குள் அவன் திணறிய காலங்களே இந்த வயதில் பாதிக்கு மேல் அவனை முழுங்கி விட்டிருந் தது.

இந்தக் குடும்பத்தில் சின்னக்காதான் ஓரளவு படித்துத் தலையெடுத்திருக்கிறாள். ''கொம்பியூட்டர்'' தெரிவில் வேலை கிடைத்த இரண்டாண்டுக்குள்ளேயே, யாரோ ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டு, இந்தக் குடும்பத்துக்கு அவள் அன்னியமா கிப் போய்விட்டாள். மூத்தக்காளும் அடுத் தக்காளும் அடுத்தவளும் திருமணமாகிப் பிரிந்து விட்டார்கள். அப்பா அம்மாவின் சலவைத் தொழிலாலும் இப்போது பெரிய வருமானம் என்று சொல்லிவிடமுடியாது.

"நயினார், நனினார்" என்று இவன் பெற் றோர் குழைந்து நெளிந்ததும், இவர்களைப் பகடைக் காய்களாக்கி சதுரங்கம் ஆடிய உடையார் தனவந்தர்களும், விதானை பந் தாக்களும் மறைந்து, இதெல்லாம் தேவை யில்லை என்பது போல் 'லோண்டரி'களைத் தேடும் அவர்களது வாரிசுகளுக்கு இவர் களது பணிவும் குழைவும் மட்டுமல்ல, உதவியும்தான் தேவையில்லாமல் போய் விட்டது. அந்த மைனர் கூட்டத்துக்கு மட்டு மல்ல, இவர்களது சமூகத்தில் பிறந்த செல்வம் செல்வாக்குள்ள பலருக்கே இதெல்லாம் அநாகரிகமாகிப் போய், குலத் தொழில் என்ற பட்டத்தையே துறந்தவர்க ளாய், லோண்டரியில் உடுப்புப் போடுமள விற்கு உயர்ந்தபோது, பரம்பரைத் தொழில் என்று சொல்லிக் கொண்டு இன்னும் உலா வுகின்ற இவனது பெற்றோருக்கு வருமானம் கம்பியது ஒன்றும் ஆச்சரியப்படத்தக்க விசயமில்லை தான்.

ஒரொரு சமயங்களில் இவன் கூட இவர் களில் ஆத்திரப்பட்டதுண்டு. பின்னர் அப்பா அம்மாவின் பரம்பரைத் தொழிலை இழிவுபடுத்த நாங்களெல்லாம் ஆர்? என்ற கோதாவில் மனதைக் கட்டுப்படுத்திய துண்டு. ஆனால் அடி மனதுக்குள் இந்தத் தொழிலுக்கு முழுக்குப் போட்டுவிட்டு வேறு தொழில் பார்த்தேயாக வேண்டு மென்ற வைராக்கியம் அவனை இயங்க வைத்தது.

நாலெழுத்துப் படித்து முன்னுக்கு வந்து நாங்களும் நாகரீகமாகத் தொழில் புரியும் காலம் வெகு தூரத்தில் இல்லை யென்று மனதை ஆற்றிக் கொள்வான். தொடர்ந்து படிப்பதற்கும் வசதி செய்து தர முடியாத இந்தக் குடும்பத்தில் வந்து பிறந் தோமே என்று அவன் மனம் புழுங்கிய நாட் களுமுண்டு. அப்போதும்கூட எல்லாவற் றுக்கும் ஒரு காலம் வரும் என்று தான் மனதைத் தேற்றிக் கொண்டான்.

இழுத்திழுத்து ஜி.ஸி.ஈ. ஓ/எல் செய்வ தற்குள் அவன் பணத்திற்காகப் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. இந்த இழுபாடுகளுக் குள்ளும் தான் தறுமையாகப் பரிட்சை எழுதிவிட்டதான சந்தோஷமும் இருக்கத் தான் செயதது. பரிட்சை முடிவுகள் வருவ தற்குள் வகுப்பில் முன்னிலையில் நின்ற மாணவர்கள் பலர் ஏ/எல் வகுப்பில் அமரத் தொடங்கியிருந்தார்கள். அவர்களோடு சேர்ந்து, இந்த அரைக் காற்சட்டைக்குள் புகுந்து தலை நிமிர்ந்து நடக்க வேண்டு மென்று அவனுக்கும் ஆசையாகத்தான் இருந்தது. அந்த ஆசைகளில் எல்லாம் மண்ணை வாரிப் போட்டது போல அவன் அம்மா கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்...

"ஏதோ என்னாலானவரை வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி நாலெழுத்துப் படிப் பிச்சுப் போட்டன். இதுக்கு மேலாலை சில வளிக்க என்னாலை ஏலாது. உன்றை கொக்காமாரும் ரெண்டு பேர் குமிரிருக்குது கள். இனி அதுகளைப் பொறுப்பேற்க வேண்டியதும் நீதான்... முன்னைப் போல ஓடியாடித் திரியவும் எனக்கேலாது."

அந்த வார்த்தைகளைக் கேட்டது முதல் அவன் ஆடிப்போய்விட்டான்.

தான் படித்ததெல்லாம் விழலுக்கிறைத்த

நீர்தானோ என்று பெருமூச்சுவிட்டான். பெற்றவர்களே பிள்ளைகளின் வருங்காலத்தைத் தட்டிக் கழிப்பதா என்று மனதுள் பொருமிக் கொண்டான். எங்காவது செத்துத் தொலைந்தால்தான் என்னவென்று நொந்து கொண்டான்.

இந்தச் சம்பவம் நடந்த மறுநாளே, தகப்பன் நெஞ்சுவலி என்று படுத்துக் கொண்டதில் அவனுக்குப் பரிதாபமாக இருந்தது.

மூன்று தினங்களாக சாக்குக் கட்டிலிலேயே முனகிக் கொண்டு கிடந்த அப்பா, மறுபடியும் எழுந்து நடமாடத் தொடங்கிய சில தினங்களிலேயே இவனுக்கு ஒரு வேலைவாய்ப்புடன் திரும்பி வந்தபோது - ஏற்கவும் முடியாமல், மறுக்கவும் முடியாமல் இவன் பட்ட அவதி இவனுக்கே வெளிச்சம்.

ஏதேதோ எண்ணிக் கனவு கண்டு கொண்டிருந்தவனுக்கு மீண்டும் அரைக் காட் சட்டையிலேயே உத்தியோகம் கிடைத்ததில் ரொம்பவும் மனவருத்தம்தான்.

இவன் மனநிலையைப் பிரிந்து கொண்டவளாய் பெற்றவளும் இவனுக்காகக் கணவனோடு வாதாடிப் பார்த்தாள். கிழவர் விட்டுக் கொடுக்காமல் காரியத்தைச் சாதித்து விட்டார். கையாலாகாதவன் போல் இவனும் ஒப்புக் கொண்டு விட்டான்.

இன்டர்வியூ நடந்தது. ஒன்பதுபேர் அந்த வேலைக்காக இவனோடு போட்டிக்கு நின்றார்கள். இவனுக்கே அது ஆச்சரியமாயிருந்தது. போயும் போயும் இந்த வேலைக்கா இவர்களெல்லாம் போட்டிக்கு நிற்கிறார்கள் என்று.

விசாரித்துப் பார்த்ததில் எல்லோருமே பெரிய இடத்துப் பிள்ளைகளாகவும், கல்வியில் மட்டானவர்களாகவும், இவன் மட்டுமே சற்றுப் படித்தவனாகவும் இருந்ததில் இவனுக்கு வியப்பாகவும் இருந்தது; வேதனையாகவும் இருந்தது; மகிழ்ச்சியாகக் கூட இருந்தது.

மனித மனத்தின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியாதவனாக இவன் ஒரு கணம் இடர்ப்பட்டான்.

ஒவ்வொருவரும் சிபார்சுக் கடிதங்களுடன்தான் வந்திருந்தார்கள். ஆனால் இவனுக்கு மட்டுமே வேலை கிடைத்ததில் மகிழ்ச்சியைவிட வியப்போ அவனுக்கு மிகுதியாயிருந்தது.

இப்பேர்பட்ட சிறப்பு தனக்குக் கிடைத்திருக்குமென்றால், தன் படிப்புக்கு அடுத்தபடி தந்தையின் கெட்டித்தனமே முக்கிய பங்கு வகிப்பதக எண்ணி மனதுக்குள் தந்தைக்காக இரங்கினான்.

வேலைக்கு வந்த முதல் நாளில் இவனுக்குக் கூச்சம் அதிகமாகவேயிருந்தது. பலர் முன்னிலையில்தான் சிறு துரும்பாய் எடுபிடி வேலையாளாய் மணியடித்ததும் ஓடுகின்ற இயந்திரமாய் அவன் இளமனது வெகுவாகச் சங்கடப்பட்டது.

தன்னையொத்த - தனக்கு இரண்டொரு வயதுக்கு மூத்த இளம் பெண்களுக்கெல்லாம் தான் எடுபிடியாக இருக்க வேண்டுமே என்று நினைக்கவே அவனுக்கு வருத்தமாக இருந்தது.

'கதிரேசு, இதைக் கொண்டு போய் பெரியவரிட்டைப் போட்டிட்டு வா!' என்று ஒருத்தி கட்டளையிடுவதுபோல் சொன்னாள்.

கதிரேசன் வந்து அந்தக் கோவையை எடுத்துக் கொண்டு திரும்பியதுமே, இரு பெண்கள் வாய்விட்டுச்சிரித்தார்கள். அவர்கள் எதற்காகச் சிரித்தார்கள் என்று அவனுக்குத் தெரியாது. ஆனால் தன்னைக் கேலி செய்தே அவர்கள் தமக்குள் சிரிப்பதாகத் தோன்றியதால் அவனது இளரத்தம் கொதித்தது. சடாரென்று திரும்பிப் பார்த்தான்.

இவன் பார்வையைச் சந்திக்க முடியாமல் ஒருத்தி பலவந்தமாகச் சிரிப்பை அடக்கிக் கொண்டு, முகத்தை வேறுபக்கம் திருப்பினாள்.

இவனுக்கு எரிச்சலாக வந்தது.

'மிஸ், இதெல்லாம் கன நாளைக்கு நிலையாது. நானும் ஒருநாளைக்கு உங்களுக் கெதிரிலை கதிரை போட்டு இருக்கத்தான் போறன். அப்ப பாப்பம்' என்று முறைத்தான்.

அவளுக்கு முமெல்லாம் வியர்த்துக் கொட்டியது. அவன் பேசாமல் திரும்பி நடந்தான்.

'எட, வந்தது வருகிறதுக்கிடையிலை அவற்றை வாய்க் கொழுப்பைப் பாரன்... உப்பிடியே ஆளையிட்டால் உவர் அடங்க மாட்டார்... சீப் கிளார்க் வரட்டும்' என்று இவள் பக்கத்தே இருந்தவளிடம் குசுகுசுத்தாள்.

கொஞ்ச நேரத்தின் பின்னர் இவன் திரும்பி வந்தபோது, அவள் மேசையில் குப்புறப் படுத்து அழுது கொண்டிருந்தாள்.

என்ன நடந்ததென்று 'சீப் கிளார்க்' மற்றவர்களிடம் அதட்டிக் கொண்டிருந்தார்.

'கதிரேசு...'

'கதிரேசு' என்று யாரோ முனகுவது மட்டும் இவனுக்ககு லேசாகக் கேட்டது. அந்தக் குரலுக்குரியவர் யாரென்பதை மட்டும் அப்போது அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

தான் அப்படி என்னதான் பெரிதாகச் சொல்லிவிட்டேன் என்று இவன் தனக்குள் கேட்டுக் கொண்டான்.

'இதுக்குப் போய் இவள் அழுகிறாளே' என்று அவளுக்காக இரக்கப்பட்டான்.

கூனிக் குறுகி நிற்க வேண்டிய நானே 'கப்சிப்'பென்று இருக்கும்போது, இவளேன் அழவேண்டுமென்று தனக்குள் கேட்டுக் கொண்டான்.

அதற்குள் சீப் கிளார்க் தொண்டை கிழியக் கத்தினார்.

'கதிரேசு, உனக்குப் பொம்பிளைப் பிள்ளையளோடை என்ன கதை? சொன்னால் சொன்ன அழுவலைச் செய்து போட்டுப் போக வேண்டியதுதானே...! பெரியவருக்குக் கொம்பிளெயின் பண்ணினால் என்ன நடக்கும் தெரியுமே? இனிமேல் உந்தச் சேட்டையள் இங்கை இருக்கப் படாது!'

-அவன் மௌனமாகத் தலை குனிந்து கொண்டான்.

வேலையே வேண்டாமென்று அந்தக் கணமே உதறி எறிந்து விட்டு ஓடிவிட வேண்டும் போலிருந்தது. வயதான பெற்றோரும், வயதுக்கு வந்த அக்காமாரும் அவன் நினைவில் வந்து போயினர்.

எங்காவது ஒரு மூலையில் போய், ஆத்திரம் தீருமட்டும் அழுது வடிக்க வேண்டும் போலிருந்தது. அழுவதற்குத்தான் அப்படி என்ன காரியம் செய்துவிட்டான்? தான் அழுவதால் குற்றவாளி தானேயாக வேண்டுமென எண்ணிக் கொண்டான்.

இந்த வழுக்கைத் தலையே இவளுக்காக இரங்கும்போது, பேய் மட்டும் இரங்காமல் என்ன செய்யும்?

'சீ, ஒரு பெண்ணாகப் பிறந்திருந்தாலும் தேவலை' என்று எண்ணிக் கொண்டதில் அவனையுமறியாமலே சிரிப்பு வந்தது.

இவன் தனக்குள் சிரித்ததும், மீண்டுமொரு குசுகுசுப்பு பெண்கள் மதியிலிருந்து தெளிவின்றிக் கேட்டது.

மனதை அடக்கிக் கொண்டான்.

கொஞ்ச நேரத்தில் பெரியவரின் அறையிலிருந்து அழைப்பு மணி கேட்டது.

என்னவோ ஏதோ என்று எண்ணிக் கெண்டே மெல்ல நகர்ந்து போனான்.

'அவனவனை வைக்கிற இடத்திலை வைக்கவேணும் சேர்... எப்பன் இடம் குடுத்தால் மிச்சம் பிடுங்கப் பாப்பாங்கள்...'

சீப் கிளார்க்கின் குரல் இவனுக்குத் தெளிவாகக் கேட்டது.

மேற்கொண்டு என்ன சொல்லப் போகிறார் என்று அறியும் ஆவலில் இவன் காதைத் தீட்டிக் கொண்டே கணப்பொழுது தரித்து நின்றான்.

'எண்டாலும் சேர், நீங்கள் என்ர அக்கான்ட மகனைப் போட்டிருக்கலாம். நல்ல அமைதியான பொடியன். பாத்திங்களே சேர் நீங்கள் மணி அடிச்சு இவ்வளவு நேரம்...'

-இப்படி இவர் அடிக்கடி 'சேர்' போட்டுச் சொல்லி முடிப்பதற்குள் கதிரேசன் உள்ளே வந்தான்.

ஏதோ குற்றவுணர்வு உந்தப் பெற்றவராய், தனது வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்டே, '... சேர், அப்ப அந்த றிப்போர்ட்டை நான் ஹெட் ஒப்பீசுக்கு அனுப்புகிறன்' என்று மழுப்பிக் கொண்டு நகர்ந்தார், சீப் கிளார்க்.

'என்ன நடக்குமோ?' என்ற அந்த எதிர்பார்ப்பினுள்ளும், அவனுக்குச் சிரிப்பு வந்தது.

பெரியவர் ஒருமுறை தகவினூடே எதையோ ஆழமாகக் கூர்ந்து பார்த்தார். பின் இவனைப் பார்த்துக் கேட்டார்.

'என் நடந்தது தம்பி?'

'தம்பி' என்ற அந்த ஒரே ஒரு வார்த்தையில் இவன் ஆடிப்போனான்.

எப்பொழுதோ வந்து மறைந்திருக்க வேண்டிய அழுகை இப்போது வந்து கண்களைக் குளமாக்கியது.

'சரி... சரி... அழாமல் போய் வேலையைப் பாரும். மற்றவை மனம் நோக நடக்கக் கூடாது. இந்த வேலைக்காக உம்முடைய அப்பர் எவ்வளவு கஷ்டப் பட்டுத் திரிஞ்சவர் தெரியுமே? ம்... நீர் போகலாம்!'

அவனுக்குப் பெரிதாக ஓலமிட்டு அழ வேண்டும் போலிருந்தது.

'இவராவது என்னை விசாரிப்பார்... உண்மையைச் சொல்லலாம்' என்று ஆறுதலடைந்தவனை, அவரே வாயடக்கித் திருப்பிவிட்டார்.

காலம், வீணே தன் நாட்களைக் கடத்தவில்லை.

திட்டமிட்ட செயற்பாடுகளுடன், தீர்வு காணும் அக்கறையோடுதான் நகர்வதாகக் கதிரேசனுக்குப் பட்டது.

மிகக் குறுகிய காலத்திற்குள் இவ்வளவு மாற்றம் நடக்குமென்று அந்த அலுவலகத்தில் எவருமே எதிர்பார்த்திருக்கவில்லை.

ஆறு வருடத்திற்குள் எவ்வளவு பெரிய மாற்றம்!

'மிஸ்' ஆக இருந்த நால்வர் 'மிஸஸ்' ஆக மாறிவிட்டிருந்தார்கள்.

'பியூன்' ஆக இருந்த கதிரேசன், 'கிளாஸ் ரூ கிளார்க்'காக மாறியிருந்தான். பி.எ.பட்டம் வேறு அவனோடு ஒட்டிக் கொண்டிருந்தது.

வழுக்கைத் தலை 'சீப் கிளார்க்' இப்போதெல்லாம் அவனோடு குழைந்து குழைந்து குழைகிறார்.

மற்றவர்களைப் பற்றிக் கோள் மூட்டியே பொழுதைக் கழித்த அந்தணர் குடிப் பெருமகனார் ஒருவர் இப்போது 'புறமோசன்' என்ற பெயரோடு தனி அறை ஒன்றுள் கொட்டாவியோடு பெரும் பொழுதைக் கழிக்கிறார்.

சீப் கிளார்க்கின் அக்கா மகன் ஆனந்தன், அவருக்கு மருமகனாகவும், கந்தோருக்குள் பியூனாகவும் கடமையேற்றிருக்கிறான்.

'நோ பே லீவ்' என்ற பேரில், இருவர் மத்திய கிழக்கு நாடுகளில் அள்ளிக் குவிக்கிறார்கள்.

இந்த மாற்றங்களிடையேயும் சிலர் மாற்றமின்றியே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவனைப் பார்த்துச்சிரித்து, பின் முகத்தைப் புதைத்து அழுது, அதன் மூலமே இவனுக்குள் ஓர் உணர்வைத் தூண்டி, இந்த நிலைக்கு இவன் உயர வடிகாலாயிருந்த

'அழுமூஞ்சி வனிதா' இன்னும் எடுத்ததற் கெல்லாம் அழுது கொண்டேயிருக்கிறாள்.

'காஸுவ'லாகச் சேர்ந்தவள் இன்னும் 'காஸுவ'லாகவே காலத்தைக் கழிக்கிறாள். ஏதோ தொழிலொன்று இருக்கின்றது. நாலு காசு கையில் புரள்கிறது. வீட்டில் அளவற்ற செல்வம் இருக்கிறது என்பதான இறுமாப் பில் இன்னும் காஸுவலாகவே 'மிஸ்' ஆகவே காலத்தைக் கடத்துகிறாள்.

'ஹார்ட் அட்ராக்' என்று காரணம் காட் டிக் கொண்டு, அந்த ஊர்ச் சுவாத்தியம் மட் டுமே தனக்கு ஒத்துவரும் என்ற தட்டிக் கழிப்பில், அலுவலகத்தின் அந்த அறை தனக்கே உரித்தானதென்ற பாவனையில், 'ரான்ஸ்பர்' கேட்கும் மேலுத்தியோகத்தர் எவருக்குமே தனது ஆசனத்தை விட்டுக் கொடுக்காமல், 'பெரியவர்' என்ற அந்தப் பதவிக்குள் அப்படியே அமர்ந்திருக்கின்றார் பெரியவர்.

ஆனால், பியூனாகச் சேர்ந்து கிளார்க் ஆக மாறிவிட்ட கதிரேசன் 'சி.ஏ.எஸ்' பரிட் சையில் இன்டர்வியூவுக்காகக் காத்திருக் கிறான்.

திருமணத்திற்காக ஏங்காமல், பதவி உயர் வுக்காகவே காத்திருக்கும் இவனுக்கு வலை வீச எத்தனையோ இளம் பெண்கள் காத்திருக்கிறார்கள்.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக, தனது மகளுக்கு இவனை மடக்க முடியாது என்ற நன்றாகத் தெரிந்து கொண்டாலும், இவன் மேலதிகாரியானால் இவனிடம் சிபாரிசு வாங்கியாவது தன் மகளுக்கு ஒரு வேலை பெற்றுக் கொடுக்க முடியாமலா போய்விடும் என்ற அங்கலாய்ப்புடன் தனது சக மூத்த உத்தியோகத்தர் ஒருவருடன் வழுக்கைத்தலை சீப் கிளார்க் கதைத்ததைக் கேட்டபோது இவனுக்குச் சிறப்பாக வந்தது.

*- நன்றி மல்லிகை 1986*


**புதினம்**

மதமிருமுறை இதழ்

ஆசிரியர் : **E.K.** ராஜகோபால்

36 MOFFAT RD,

LONDON SW 17 7EZ

**வெற்றிமணி**

இலவச இதழ்

Dr.S.SIVAKUMARAN., B.F.A.,

P.O. BOX 2765

58477 LUDEBSCHIA, GERMANY.

EMAIL : VETTIMANY@HOTMAIL.COM

**பூவரசு**

தமிழ் இலக்கிய இதழ்

POSTRACH 10 34 01

28034 BREMEN, GERMANY

**கம்பன்**

இலக்கிய இலக்கண இதழ்

கவிஞர். சி.பாரதிதாசன்

6 RUE PAUL LANGEUIN

45140 GARGES LES GONEDDE, FRANCE

**தெரிதல்**

கலை இலக்கிய இதழ்

திரு.யேசுராஜா,

1. ஒடக்கரை வீதி, யாழ்ப்பாணம்.

**ஈழத்துக் கலைத்துறைப் பதிவுகள்**

சங்கீத கலாவித்தகர்

திரு.**எஸ்.சிவானந்த ராஜா** எழுதியது.

ஈழத்துக் கலை இலக்கியப் பதிவுகளை ஆழமாக விரிவாக எழுதப்பட்டது.

**நூல் கிடைக்குமிடம்:**

இந்துக் கல்லூரி விடுதி,

செட்டிக் குறிச்சி, பண்டத்தரிப்பு,

யாழ்ப்பாணம், இலங்கை.

# கதிர் காமம்

- திருமதி. கந்தசாமி

இந்து சமுத்திரத்தில் நித்திலத் துவீபம் எனச் சிறப்புப் பெயர் பெற்ற இலங்கைத் தீவில் கலியுக வரதன் முருகப் பெருமானின் தலங்கள் பல பண்டைக் காலம் தொடக்கம் சிறப்புற்று விளங்கு கின்றன. தமிழர் சிங்களவர் என்ற பேதமின்றி வணங்கப்படும் திருத்தலமாகும்.

இலங்கையின் தென்பாதியில் அடர்ந்த காட்டின் மத்தியில் தோன்றிய தலம் கதிர்காமம். மாணிக்க கங்கைக் கரையில் தோன்றி மூர்த்தி, தலம், தீர்த்தம், மூன்றாலும் பண்டைக் காலம் தொடக்கம் சிறப்புற்று விளங்குகின்றது.

இந்தியாவில் கல்யாண முனிவர் என்ற முனிவர் தியானத்தில் இருக்கும் பொழுது முருகனின் வேல் பளிச்சென்று தோன்றி மறையும். கனவிலும் மாணிக்க கங்கையும், வேலும் பலநாட்கள் தோன்றி மறைந்ததாக நூல்கள் மூலம் அறிகின்றோம். இறைவனின் தூண்டுதலால் கல்யாண முனிவர் இலங்கைக்கு வந்து மாணிக்க கங்கைக் கரையில் அமர்ந்து தவம் செய்தார். இரவும் பகலும் நிஷ்டையில் இருப்பார். உணவு உண்ண வேண்டும் என்ற சிந்தனை அற்று நிஷ்டையில் இருப்பார். வள்ளியம்மன் குறமாது வடிவில் பழங்கள் கொண்டு வந்து முனிவர் முன் வைத்து விட்டுச் செல்வார். முனிவர் எதையும் பொருட்படுத்தாது இறைவன்பால் மனதைச் செலுத்தி நிஷ்டையில் இருந்தார். இப்படிச் சில காலம் சென்றது. ஒருநாள் அவர் முன் ஓர் ஒளிப் பிழம்பு தோன்றியது. முனிவர் அதைப் பின் தொடர்ந்தார். தற்போது ஆலயம் உள்ள இடத்தில் ஒளிப்பிழம்பு மறைந்தது. முனிவர் அவ்விடத்தில் அமர்ந்து தியானம் செய்தார். ஓர் வேலை வைத்து வழிபட்டார். பின் தங்கத் தகட்டில் யந்திரம் செய்து வைத்து வழிபட்டார். அந்தத் தங்கத் தகடே பெட்டியில் வைத்து வீதி உலா நடை பெறுகின்றது.

எமது ஆலயங்களில் பூசையைத் தரிசிப்பது போல் கதிர் காமத்தில் அடியார்கள் தரிசிப்பது கற்பூர ஆரத்தி ஒன்றே. எந்நேரமும் மூலஸ் தான வாயில் திரைச்சீலையால் மூடப் பட்டிருக்கும். மூலஸ்தானத்தில் வேலே பிரதிஷ்டை செய்யப்பட்டுள் ளது என்று கூறுகின்றனர். ஆனால் அடியார்கள் எவரும் அவ் வேலைத் தரிசிக்க இயலாது. வாயி லில் திரைச் சீலை எந்நேரமும் தொங்க விடப் பட்டிருக்கும்.

கதிர்காமம் யாத்திரை செல்ல எல் லோருக்கும் வாய்ப்பதில்லை. பணம், தேகசுகம் இருந்தாலும் முருகன் அருள் கிடைத்தாற்தான் கைகூடும் என முன்னோர் கூறியுள்ளனர். கதிர் காமம் சென்றோர் அதிகாலை யில் எழுந்து மாணிக்க கங்கையில் ஸ்நா னம் செய்து ஈர வஸ்திரத்துடன் மலை ஏறுவர். 'அரோஹரா' ஒலி வானைப் பிளக்கும். மலையைத் தரிசித்து கீழே இறங்கி ஆலயத்தை அடைய ஆலய மணி ஒலிக்கும். மூலஸ்தானத்தில் பூஜை நடை பெறும். அர்ச்சகர் தாம் பாலத்தில் விபூதி இட்டு அதில் கர்ப் பூரம் வைத்துத் தீபம் ஏற்றுவார். பிறகு அதைத் திரைக்கு முன்னாற் கொண்டு வந்து நாலா பக்கமும் காட்டுவார். அடியார்கள் கர்ப்பூர ஆராத்தியை வணங்குவர். நேர்த்திக் கடன் செலுத் துபவர்கள் கற்பூரச் சட்டிகள் எடுப் பர். ஆண்கள் காவடி எடுப்பர். புஜத் திலும் சிறுசிறு வேல் குத்தியிருப்பர். வாயிலும் வேல் வைத்திருப்பர். பெண் கள் பாற் குடத்தைத் தலையில் வைத் துச் சுற்றி வருவார்கள்.

இத்தலத்தில் ஆடி மாதத்தில் கொடி ஏற்றித் திருவிழா நடை பெறும். மூலஸ்தானத்தில் வள்ளிக் கிழங்கில் முளை அரும்பியதும் கொடி ஏற்றப் படும் என அறிஞர் கூறுகின்றனர். மாணிக்க கங்கைத் தீர்த்தம் நோய்களைத் தீர்க்கும் சக்தி உள்ளது. நாம் அதைத் தூய்மையாக எடுத்து போத்தலில் அடைத்து வைத்ததால் என்றும் ஒரே தன்மையாகக் கெடாதிருக்கும். நாம் அதை மருந்து போற் பாவிப்போம்.

கதிர்காமக் கந்தன் மேற் பாடப் பெற்ற கதிரை மலை கவசம், திருப்புகழ் என்பவற்றை உள்ளன் புடன் நாள் தோறும் ஓதி முருகன் அருளைப் பெறலாம். திருப்புகழை ஓத ஓதக் கல்மனமும் உருகும். முருகனின் அருட்பாடல்களைத் தின மும் காலை, மாலை ஓதி அவன் அருள் பெறு வோம்.

*எதிரிலாத பத்தி தனை மேவி*
*இனிய தாணி னைப்பை யிரு போதும்*
*இதய வாரி திக்கு ளுறவாகி*
*எனதுளே சிறக்க அருள்வாயே*
*கதிர்காம வெற்றி லுறைவோனே*
*கனக மேரு யொத்த புயல் வீரா*
*மதுர வாணி யுற்ற குழலோனே*

*சரியையா ளர்க்குமக் கிரியையா ளர்க்குநற்*
*சகல யோகர்க்கு மெட் டரியதாய*
*சமயபே தத்தினுக் கணுகொணா மெய்ப் பெருட்*
*டளுபரா சத்தியிற் பரமான*
*துரியமே லற்புதப் பரமஞானத் தனிச்*
*சுடர்வியாபித்த நற் பதியீடு*
*துகளில் சாயுச்சியக் கதியையீ நற்ற சொற்*
*சுகசொருபத்தையுற் றடைவேனோ*
*புரிசைசூழ் செய்ப்பதிக் குரிய சாமத்தியசற்*
*புருஷ சீரத்துவிக் ரம சூரன்*
*புரளவேல் தொட்டகைக் குமரமேள் மைத்திருப்*
*புகழை போதற்கெனக் கருள்வோனே*
*கரியபூ கத்திரட் கனிகள் பீறிப்புசிர் தமராடிக்*
*கதலிசூ தத்தினிற் பயிலு மீழத்தினிற்*
*கதிர்காமக் கிரிப் பெருமாளே.*

■■■

## காற்றுவெளியில்...

**நீர்வளையங்கள்**
கவிதை
**சண்முகம் சிவலிங்கம்**

❖

**தேன்மலர்கள்**
கவிதைகள்
**கலைமகள் ஹிதயா**

❖

**சுனாமிப் பேரலையே**
கவியரங்கக் கவிதைகள் தொகுப்பு

❖

**அமுதகங்கை**
கவிதை, சிறுகதை
**வன்னியூர்க் கவிராயர்**

❖

**இசைக்குள் அடங்காத பாடல்கள்**
கவிதை
**முல்லை அமுதன்**

❖

**தார்மீகக் கோபங்கள்**
சிறுகதை
**கோப்பாய் சிவம்**

❖

**மரணத்துள் வாழ்வோம்**
கவிதை -தொகுப்பு

❖

தொடர்புக்கு :
**34 RED RIFFE RD**
**PLAISTON**
**LONDON E 13 XJX**

---

**கண்ணியம்**
சமூக கலை இலக்கிய திங்களிதழ்
அருள் அச்சகம்
பழைய எண் : பி 25, புதிய எண் : 30
கந்தசாமி சாலை, பெரியார் நகர்,
சென்னை 600 082, இந்தியா.

**ஏழைதாசன்**
திங்களிதழ்
ஆசிரியர் எஸ்.விஜயகுமார்
26, அடப்பன் வயல் 8ம் வீதி,
புதுக்கோட்டை - 622002,
தமிழ்நாடு, இந்தியா.

**இனிய நந்தவனம்**
மக்கள் மேம்பாட்டு இதழ்
8, வெள்ளாளர் தெரு, உறையூர்,
திருச்சி-620003, இந்தியா.

---

வர்ணஜாலம்

பூமியில் வறட்சி நிலைமை கண்டு
கதிரவனின் வருகைக்கு
எதிர்ப்புத் தெரிவித்து
வானம் கருப்புக் கொடி காட்டுகிறது
"கார்காலத்து கார்மேகங்கள்"

வானின் செயலுக்கு
நன்றி தெரிவித்து
பூமி பச்சைக் கொடி காட்டுகிறது
மழைத்துளி பட்டு
"துளிர் விடும் மரம் செடி கொடிகள்"

மழைத்துளி மட்டும் போதுமா?
தாவரங்களின் வளர்ச்சிக்கு கதிரவனிடமிருந்து
பச்சயம் வேண்டாமா?
மீண்டும் கதிரவனின்
வருகை வேண்டி
வானம் சமாதானக் கொடி காட்டுகிறது
"கோடை காலத்து வெண்மேகங்கள்".

- அ.செந்தில்குமார்.

## தாமரை இலையல்ல நாங்கள் தாமரையைச் சுமக்கும் குளங்கள்...

*- வண்ணை தெய்வம்.*

நண்பா! நான்
வாழத் தெரியாத கோழையா?
வாழ்க்கை என்றால் என்னவென்று
தெரிந்து கொள்ளாத காளையா?

கல்வி, காதல், பண்பு, பாசம்
எல்லாம் எனக்கும் தெரியும்!
எல்லாம் எனக்கும் புரியும்!
நானும் மனிதன்தான்
நானும் உன்னைப்போல மனிதன்தான்

இப்படிச் சொல்வதனால் எனக்கு
எல்லாம் தெரியும் என்று எண்ணிவிடாதே!
... நாங்கள்
எல்லோரும் இப்படித்தான் சொல்வோம்.!
எல்லாம் தெரியுமென்றுதான்
எல்லோரும் சொல்வோம்!
நம்புவதும் நம்பாததும் நீங்கள்? ஆம்
நம்பக்கூடியதை நம்பாததும்
நம்பக்கூடாததை நம்புவதும் நீங்கள்!

ஆனாலும் நாங்கள்
சொல்லிக்கொண்டுதான் இருப்போம்
எங்களுக்கு எல்லாம் தெரியுமெண்டு
சொல்லிக் கொண்டுதான் இருப்போம்!

தண்ணீர் தாமரையைச் சுமக்கின்றது -
தாமரையோ
தண்ணீரைச் சுமக்க மறுக்கின்றது!
தன்னைச் சுமந்த தாயை - அவளின்
கடைசி நாளிலும் சுமக்க முடியாத
தனயர்கள்!

எத்தனைபேர், எத்தனைபேர்? -நாம்
பிறந்த நாட்டிலும்! புலம்
பெயர்ந்த நாட்டிலும் இப்படியாய்
எத்தனை எத்தனை தனயர்கள்?

புலம் பெயர்ந்து வந்ததனால்
இவர்களால் முடியவில்லை?
புலரும் எம் மண்ணுக்காய்
உலர்ந்து போனதால்
அவர்களால் முடியவில்லை!

இவையெல்லாம் தெரிந்துகொண்டுதான்
நான் களத்தில் நிற்கின்றேன் நண்பா!
நான் வாழத் தெரியாத கோழையல்ல -
சாவு
இன்று வரலாம் என்று
தெரிந்து கொண்டும்
களத்தினிலே நிற்பதனால் நான்
வாழத்தெரியாதவன் என
எண்ணிவிடாதே?

நான் மண் மீட்புப் போரில் சாகின்றேன்
நான் வீரனாகச் சாகின்றேன் - ஆனாலும்
மா வீரனாக என்றும் வாழ்வேன்!

என்னைச் சுமந்த தாயை முடிவில்
சுமக்காமல் சாவதனால்
என்னை தாமரை இலையோடு
ஒப்பிட்டுவிடாதே நண்பா
நான் தாமரை இலையல்ல?
தாமரையைச் சுமக்கின்ற குளம்!

என் தாயைச் சுமந்த தாய் மண்ணை
மீட்பதற்காய்ப் போராடும் நான்
தண்ணீரை விரட்டும் தாமரை இலை
அல்ல?
தாமரையைச் சுமக்கும் தண்ணீரைப் போல
தாய் மண்ணைச் சுமக்கும் குளங்கள்
நாங்கள்
வாழத் தெரியாத கோழைகள் அல்ல.

## பூக்களின் வாசம்

காற்றில்
உடைந்து நொருங்கிய
சருகுகளாய்
காலத்தின் விரிசல்

மன ஆழத்தின்
அடிவரை
நீண்டு விரியும்

நேற்றின் முகங்களில்
கருமையும் சிவப்புமாய்
வாழ்வு சிதைந்த
சூட்சுமங்களின் தொடரல்...

வானத்தின்
உடைந்த இடுக்குகளிலிருந்து
நழுவியோடும்
மேகத் துண்டுகளாய்
வாழ்வு அழிந்து அழிந்து
சிதையும்.

பொறுக்கிய
என் நண்பர்களின்
நினைவுகளிலெல்லாம்
பூக்களின் வாசம்.

மலர்வளையம் சாத்திய
என் மனவாசல் முழுவதும்
நண்பர்களையும்
நல்ல மனிதர்களையும்
இழந்துபோன துயரம் மட்டும்
மிகுதியாய்...

- ரவிவர்மன்

